பக்கங்கள்: முப்பத்திரண்டு+IV=36

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 31 ஞாயிற்றுக்கிழமை (17.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 325

# உள்ளூராட்சி சட்டத்தின் விதி

# கிழக்கு மாகாண சபையின் கையில்!

## நாளை மறுதினம் விவாதத்துக்கு வருகிறது

கொழும்பு,ஒக்ரோபர்17

அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவர உத்தேசித்துள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான திருத்தச் சட்டத்தின் விதி, கிழக்கு மாகாண சபையின் கையில் தங்கியிருக்கும் நிலை உருவாகியுள்ளது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறும் கிழக்கு மாகாண சபையின் விசேட கூட்டத்தில் உத்தேச சட்டத் திருத்தம் விவாதிக்கப்படவுள்ளது.

அங்கு அது தோற்கடிக்கப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு செல்லமுடியாது. அரசாங்கத்தின் முயற்சிக்கு தோல்வி கிடைக்கும்.

நகரசபை, பிரதேச சபை ஆகியன இப்போது மாகாண சபைகளின் கண்காணிப்பிலேயே இயங்குகின்றன. புதிதாக உருவாக்கப்பட உள்ள கிராம சபைகளையும் மாகாண சபைகளின் கீழ் கொண்டுவருவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

அதன் பொருட்டு உள்ளூராட்சி சட்டத் திருத்தத்தின் மூலம் மறுசீரமைப்புகளை உள்ளடக்க அரசு முடிவு செய்துள்ளது.

அதனைச் செய்வதற்கு மாகாண சபைகள் இணக்கம் தெரிவிக்க வேண்டும். கிழக்கு மாகாண சபையில் திருத்தம் குறித்து ஏற்கனவே இது விடயம் விவாதிக்கப்பட்ட போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை.

கிழக்கு மாகாண சபையின் விசேட கூட்டம் ஒன்றை இன்னும் பத்து நாள்களுக்குள் நடத்தி உத்தேச சட்ட மூலத்தைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மாகாண சபையின் தவிசாளருக்கு அறிவித்துள்ளார்.

அதற்கு இணங்கவே கிழக்கு மாகாண சபையின் விசேட கூட்டத்தை நாளை மறுதினம் 19ஆம்

(31 ஆம் பக்கம் பார்க்க)

## வெளி மாவட்ட சேவைகளுக்கான தனியார் பஸ் நிலையம் பண்ணையில்

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் சேவையை நடத்தும் தனியார் பஸ்களுக்கான பஸ் நிலையம் நேற்று பண்ணையில் திறந்துவைக்கப்பட்டது.

சகல தனியார் பஸ்களும் நேற்று அந்த நிலையத்திலிருந்தே புறப்பட்டன. போக்குவரத்துச் சபையின் வெளிமாவட்ட் பஸ்களையும் இந்த நிலையத்துக்குச் சென்றே பயணத்தைத் தொடருமாறு மாநகர சபை நிர்வாகம் கோரியுள்ளது. ஆனால் அது தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்றிரவு வரை வெளியாகவில்லை.

பண்ணை பஸ் நிலையத்தை நேற்றுப் பிற்பகல் யாழ்.நகர

(31 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் கூட்டமைப்பினரும் சாட்சியம் அளிப்பர்

கொழும்பு,ஒக்.17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அடுத்த மாதம் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளிக்க விருக்கின்றனர்.

சாட்சியங்களில் தெரிவிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக கூட்டமைப்பினர் நேற்றுப் பிற்பகல் கூடி ஆராய்ந்தனர்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சாட்சியங்களில் இடம்பெற வேண்டிய விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

(31 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

சந்தியடிச் சோமு — பக்கம் 3

நல்லிணக்க ஆணைக்குழு கற்றுக் கொண்ட பாடங்கள் — பக்கம் 09

மெல்லத் தமிழினிச் சாகுமா? — பக்கம் 16

இனமோதலை ஏற்படுத்தும் நோக்கிலேயே சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்துக்கு — பக்கம் 19

சுகாதாரமா? சுத்தமா? அது என்ன விலை? — பக்கம் 23

அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் — பக்கம் 25

## கூட்டமைப்பின் தலைமை அலுவலகம் இன்று பம்பலப்பிட்டியில் திறப்பு

கொழும்பு,ஒக்.17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையக அலுவலகக் கட்டடம் இன்று காலை பம்பலப்பிட்டியில் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட விருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்கத் தொடங்கி பல வருடங்களான போதும் நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையில் இதுவரை காலமும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்களிலேயே கூட்டங்களை, சந்திப்புக்களை நடத்திவந்தது.

பம்பலப்பிட்டியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இன்று முதல் கூட்டமைப்பின் அலுவலகம் இயங்கவுள்ளது.

(31 ஆம் பக்கம் பார்க்க)

## 'ஏயர்ரெல்' நிறுவன யாழ்.அலுவலகம் நாளை காலை திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.17

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் தனது வலையமைப்பை பரப்பி, தொலைபேசிச் சேவையை வழங்கிவரும் 'ஏயர்ரெல்' நிறுவனம்

(31 ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கில் மீள்குடியேற்றம் அடுத்த வாரம் ஆரம்பமாகலாம்

### கனேடிய உதவித் தூதுவர் நம்பிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.17

வலி.வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கை அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என்று அரச தரப்பில் தம்மிடம் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான கனேடிய நாட்டின் உதவித் தூதுவர் ஃபிரட் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை யாழ்.நகரில் தனியர்ர் ஹொட்டல் ஒன்றில் இடம்பெற்ற கலந்துரையடலின்போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உதவித் தூதுவர் ஃபிரட் தலை மையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் சிந்தனைக் கூடப் பொறுப்பாளரும் பேராசிரியருமான என்.சிவசந்திரன், மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவி திருமதி சரோஜா சிவசந்திரன், சர்வதேச அபிவிருத்தி வர்த்தகத்தின் தலைவர் இந்திராணி

(31 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள

## மஹிந்த பங்குபற்றும் அபிவிருத்திக் கூட்டத்தில் அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட 800 பேர்

யாழ்ப்பாணம்,ஒக்.17

வடமாகாண அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.30 மணியளவில் வவுனியா கூட்டுப்படைத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மீளாய்வுக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொள்கின்றனர் என்று வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.என். சார்ள்ஸ் நேற்று 'உதயனுக்குத்' தெரிவித்தார். இது தொடர்பாக

(31 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டில் சிங்களக் குடியேற்ற முஸ்தீபுகளை அரசு தடுக்கவேண்டும்!
நிலைமையை விபரீதமாக்கிவிடாதீர்கள்
என்கிறார் சரவணபவன் எம்.பி.
விரிவான அறிக்கை 2ஆம் பக்கத்தில்

## அரியாலையில் நேற்று விபத்தில் சிக்கிய 'உதயன்' நிறுவனப் பணியாளர் பலி!



யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணம், அரியாலை, நெடுங்குளம் பகுதியில் ஏ-9 பாதையில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் 'உதயன்' வெளிவாரி விநியோகப் பிரிவைச் சேர்ந்த பணியாளர் மரணமானார்.

யாழ்ப்பாணம், வெள்ளாந்தெருவைச் சேர்ந்த பாலச்சந்திரன் ஜெயபாலன் (வயது 32) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

'உதயன்' பத்திரிகையை (31ஆம் பக்கம் பார்க்க)

சதவீதம் வரையில்
ஆகக்குறைந்த வட்டி!

உங்கள் அவசரப் பணத்தேவைகளின் போது, 1 சதவீதம்* வரையில் ஆகக்குறைந்த வட்டி வீதத்தில், பவுனுக்கு அதிகூடிய பெறுமதியை வழங்கும் லிஸ்வின் அடகுச்சேவை மூலம், உங்கள் குறுங்கால பணத்தேவையை இன்றே நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

LISVIN
LISVIN INVESTMENTS LIMITED

லிஸ்வின் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடட், இல. 56/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0777 997998 Web: www.lisvin.com | E-mail: lisvin@lisvin.com

குத்தகை | வாடகைக் கொள்வனவு | கடன் | விலைப் பட்டியலிடுதல் | அடகு

அங்கீகாரம் பெற்ற விசேடமான நிதிக் குத்தகை நிறுவனம். 2000 ஆம் ஆண்டு 56ம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. *நிபந்தனைகள் உள்ளடங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டில் தங்களைக் குடியமர்த்துமாறு கோருவது சிங்களக் குடியேற்றத்துக்கான திட்டமிட்ட ஒரு நாடகமே!

## அரசு இதனைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்கிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம்,ஒக்.17

குடாநாட்டில் மீளக்குடியமரப் போவதாக வந்துள்ள சிங்களக்குடும்பங்கள் தாங்கள் முன்பிருந்த காணிகளைக் கோராமல் அரச காணிகளில் குடியமர்த்துமாறு கோருவது சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்த நடத்தப்படும் நாடகமாகும்.

தமிழ் மக்களுக்கு விரோதமாக முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைகள், நாட்டின் சகல தேசிய இனங்களும் ஐக்கியப்பட்டு தேசத்தின் அபிவிருத்திக்குப் பங்களிக்கும் நிலைமையை சீர்குலைத்து இனங்களுக்கிடையில் கசப்புணர்வையும் மோதலையும் ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

எனவே இந்த நடவடிக்கைகளைத் தடுத்துநிறுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர சிங்களக் குடும்பங்கள் வருகை செய்துள்ளமை தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

அண்மையில் தென்னிலங்கையிலிருந்து எவ்வித முன்னறிவித்தலுமோ உத்தியோக பூர்வ அனுமதியோ இன்றி வந்து யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக் குடியேறும் நோக்குடன் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் தங்கியுள்ள 500 சிங்களக் குடும்பங்கள் இங்கு பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளன. மேலும் இவர்கள் தாங்கள் 1983ஆம் ஆண்டுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் குடியிருந்ததாகவும் இப்போது தாங்கள் இருந்த வீடுகளில் வேறு நபர்கள் குடியிருப்பதால் அவற்றைத் தாம் கோரவில்லையெனவும் தம்மை அரச காணிகளில் குடியேற்றவேண்டும் எனவும் இது தொடர்பாகத் தங்களுக்கு ஒரு சாதகமான முடிவுவரும்வரை அவ்விடத்தை விட்டு வெளியேறப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தாங்கள் முன்பிருந்த காணிகளைக் கோராமல் இருப்பதும் அரச காணிகளில் தங்களைப் புதிததாகக் குடியிருத்த வேண்டும் என கேட்பதும் மீள்குடியேற்றம் என்ற பொய்மையில் நிழலில் ஒரு சிங்களக் குடியேற்றத்தை யாழ்.குடாநாட்டுக்குள் ஏற்படுத்த நடத்தப்படும் ஒரு நாடகம் எனவே கருதவேண்டியுள்ளது.

இதுபற்றி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கருத்து வெளியிடுகையில் அவர்களில் ஒரு சிலர் முன்பு இங்கு வாழ்ந்த உண்மை தானென்றாலும் அவர்களுக்கு இங்கு சொந்தக்காணிகளோ வீடுகளோ இல்லையெனவும் இவர்களை இங்கு குடியேற்ற எவ்வித சட்ட திட்டமும் இல்லையெனவும் இவர்களை மீளகுடியேற்றுவது சாத்தியமில்லை எனவும் தெரிவித்துள்ளார். உடனடியாகவே இது தொடர்பாகக் கருத்துவெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க யாழ்.குடாநாட்டில் முன்னர் வசித்த இந்தக் குடும்பங்கள் அங்கு குடியேறச் சகல உதவி ஒத்தாசைகளை வழங்கவேண்டும் எனவும் அதற்கான உதவி ஒத்தாசைகளை விரைந்து எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான வண.ஓமல்பே சோபித தேரர் வடக்கு கிழக்கிலிருந்து போர் காரணமாக இடம்பெயர்ந்தவர்களில் இவர்களும் ஒரு பகுதியினர் எனவும் இது தொடர்பாகதான் மீள்குடியேற்ற அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததாகவும் அவர் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்போவதாகவும் கூறியுள்ளார்.

இவர்களின் கூற்றுக்கள் இங்கு வந்த மக்கள் தாங்களாகவே மீள்குடியேறும் நோக்குடன் இங்கு வந்தார்களா அல்லது யாழ். குடாநாட்டில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கும் நோக்குடன் சிங்களக் கடும்போக்காளர்களால் திட்டமிட்டு அனுப்பிவைக்கப்பட்டவர்களா என்ற கேள்வியை எழுப்புகின்றன.

கிளிநொச்சியில் மரணமடைந்த போர் வீரர்களின் நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், வடபகுதி சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்த இடமெனவும் இந்திய தமிழ் மன்னர்களின் படையெடுப்பு காரணமாக பௌத்த விகாரைகள் அழிக்கப்பட்டு அவ்விடங்களில் இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டன எனவும் அவ்விடங்களில் மீண்டும் பௌத்த விகாரைகள் அமைக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டமையை நாம் மறந்துவிடமுடியாது.

இக்கூற்றிலிருந்து இலங்கை முழுவதும் சிங்களவருக்கே சொந்தம் என்ற இவரது இனவெறிச் சித்தாந்தத்தை நாம் புரிந்து கொள்ளமுடியும். இந்த சிந்தாந்தத்தை நடைமுறைப்படுத்துவதின் ஒரு கட்டமே மீள்குடியேற்றம் என்ற போர்வையில் மேற் கொள்ள விளையும் இந்தச் சிங்களக் குடியேற்றமாகும்.

1983ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் பேக்கரிகள், உணவுக்கடைகள் வைத்துக்கொண்டும் அரச சேவைகளில் சிற்றூழியர்களாகவும் சிறு அளவிலான சிங்கள மக்கள் இங்கு இருந்தார்கள் என்பது உண்மைதான். அவர்கள் தங்கள் தொழில் நிமித்தம் வசித்தார்களேயன்றி இங்கு நிரந்தரமாகக் குடியிருக்கவில்லை, சொந்தக் காணிகளோ வீடுகளோ இருக்க வில்லை. அவர்கள் இங்கு உழைத்து தென்னிலங்கையிலுள்ள தங்கள் ஊர்களுக்கே கொண்டு சென்றனர். அவர்கள் இங்கு நிரந்தரமாகக் குடியிருந்தவர்கள் எனவும் அவர்களின் பூர்வீக சொந்த இடம் யாழ்ப்பாணம் என்றும் கொள்ளமுடியுமா?

1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளுக்கு முன்னைய காலகட்டங்களில் தென்னிலங்கையின் பெருநகரங்கள் முதற்கொண்டு சிறு கிராமங்கள் வரை வடக்கிலிருந்து சென்ற வரத்தக நிறுவனங்கள், பெரும் அரிசி ஆலைகள், உணவுச்சாலைகள், தென்னந்தோட்டங்கள் என தமிழர்கள் பலவிதமான தொழில்களை மேற்கொண்டனர். மேற்படி ஆண்டுகளில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் காரணமாக அவர்கள் வடக்குக்கு விரட்டியடிக்கப்பட்டனர். அவர்களில் ஏராளமானோர் பின்பு தென்னிலங்கைக்குத் திரும்பவில்லை. அவர்களுக்கு தென்னிலங்கையில் காணிகளை வழங்கவேண்டும் அவர்கள் அங்கு குடியேற அனுமதிக்கப்படவேண்டும் என்று திஸ்ஸ அத்தநாயக்காவும் வண. சோபித தேரரும் குரலெழுப்புவார்களா?

### தமிழருக்கு ஒரு நீதி சிங்களவருக்கு ஒரு நீதியா?

1983இல் இங்கு தொழில்செய்ய வந்து திரும்பிப்போன சிங்களவர்கள் இங்கு வந்து குடியேறுவது சரியென்றால், தென்னிலங்கையில் தொழில்செய்து இனக்கலவரங்கள் காரணமாக விரட்டப்பட்ட தமிழர் அங்கு மீண்டும் செய்று குடியேறுவதில் என்ன தவறு இருக்கமுடியும்? இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு ஒரு நீதி சிங்களவர்களுக்கு ஒரு நீதி என்று இலங்கையின் அரசியலமைப்பு சட்டம் பரிந்துரைக்கிறதா?

மக்கள் படும் துன்பத்தைத் தாங்கமுடியாத துறவறம் பூண்ட புத்தபெருமானின் பேரால் தன்னை துறவியாக நிலைநிறுத்திக் கொண்ட வண.சோபித தேரர் அரசியலுக்குள் புகுந்தது மட்டுமன்றி ஓர் இனத்தையே துன்பங்களுக்கும் அழிவுக்கும் வகையில் செயற்படுவதைப் புனிதமான புத்ததர்மம் ஏற்றுக்கொள்கிறதா?

இதை நாம் 500 பேர்கொண்ட ஒரு மக்கள் கூட்டத்தின் தன்னிச்சையான நடவடிக்கை எனப் பார்க்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தைத் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழும் ஒரு நிலப்பகுதியைக் குறைத்து நாடு முழுவதையுமே சிங்கள மயப்படுத்தும் ஒரு நீண்ட திட்டத்தின் ஒரு பகுதியாகவே கருதுகிறோம்.

இன்று இராணுவக் குடியிருப்புகள் என்ற பேரில் சிங்களக் குடியேற்றங்களைப் பெருந்தொகையில் நிறுவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிழக்கின் பல இடங்களில் முன்பு சிங்கள மக்கள் இருந்ததாகக் கூறப்படும் இடங்களில் இப்போது முன்பு இருந்த தொகையை விடப் பலமடங்கு குடும்பங்கள் கொண்டுவந்து குடியேற்றப்படுகின்றன. மீன்பிடிக் கிராமங்கள் என்ற பேரில் பல தமிழ்க் கிராமங்களின் கடற்கரைப் பகுதிகள் சிங்களக் குடியிருப்புகளால் நிரப்பப்படுகின்றன. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் பேரால் மணலாற்றிலுள்ள சிங்களக் குடியேற்றங்கள் நாயாறுவரை விஸ்தரிக்கப்படவுள்ளன.

#### இராணுவ முகாமுக்கு அருகில் விகாரைகள்

அதுமட்டுமன்றி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவ முகாம்களுக்கு அண்மையில் உள்ள இடங்களில் எல்லாம் புத்த விகாரைகள் நிறுவப்படுகின்றன. தொல் பொருள் ஆராய்ச்சி என்ற பேரில் தமிழ்மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்கள் புனித ஸ்தலங்கள் பௌத்த சின்னங்களாக நிறுவும் நோக்கில் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. அதேவேளையில் இந்து மத ஆலயங்களின் புனிதம் கெடும் வகையிலும் இந்து மக்கள் அவமானப்படுத்தப் படும் விதமாகவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

பல ஆண்டுகளாக வன்னி மண்ணின் பிரதான ஆலயமாக விளங்கிவந்த முறிகண்டி ஆலய எல்லைக்குள்ளேயே ஒரு பெரும் சுற்றுலா விடுதி அமைக்கப்படுகிறது. கிளிநொச்சியின் காவல் தெய்வமாக விளங்கும் இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோயில் தேரோடும் வீதியின் ஒரு பகுதி முட்கம்பி வேலியிடப்பட்டு ஒரு படைமுகாம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறே இன்று அரசயந்திரத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இத்தகைய சம்பவங்கள் தமிழ்ப் பிரதேசங்களை சிங்களமயப் படுத்தும் நோக்குடனும் தமிழ்மக்களின் தேசிய தனித்து வத்தை இல்லாமல் செய்யும் இலக்குடனேயுமே மேற்கொள்ளப்படுகின்றன

யாழ்ப்பாண மண்ணுக்கு எவ்விதத்திலும் சொந்தம் கொண்டா உரிமையற்றவர்களை அங்கு குடியேற்றத் துரித நடவடிக்கை எடுக்கும்படி கோரும் திஸ்ஸ அத்தநாயக்காவும் சோபித தேரரும் தமது சொந்த மண்ணிலிருந்து ஏறக்குறைய 20 வருடங்களுக்கு முன் வெளியேற்றப்பட்ட மக்களை ஒருமுறை திரும்பிப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

#### இது என்ன நியாயம்?

வலிகாமம் வடக்கு, தீவுப்பகுதி, மூதூர் கிழக்கு போன்ற பகுதிகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்கள் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை. போரின் போது வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் இன்னும் சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்கப்படவில்லை. மீள்குடியேற்றப்பட்டவர்கள் கூட எவ்வித அடிப்படை வசதியுமின்றி? கூடாரங்களில் பற்றைகளுக்கு நடுவேயே வாழும் நிலைமை நிலவுகிறது. வெளிநாடுகள், அரசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் கூட மக்களிடம் சரியான முறையில் சென்றடைவதில்லை.

ஒட்டுமொத்தத்தில் தமிழ்மக்களின் இயல்பு வாழ்வு பற்றியோ, நில உரிமை பற்றியோ தேசிய தனித்துவம் பற்றியோ அவரும் அக்கறைப்படுவதில்லை. மாறாக அவர்களை வறுமையிலும், நோயிலும் தள்ளி துன்பங்களுக்குள் அமுக்கி அவமானப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளே மேற் கொள்ளப்படுகின்றன.

அதேவேளையில் இத்தகைய தமிழ்மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்காமல் மறைமுக ஆதரவு வழங்கும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் தமிழ்க்கட்சிகள் தங்கள் வழிகளைத் திறக்கவேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறோம்.

எப்படியிருந்த போதிலும் இப்படியான தமிழ்மக்கள் விரோத நடவடிக்கைகள் இந்நாட்டின் சகல தேசிய இனங்களும் ஐக்கியப்பட்டு தேசத்தின் அபிவிருத்திக்குப் பங்களிக்கும் நிலைமையைச் சீர்குலைத்து இனங்களுக்கிடையேயான கசப்புணர்வையும் மோதலையும் ஏற்படுத்தவே வழிவகுக்கும். எனவே இப்படியான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுள்ளது. (ஒ-ஐ)

# சிறுபான்மை இனத்தவர்கள் உரிமைகளைப் பெற சிங்கள மக்களும் ஒத்துழைக்கவேண்டும்

## ஆய்வறிவாளர் சங்கக் கலந்துரையாடலில் கருத்து

யாழ்ப்பாணம்,ஒக்.17

சிறுபான்மை இன மக்கள் ஜனநாயக ரீதியான உரிமைகளைப் பெற்றால்தான் சிங்கள மக்களும் ஜனநாயக உரிமைகளுடன் வாழ முடியும். எனவே சிறுபான்மை இன மக்கள் உரிமைகளைப் பெறுவதற்கு சிங்கள மக்களும் ஒத்துழைக்கவேண்டும் என்று லண்டனைச் சேர்ந்த சட்ட ஆலோசகர் சி.ராகவன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஆய்வறிவாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ''யாழ்ப்பாணம் வந்துள்ள சிங்கள மக்களின் வாழ்வு'' தொடர்பான கலந்துரையாடல் நேற்று நாவலர் கலாசார மண்பத்தில் இடம்பெற்றது. அதில் வளவாளராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார் ராகவன்.

அங்கு உரை நிகழ்த்தும்போது அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள சிங்கள குடும்பங்கள் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் இங்குள்ள மக்களிடையே இருக்கலாம். இதனை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் தன்மையும் காணப்படுகிறது. இதற்கு கடந்த காலத்தில் இடம்பெற்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக இருக்கலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் சிங்கள, முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததற்கான வரலாறு உள்ளது. அப்போது இனப்பிரச்சினை இருக்கவில்லை. மதப்பிரச்சினையே இருந்தது. ஜனநாயக நாட்டில் எந்த மக்களும் எங்கும் வாழலாம். அதற்கான உரிமை உள்ளது. சுய கௌரவத்துடன் இன ஐக்கியமாக வாழவேண்டும். சிங்கள மக்களுக்கு இங்கு நிலம் இருந்தால் அவர்கள் மீளக் குடியமர நாம் அனுசரணை வழங்க வேண்டும்.

இந்த அரசு நாட்டிலுள்ள எல்லா மக்களையும் ஒரே மாதிரிப் பார்கிறது என்று நான் கூறவரவில்லை. ஆனால் இந்த விவகாரத்தை இனவாதமாக்கிப் பூதாகாரமாக்க முயலக்கூடாது.

சிங்கள மக்களின் மீள் குடியமர்வு என்று தற்போது எழுந்துள்ள பிரச்சினை ஆழமானது; சிக்கலானது. ஆனால் அதனை இனவாதக் கண்ணாடியூடாக நோக்கக்கூடாது என்றார்.

இங்கு கலந்துகொண்டவர்கள் அநேகர் கருத்து தெரிவிக்கும்போது குறிபிட்டவை வருமாறு:-

* சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததுக்கு அடையாளம் தேடிப் பிடிக்க வேண்டும் எனக்கூறுவது மடைமைத் தனமானது. வரலாறு தெரியாத இளம் அரசியல் வாதிகள் மற்றும் சிலரது அனுபவமில்லாத கூற்று இது.
* கடந்த காலத்தில் இலங்கை அரசு மேற்கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் காரணமாக நாம் அஞ்ச வேண்டியுள்ளது. தமிழ் மக்கள் காணிகளு டனும், அதற்கான உறுதிகளுடனும் காத் திருக்க அவர்களை மீளக் குடியமர அனுமதிக்கவில்லை இந்த அரசு. ஆனால் காணிகளோ, உறுதிகளோ எதுவுமின்றி இங்கு வந்துள்ள சிங்கள மக்களை அரசு மீளக் குடியமர்த்த அவசரப்படுவது நியாயமற்றது.
* முஸ்லிம் மக்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் இதுவரை இங்கு செய்து தரப்படவில்லை. சிங்கள மக்கள் யாழ்ப்பாணம் வந்து 13 நாள்கள் ஆகின்றன. அதற்குள் அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தனர். (ஒ-14)

# ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.17

ஆரியகுளம் புதிய உயர் கல்லூரி மாணவர் ஒன்றியம் நடத்தும் வாணி விழாவும் ஆசிரியர் தின விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி அளவில் கல்லூரி மண்டபத்தில் மாணவர் ஒன்றியத் தலைவர் சிவ.உமாசுதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ஆசிரியர் கௌரவிப்பு, சக்தி வழிபாடு எனும் தலைப்பில் கவிஞர் சோ.பத்மநாதனின் ஆன்மீகச் சொற்பொழிவும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ- 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெற்குச் சகோதரர்களுக்கு ஒரு

# பகிரங்க மடல்

மீள்குடியேறும் நோக்கில் யாழ் வந்துள்ள சிங்களச் சகோதரர்களுக்கு! வணக்கம்! உங்கள் ஊரிலிருந்து யாழ் வரும் போது 'யாழ்ப்பாணம்' உங்களை வரவேற்கிறது என்னும் எத்தனையோ விளம்பரப் பதாகைகளைக் கடந்துதான் வந்திருப்பீர்கள். ஆகவே நான் பிரத்தியேக வரவேற்பு கூறத் தேவையில்லை; வரவேற்பு கூறும் மனநிலையிலுமில்லை. அதற்குக் காரணம், நீங்கள் சுற்றுலா நோக்கில் யாழ். வரவில்லை. குடியிருப்பு ஒன்றை அமைப்பது என்ற எண்ணத்துடன் வந்திருக்கிறீர்கள்!

யாழ்ப்பாணத்தில் முன்பு சிங்கள மக்கள் வாழ்ந்தார்கள் என்பது மறைக்க முடியாத, மறுக்கக்கூடாத உண்மை! பிட்டும் தேங்காய்ப்பூவும் போல இல்லாவிட்டாலும் பொங்கலில் கச்சான் போல ஐதாகவேணும் வாழ்ந்த இவர்கள், பின்னர் வெளியேற நேர்ந்ததும் உண்மை!

பல்வேறு காரணங்களினால் யாழை உங்கள் தற்காலிக வதிவிடமாக கொண்டிருந்த நீங்கள் நிரந்தரக் காணி, வீடு என்பவற்றைக் கொண்டிருக்கவில்லை. இருந்தாலும் அப்போதைய நிலையில் நீங்கள் பெற்ற ஆவணங்களுக்கு யாழ். விலாசமே கிடைத்திருக்கும். ஆனால் அதையே உங்களின் பலம் வாய்ந்த ஆயுதமாகக் கருதி - உங்களில் சிலர் - 'நாங்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள். யாழிலிருந்து இடம் பெயர்ந்து தெற்கில் வசித்துக் கஷ்டப்பட்டோம். இப்போது எங்களை அரச காணிகளில் (மீள) குடியேற்றம் செய்யுங்கள்' என உடும்புப்பிடியாக கோருவது எங்ஙனம் நியாயம்?

ஏதோ சிறியளவிலேனும் சிவில் நிர்வாக நடவடிக்கைகள் சரியாகி, இப்பொழுதுதான் வடக்கு வழமைக்கு திரும்புவதாக கூறப்படுகிறது. அது இன்னும் ஒன்றும் 1980 இற்கு முன்னுள்ள நிலையை அடையவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் எனும் போர்வையிலும் கண்ணிவெடி அபாயம் என்னும் பெயரிலும் தமிழரின் பூர்வீகப் பிரதேசங்கள் - அவர்கள் புரண்டு, உருண்டு, தவழ்ந்து திளைத்த, உழைத்துப் பிழைத்த பிரதேசங்கள் - காடு மண்டிப் போய் கிடக்க... அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தாம் நிரந்தர அகதிகளா அல்லது தற்காலிக அகதிகளா என வினா எழுப்பிக் கொண்டிருக்கையில்... அரச காணிகளில் நிரந்தரக் குடியேற்றம் செய்து தருமாறுகோரி - நீங்கள் வந்திருக்கிறீர்கள்!

> நீங்கள் இங்கே வாழ்ந்தீர்கள் எனக் குறிப்பிடுவது போன்றே எம்மின சகோதரர்களும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, அநுராதபுரம் எனப் பல இடங்களில் 1980க்கு முன்பான காலப்பகுதியில் குடியிருந்தார்கள். ஆனால் இன்று அவர்கள் அவ்விடத்தில் இல்லை; விரட்டப்பட்டு விட்டார்கள். அவர்களின் காணிகள் இப்போது உங்கள் 'பாணி'யில் நாங்கள் போய்க் கேட்டால்...? பொன்சேகாவுக்கு நடைபெறுவதுதான் ஞாபகத்திற்கு வருகிறது.



யாழ். ரயில் நிலையத்தில் சமையல் மும்முரத்தில் இருக்கும் சிங்களப் பெண்கள்.

அண்மையில்தான் வசாவிளான் மகா வித்தியாலயம் பெரிய விழா எடுத்து அதன் கட்டடங்களுக்கு திரும்பியிருக்கிறது. அதுவும் 23ஆண்டுகளுக்கு பிறகு ... இன்னும் எத்தனையோ தமிழர் 30 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 10ஆண்டுகளாக தமது வளங்கொழிக்கும் பூமியை பறிகொடுத்து அந்த இடம் தமக்கு கிடையாவிட்டாலும் பரவாயில்லை தமது பிள்ளைகளுக்காவது கிடைக்க வேண்டுமென, காடாய்போய்க்கிடக்கும் தம் மூரின் காவற்தெய்வங்களுக்கு பிரார்த்தனை வைத்து விட்டுக் காத்திருக்க... நீங்களோ யாழின் சிவில் நிர்வாகத்திற்கு சங்கடத்தை ஏற்படுத்தும் வகையில், 'சுடுகுது மடியைப் பிடி' என்று திடு திடுப்பென வந்து சேர்ந்திருக்கிறீர்கள்!

நீங்கள் இங்கே வாழ்ந்தீர்கள் எனக் குறிப்பிடுவது போன்றே எம்மின சகோதரர்களும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, அநுராதபுரம் எனப் பல இடங்களில்1980 இற்கு முன்பான காலப்பகுதியில் குடி யிருந்தார்கள். ஆனால் இன்று அவர்கள் அவ்விடத்தில் இல்லை; விரட்டப்பட்டு விட்டார்கள். அவர்களின் காணிகள் இப்போது உங்கள் சகோதரர்கள் - சிங்கள வசம்! உங்கள் 'பாணி'யில் நாங்கள் போய்க் கேட்டால்...?

பொன்சேகாவிற்கு நடைபெறுவது தான் ஞாபகத்திற்கு வருகிறது!

இது இவ்வாறிருக்க, நீங்கள் வந்திருக்கும் விதம் ஊடகங்களில் உங்களைப் பற்றிய அல்லது நீங்கள் விடும் அறிக்கைகள் மற்றும் பழைய அனுபவங்கள் என்பவற்றோடு பார்க்கும் போது, இதனை 'நன்கு திட்டமிட்ட' ஒன்றாகவே என்னால் கருத முடிகிறது.

அத்துடன் உங்கள் கோரிக்கை மீது பெருத்த சந்தேகத்தையும் அது ஏற்படுத்தியிருக்கிறது!

(இதனை நீங்கள் 'சந்தேகக் கண்' என நோக்குவது தவறு; ' கற்றுக் கொண்ட பாடம்' என்பதே சரி) 'நீ அடிக்கிறமாதிரி அடி நான் அழுகிற மாதிரி அழுகிறேன்' என்பது போல தோன்றுகிறது. நீங்கள் அம்பு; உங்களை எய்தவர் எந்த அரசியல்வாதி என எண்ணத் தோன்றுகிறது.

உங்கள் கோரிக்கை நியாயபூர்வமானது எனில், உங்கள் இருப்பிடங்களில் ( அதாவது மிகிந்தலை, மாத்தளை, அநுராதபுரம், குருநாகல்) இருந்து கொண்டே உங்களுக்குள் பிரதிநிதிகளை தெரிவு செய்து யாழ் அரச அதிபரிடமோ, மீள்குடியேற்ற அமைச்சரிடமோ அனுப்பி அதன் சாதக பாதகங்களை பற்றி ஆலோசித்து ஆராய்ந்திருக்கலாமே...? இப்படி ஒரு 'செயற்கை அகதிகள் தொல்லையை' ஏற்படுத்தியிருக்க தேவையில்லையே...! ஏற்கெனவே டெங்கு ஒழிப்பு, வன்னி, வலி.வடக்கு மீளக்குடியமர்வு போன்ற விடயங்களில் 'பிஸி'யாக உள்ள யாழ். சிவில் நிர்வாகத்திற்கு இடைஞ்சல் தர தேவையில்லையே! உங்கள் பிள்ளைகளின் பொன்னான இந்தப் பாடசாலை நாள்களை வீணடித்திருக்கத் தேவையில்லையே! யாழ். மண்ணின் மைந்தர்கள் என சொல்லிக்கொள்ளும் உங்களின் இந்த செயற்பாடு, அதே மண்ணின் மைந்தனான எனக்கு பெருந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது! யாழ். மைந்தர்களின் இலட்சணமா இது?

உங்களை 'போ' என்று சொல்ல, நான் வளர்ந்து வந்த கலாசாரம் தடுக்கிறது 'குடியிரு' என்று சொல்ல முன் அனுபவங்கள் குறுக்கிடுகிறது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வெறுமனே 2002இல் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் ஏன் உடைந்து என்பதை [illegible]

(04ஆம் பக்கம் பார்க்க)



## சந்தியடிச் சோமு

வன்னிக்குப் போய் வாறது இப்ப சரியான சுகமெண்டு என்ர பக்கத்து வீட்டுக்காரன் சொன்னான். நான் இடம்பெயர்ந்து இருக்கேக்க அடைக்கலம் தந்து பாதுகாத்த வீட்டுக்காரப் பிள்ளையள் இப்ப எப்பிடி இருக்குதுகள் எண்டு பாத்து சுகம் கேட்டுக்கொண்டு வருவம் எண்டு போனன்.

பஸ்ஸால இறங்கி திருநகர் பக்கமாக நடந்து போனன். ஊர் தலைகீழா மாறிப் போய்க் கிடக்கு. விளம்பரப் பலகைகள் நீண்டு நிமிந்து கிடக்கு. எங்கட உயிர் காத்த மரங்களில எல்லாம் ஆணி அடிச்சு விளம்பரங்களக் கொளுவி இருக்கிறாங்கள்.

சனத்தின்ர மனவேதனைகளையும் அழிவுகளையும் விளம்பரப் பலகைகளால மறைக்கப் பாக்கிறாங்கள் எண்டு நினைச்சு பெருமூச்செறிஞ்சபடியே நடந்து போனன். சயிக்கிலில என்னைக் கடந்து போன பொடிசுகள் சிலது ''சோமண்ண'' எண்டுகொண்டு அவசரமா தாண்டிப் போச்சுதுகள். பிறகுதான் தெரிஞ்சுது ஏதோ பதியிறத்துக்கெண்டுதான் அவ்வளவு அவசரமாக ஓடினவங்களாம் எண்டு.

இந்தப் பதியிறதில இருந்தும் கியூவில நிக்கிறதில இருந்தும் எப்பத்தான் தமிழனுக்கு விடிவு வரும் எண்டு தெரியாமக் கிடக்கு. வரும் வரும் எண்டு ஏங்கி ஏங்கியே என்ர காலம் முடியப் போகுது. மனிசரை அலைக்கழிக்கிறதில இவங்களுக்கு என்ன சந்தோஷமெண்டு தெரியேல்லை.

கொளுத்திற வெயிலுக்கால நடந்து ஒருமாதிரி நான் முன்னமிருந்த வீட்டைக் கண்டுபிடிச்சு போய்ச் சேர்ந்தன். அங்க, எட்டுத் தடி போட்ட ஒரு தரப்பாளுக்க அதுகளப் பாக்க வயிறு பத்திக் கொண்டு எரியுது. முன்னம் அந்த இடத்தில இருந்தது விசாலமான கல்வீடு. சுத்திவர மா மரங்களும் தென்னையளுமா சோலையாக் கிடந்த இடம். அந்தக் குளிர்மையில ஏசியும் தேவையில்ல ஒண்டும் தேவையில்ல.

என்னைக் கண்டதும் ''சோமு மாமா'' எண்டு பிள்ளையள் எல்லாம் ஓடி வந்திட்டுதுகள். தண்ணி வாங்கிக் குடிச்சிட்டு கொஞ்சம் ஆற அமர இருந்து கதைச்சன். அவள் பிள்ளையின்ர புருஷன் முன்னம் புலியில இருந்தவன். பெரிய ஆளாத்தான் இருந்தவன்... முள்ளிவாய்கால் எல்லாம் முடிஞ்சு உள்ளுக்க வரேக்க மனிசி பிள்ளையளுக்கு முன்னால வைச்சுப் பிடிச்சவங்களாம். அதுக்குப் பிறகு என்ன நடந்ததெண்டு தெரியாது. அவள் பிள்ளை குங்குமப்பொட்டோட அவனத் தேடாத இடம்இல்லை.

''அவரத் தடுப்பில வச்சிருப்பாங்கள். ஆனாக் காட்டுறாங்கள் இல்லை'' எண்டு அழுதாள். கேட்டால் ஒரு பதிலும் சொல்லுறாங்களும் இல்லையாம் எண்டு கண்கலங்கினாள். அவள் சொன்னதில கவனிக்க வேண்டிய விசயங்கள் நிறய இருந்தாலும் என்ர குறுக்குப் புத்தி அதுக்குள்ள ஒண்டக் கவனிச்சுது. எங்கட வாழ்க்கையில ஒவ்வொரு காலத்தில ஒவ்வொரு சொல்லுகள் புதுப்புது அர்த்தங்களோட புளக்கத்துக்கு வந்திடுது; ''மண்டையில போடுறது'', ''பொட்டு வைப்பாங்கள்'', ''மண்டையன் குழு'', ''தோழர்'' எண்ட மாதிரி. இப்ப அப்பிடிப் புளக்கத்துக்கு வந்திருக்கிற புதுச் சொல்லுத் தான் ''தடுப்பு''. சரியோ பிழையோ இந்த ஒவ்வொரு சொல்லுகளும் தமிழ்ச் சொல்லுகள்தான் எண்டாலும் அதுகளிண்ட அர்த்தம் படு பயங்கரமானது பாருங்கோ. அனுபவிச்சவைக்கு நல்லாத் தெரியும்.

''இப்பத்தான் ஆணைக்குழு விசாரணை எண்டொண்டு வன்னியில நடந்ததெல்லோ அதில உன்ர பிரச்சினையைச் சொல்லேலையோ?'' – எண்டு இவள் பிள்ளையிட்ட நான் கேட்டேன்.

அவள் சொன்னாள், சாட்சி சொல்லுறத்துக்கு உள்ளுக்க போறத்துக்கே பெரிய பாடாப் போச்சாம் எண்டு. ''ஏன் போறாய்? என்னத்துக்குப் போறாய்? யாரப்பற்றிச் சொல்லப் போறாய்?'' எண்டு ஒரே கெடுபிடியாம். அதயும் விட இன்ரலிஜன்ட்காரரும் சிவிலில அதுக்கையும் இதுக்கையுமா நிண்டவையாம்.

இவ்வளவுக்குள்ளாலையும் போய் மனசத் திறந்து பிரச்சினையள என்ணெண்டு சொல்லுறது எண்டு கேக்கிறாள் பிள்ளை. உள்ளுக்க போனாலும் ஆணைக்குழுக்காரர் ''புலி என்ன செய்திது? புலி என்ன செய்திது? எண்டு புலியப் பற்றிக் கேட்டிச்சினமே ஒழிய எங்களுக்கு என்ன நடந்துது எண்டு கேப்பாரில்லை'' எண்டிறாள் பிள்ளை. ''அங்க போய் என்னத்தைச் சொல்லுறது? சொல்லித்தான் என்ன பிரியோசனம்? வாயை மூடிக் கொண்டு இருக்கிறதுதான் இருக்கிற உயிருகளையாவது பாதுகாக்கிறத்துக்கான வழி. அதுதான் வாய்க்குப் பூட்டுப் போட்டுக்கொண்டு கிடக்கிறம்'' எண்டுகினம் மற்றவையும்.

''எல்லாருக்கும் கடிதங்கள் குடுத்துக் குடுத்துக் களைச்சுப் போனம். அதில குடுக்கிற தொடர்பு நம்பருகள வைச்சு தெரியாத ஆக்களெள்லாம் நேரங்கெட்ட நேரத்தில கோல் எடுத்து கண்டதுகளையும் கதைக்கிறாங்கள்'' எண்டு இவள் பிள்ளை குண்டத் தூக்கிப் போட்டாள்.

அவளுக்கு இப்பிடி அடிக்கடி போன் எடுத்த ஒருத்தர், ''உங்கட புருஷன் உயிரோடதான் இருக்கிறார். அவரை அடுத்த மாதம் விடுவிக்கலாம். விட்டாப்பிறகு நீங்கள் ஒருத்தரும் இங்க இருக்கக் கூடாது; உடன வெளிநாட்டுக்குப் போயிடவேணும்''– எண்டு இவள் பிள்ளையிட்ட சொன்னவராம்.

பிள்ளையின்ர புருஷனோட வேறயும் நாலு பேரையும் விடுவிக்கப் போகினம் எண்டும் அவயின்ர குடும்பங்களோடயும் கதைச்சு மூண்டு கோடி ரூபா தந்தால் எல்லாம் உடன நடக்கும் எண்டும் அந்த ஆள் போன கிழமை சொன்னவராம். ''நாங்கள் கஷ்டப்பட்டாக்கள். எங்களிட்ட அவ்வளவு காசில்லை'' எண்டு பிள்ளை சொல்ல, ''அப்ப ஒரு ரெண்டரைக் கோடி எண்டாலும் ரெடி பண்ணுங்கோ'' எண்டு அந்தாள் இறங்கி வந்திச்சுதாம்.

இவள் பிள்ளை அதுக்குப் ''பாப்பம்'' எண்டு சொல்லிப் போட்டு விட்டுட்டாளாம். ''இப்ப கொஞ்சத்துக்கு முன்னால, நீங்கள் வாறத்துக்குச் சொட்டு முன்னம்தான் போன் எடுத்து, கடைசி 25 லட்சம் எண்டாலும் உடன குடுங்கோ ஆக்கள விடுவிச்சுத்தாறம்'' எண்டு அந்தாள் சொன்னவராம் எண்டாள் பிள்ளை. எரியிற வீட்டில புடுங்கினது லாபம் எண்ட மாதிரி, எங்கட கஷ்டங்களோட எப்பிடி எல்லாம் விளையாடுறாங்கள் பாருங்கோ!

மௌனமா இருந்து எல்லாத்தையும் கேட்டுப்போட்டு ''நம்பிக்கையைக் கைவிடாத; மூண்டும் பொம்பிளப் பிள்ளையள்; அதுகளின்ட எதிர்காலம் முக்கியம்'' – எண்டு சொல்லிப் போட்டு வந்தன்.

பஸ்ஸப் பாத்துக் கொண்டு பஸ்டான்டில நிண்ட நேரத்தில, அங்கயும் இதப்பற்றித்தான் கதை. 'தடுப்பில' இருக்கிறவய விடுவிக்கிறம் எண்டு சொல்லி லட்சங்கள் சுருடப்பட்டதப் பற்றிக் கன கதைகள். இந்த மொபைல் போன் அதுக்குத்தான் நல்லா பயன்படுதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க வீஸா லொத்தர்

மணமுடிக்காதவர் விண்ணப்பிக்க. GCE O/L (பூரண சித்தி) தேவை, (*conditions apply)
1. அமெரிக்க வீஸாவிற்கென ஸ்ருடியோவில் எடுத்த கலர் படம் ஒன்றுடன் ஆங்கிலத்தில்: 2. FULL NAME, 3. DATE OF BIRTH, 4.PLACE OF BIRTH, ADDRESS, PHONE, EMAIL (தேவைப்படின் செய்து தரப்படும்)
BBS Netting, A/C 7244197 Bank of Ceylon வங்கியில் பணம் இட்ட ரசீது. அல்லது மணிஓடர் Director, BBS Netting, Dehiwala Post office ல் பெறுவதற்கு.
கட்டணம் 475/- (Closing Date 03/11/2010)
30/10/2010 முன் கிடைக்கும் வண்ணம் தபாலில் அனுப்பவும்.
Director, BBS Netting, 3/14, PINWATTA ROAD, DEHIWALA.

அமெரிக்க வீஸாவை லொத்தர் மூலம் பெற்றுச் செல்லவிருப்பவர்களுக்கு! அதிமுக்கிய விபரங்களுடன் ஆங்கிலப் புத்தகம் ஒன்று எம்மிடமுண்டு.
Call 0775811106 WWW.BBSNETTING.COM


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஐயாத்துரை கந்தலிங்கம்**

தோற்றம்: 22.04.1949
மறைவு : 23.10.2004
*திதி: விஜயதசமி*
*(17.10.2010)*

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்- எமக்கெல்லாம்
ஒளியூட்டிய ஆருயிர் அப்பா!
ஆறாண்டுகள் ஓடி மறைந்தாலும்
என்றும் உங்கள் நினைவுடனே நாங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குப்பிளான் தெற்கு,
ஏழாலை.
குடும்பத்தினர்.
(சி/571987)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் அலுவலக பணியாளர் சேவையில் கடமையாற்றும் சி. யோகேஸ்வரன் அவர்களின் தாயார்

**அமரர் சிவானந்தம் அன்னம்மா**

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
வலி. கிழக்கு பிரதேச செயலகம்,கோப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி

*யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் செல்வி ஐ.பத்மாவதி அவர்களின் அன்புத் தந்தை*

**க.ஐயாத்தம்பி**

*அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

தாதிய உத்தியோகத்தர்,
நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.
(104776)

## மரண அறிவித்தல்கள்

### *சிவானந்தம் அன்னம்மா (இருபாலை)*

அரசடி, இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தம் அன்னம்மா நேற்று (16.10.2010) சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலர் சிவானந்தம் அவர்களின் அன்பு மனைவியும் சிவபாதம் (இந்தியா), சிவனடி (கட்டுவன்), சிவனேசன் (சங்கானை, ஓய்வூதியர், வருமானவரி திணைக்களம், யாழ்ப்பாணம்), யோகேஸ்வரன் (இருபாலை), திருமதி சிவபாதசுந்தரம் பத்மாவதி (இருபாலை), செல்வநாயகம் புவனேஸ்வரி (வட்டுக்கோட்டை), சுப்பிரமணியம் திலகவதி (கொழும்பு), தியாகராசா மகேஸ்வரி (சங்கானை) ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி,
கோப்பாய்.
(சி-571989)

தகவல்:
சி.லோகேஸ்வரன்
(பிரதேச செயலகம், கோப்பாய்)

### *கந்தையா சோமசுந்தரம்*



ஆனந்த வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சோமசுந்தரம் நேற்று(16.10.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் திலகவதி ஆகியோரின் சகோதரனும், சறோஜினி,சசிகரன்,யசோதரன், திவாகரன், நிமலன்(டோகா), தயான்(டோகா), பிரதீபன் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (16.10.2010) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்த வீதி,
மானிப்பாய்.
(104784)

தகவல்:
குடும்பத்தினர்.


## விற்பனைக்கு

புதிய G.I, PAINTED, SCAFFOLDING, PROPS,JACKS,CATWALK,CLAMPS, SAFETY ITEMS FOR SALE.
சுப்பமாக்கட் பொருட்களை சேமித்து வைக்கும் RACKS CANADA வில் இருந்து தருவிக்கப்பட்டவை
ACCESSORIES & EQUIPMENT
விசேட ஆடர்கள் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப இறக்குமதி செய்து தரப்படும்
**CONTACT MR. RAJ**
**0777 568373**

## பதவி வெற்றிடம்

யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் நேரக்கணிப்பாளர் கடமைக்கு வெற்றிடம் உள்ளது.க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.பருத்தித்துறை, அச்சுவேலி, கோப்பாய், மானிப்பாய் ஆகிய இடங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வயதெல்லை 20-35 வரை

T.P.021 222 6924
10/2,கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
யாழ்.மாவட்ட தனியார் பஸ்
உரிமையாளர் சங்கங்களின்
தலைமைச் செயலகம்.

## தேவை

வயோதிபப் பெண்ணை பராமரிக்கவும் சமையல் வேலைக்கும் பெண் தேவை.
தொடர்பு : 0783017387,
0776277332

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ் நகரில் இருந்து 3 km தூரத்தில் யாழ். பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு கோயில் வீதியில் 4 பரப்புக் காணியில் தனி வீடு, நன்னீர் தனிக் கிணறு மற்றும் இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0783251872

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள உந்துருளி NP JS---- (PRESS CUP -50, JAPAN MOTOR CYCLE) தொடரிலக்கம் விற்பனைக்குண்டு.
தொடர்புகொள்க:-021 226 4793 (சி/571972)

## விற்பனைக்கு

Boxer மோட்டார் சைக்கிள், கொங்கிறீட் கல்லறுக்கும் மெஷின், ஜூகி தையல் மெஷின், லூவர்ஸ் அச்சு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776017257

## கடை வாடகைக்கு

யாழ்.பஸ் நிலையத்தை அண்டிய பகுதியில் 480×2 சதுர அடி முதலாவது, 2 ஆவது மாடிக்கட்டடம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு :-0776043794

## MD 90 விற்பனைக்கு

யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ,பதிவு செய்யப்படாத புதிய MD 90 மோட்டார் சைக்கிள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-0777111373
0777175050

## பண்சிற்றி - பண்டத்தரிப்பு

விஜயதசமி தினமான இன்று சகல கணனி வகுப்புகளும் பி.ப. 2 மணிக்கும், புதிய பிரிவுகள் விசேட சலுகையுடனும் ஆரம்பமாகும்.
நிர்வாகம்.

## வீடு விற்பனைக்கு

பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில் 2 பரப்பு காணியில் 3 அறைகள், 2 ஹோல், சமையல் அறை, சாப்பாட்டு அறை, குளியல் அறை என்பவற்றுடன் அமைந்த வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0775016848

## காணி விற்பனைக்குண்டு

47, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகொள்ள வேண்டியது :
அ.மரியதாசன் - 0711407779
ச.கண்ணன் - 0772555375

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No 1 புறொயிலர் குஞ்சுகள் விநியோகம் செய்யப்படும். முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
[illegible]
[illegible] வீதி, [illegible] 0777238573


## தெற்கு சகோதரர்களுக்கு.....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் வேர்விட்டது என்பதை ஆராய்ந்தால்... உங்கள் முன்னோர்களால் எங்கள் முன்னோர்களுக்கு இழைக்கப்பட்ட இதைப் போன்ற சம்பவங்களும் ஒரு காரணம் எனலாம்.

உங்கள் சகோதரனாக நான் உங்களிடம் விநயமாக வேண்டுவது என்ன என்றால், தயவு செய்து உங்கள் முடிவை மீள்பரிசீலனை செய்யுங்கள்! யாழ் அரச அதிபரின் கூற்றுப்படி, உங்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் கஷ்டங்கள் நிலவுகின்றன. அது உடனடியாக சாத்தியமுமில்லை. நீங்கள் கோருவதாக குறிப்பிட்டிருக்கும்அரச காணிகள் எவையும் யாழில் கிடையாதென ஆளும் தரப்பின் நா.உறுப்பினரான மு.சந்திரகுமார் குறிப்பிட்டிருக்கிறார். யாழ் அரச அதிபரும் மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோவும் உங்கள் யாழ்.வருகை தொடர்பில் முன்னறிவித்தல் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என தெரிவித்திருப்பதிலிருந்து நீங்கள் நாடியது குறுக்கு வழியோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கிட்டத்தட்ட 1990 - 2000 ஆண்டு காலப்பகுதியில் - யாழ்ப்பாணத்திற்கு மீளத்திரும்புவது சாத்தியமற்ற ஒன்று என கருதிய வேளையில் - தெற்கில் காலூன்ற எத்தனித்தீருப்பீர்கள். சில வேளை காலூன்றியிருப்பீர்கள். அத்தகைய இடங்களில் உங்கள் மீளக்குடியமர்வை செய்ய முயலுங்கள். உங்கள் ஆவணங்களை, அந்த பிரதேசத்திற்கு தகுந்தவாறு மாற்றி - நீங்கள் எதிர் கொண்டதாக கூறும் தொந்தரவை தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்களில் பல வகையான தொழில் செய்யக்கூடியவர்கள் வந்துள்ளதாக அறிகிறேன். யாழின் தொழிற்சந்தையை விட தெற்கு, தொழில் வாய்ப்புகளுக்கு சிறந்த இடமென கருதுகிறேன். அவற்றுக்கு முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் உங்களில் இருப்பதாக குறிப்பிடும் 'மண்பாசம்' - அதை ஞாபகத்தில் வைத்து யாழிற்கு சுற்றுலாவாக வாருங்கள். தரமான, மலிவான பொருள்களை யாழிற்கு எடுத்து வந்து விற்பனை செய்யுங்கள். உங்களின் இங்குள்ள தமிழ் நண்பர்களின் சுகதுக்கங்களில் பங்கு பெறுங்கள். அவர்களை வெசாக் பண்டிகை காலத்தில் அழைத்து விருந்தளியுங்கள். அங்கே - தெற்கில் - எங்கள் விருந்தோம்பல் பண்பை - யாழைப் பற்றி மோசமாக சிந்தனை பண்ணுபவர்களிடம் எடுத்தியம்புங்கள்.

இவ்வாறு - பழத்தை ஒத்த - இனிய வழிகள் மண்பற்றுடன் வாழ்வதற்கு இருக்க, அதை விடுத்து உங்கள் பிடிவாதமே பெரிது - நகரமாட்டோம் - (தீக்குளிப்போம், தற்கொலை செய்வோம் என மிரட்டினாலும் மிரட்டுவீர்கள்) - உறுதிமொழி பெறாமல் விடுவதில்லை என குடியேறுவீர்களாயின்... அதன் தொடர் எவ்வாறு அமையுமென்றால்...

இன்று நீங்கள் வருவீர்கள்.

நாளை பஷில் தலைமையில் செயலணி ஒன்று உங்களுக்கு அமைக்கப்படும்! அரசமரம் ஒன்றை நட்டுவைக்க அத்துரலிய ரத்தின தேரர் வருவார்! சம்பிக்க ரணவக்க வந்து மின்சார வசதி ஏற்படுத்தி விட்டு உங்களிடம் உள்ள டெங்கு பிரச்சினை தொடர்பில் மேர்வின் சில்வாவிற்கு உளறி வைக்க...

அவர் தனது படை பட்டாளங்களுடன் இங்கு வந்து யாழ் தமிழ் ஊழியர் ஒருவரை மரத்தில் கட்டிவைக்க முயலுவார்... 'உங்கள் பகுதிக்கு டெங்கு ஒழிப்பில் அசமந்தம் காட்டினார்' என சாட்டுக் காட்டுவார்

விகாரை ஒன்று விஸ்தீரண பரப்பில் கட்டப்படும்

உங்கள் குடியிருப்பிற்கு அண்மித்து காணப்பட்ட பாரம்பரிய இந்துக் கோவிலின் அஸ்திவாரத்திற்கு அருகில் அரச மரமொன்று சுயமாக முளை கொள்ளும்

அதன் வளர்ச்சிக்கு, இந்துக்கோவில் தடையாக இருக்கிறதென கருதி 'ஒரே இரவில்' அக்கோவில் அகற்றப்படும்

மலக்கிடங்கிற்காகவோ மண் அள்ளுவதற்காகவோ நீங்கள் தோண்டிய குழியிலிருந்து புதுமை (?) கலையாத இரு புத்தர் சிலைகள் - சொல்லி வைத்தாற் போல் - கண்டெடுக்கப்படும்.

அவற்றை ஆராய்ந்தால்........?

அது - நீங்கள் வாழுமிடம் - புத்தருக்கு முற்பட்ட(?) காலத்திலிருந்தே சிங்களவர்கள் அந்த இடத்தில் வாழ்ந்த வரலாற்றை சொல்லும். 'புர' என்றோ 'கம' என்றோ விகுதி பெறும் பெயரில் உங்கள் குடியிருப்பு பெயரிடப்படும்.

அந்த வேளையிலும் யாழ்.தினசரி ஒன்றை தட்டிப்பார்த்தால், வலி.வடக்கு மீள் - குடியமர்வு தொடர்பில் ஆராய அமைச்சர் யாழ் வருவதாக செய்தி தலைப்பிலிருக்கும்...!

மேலே நான் சொன்னது, தமிழர் பட்ட காயத்தழும்பை தடவிப் பார்த்து அதற்கு எனது கற்பனையை சேர்த்து எழுதியதே தவிர இது ஒன்றும் - 'இல்லாதது - பொல்லாதது' வகையை சேர்ந்தது அல்ல!

உண்மையிலேயே நான் மேலே கவிவடிவில் கூறியவாறு நிகழுமென்றால், நலிவடைந்து தேறும் நமது நாடு, கடந்த காலத்தைப் போலவே, மீள நரகத்தில் வீழவும் வழி சமைக்கலாம் அல்லவா?

உங்கள் மீள்குடியேற்ற திட்டத்தை மீள்பரிசீலனை செய்யவும் - மீள உங்கள் ஊருக்கு திரும்புவதற்கான மனநிலையையும் இந்த மடல் ஏற்படுத்தியிருக்குமென நம்புகிறேன்!

இக்கடிதத்திற்கு மறுமடல் இருக்குமாயின், அதனையும் உதயனூடாக எதிர்பார்க்கிறேன்.

நன்றி
தங்களில் அன்புள்ள,
ஸடோ ஸ்வாமி

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை சாந்தினி குகநேசன் அவர்களின் அன்புத் தாயார்

**பரமேஸ்வரி சந்திரசேகரம்**

அவர்களின் ஆத்மசாந்தி நிகழ்வுகள் நாளை (18.10.2010) திங்கட்கிழமை நடைபெறும்.இந்த நிகழ்வில் பூங்குபற்றும் உற்றார், உறவினருடன் நாமும்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-571991) யா/வட மராட்சி மத்திய மகளிர் கல்லூரிச் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அடிக்கடி மேடையேற்றப்படும் இந்த அரசியல் நாடகம் பாரீர்!

* இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வினை வழங்குவதற்கு இதுவே சரியான தருணம். அதற்கான நடவடிக்கையினை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.
* முகாம்களில் தொடர்ந்தும் தங்கியுள்ள மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், எமது நாட்டின் ஜனாதிபதியிடம் இவ்வாறு வலியுறுத்தி உள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

புதுடில்லியில் நடைபெற்ற, பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார். அதன்போது இரு தலைவர்களும் வழமைபோல் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தமது சந்திப்பின் போது ஜனாதிபதி மஹிந்தவுக்குத் தெரிவித்தவையாகும்.

நேற்றுமுன்தினம் 15ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின் போது, தமிழ்மக்களுக்கு சுத்தமான, நியாயமான(Genuine) அதிகாரப் பகிர்வு வழங்கப்படவேண்டும் என்று மன்மோகன், மஹிந்தவிடம் வலியுறுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இனப்பிரச்சினை குறித்து, இருநாட்டுத் தலைவர்களும் சந்தித்து இதற்கு முன்னரும் பேச்சு நடத்தியது உண்டு. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜூன் மாதம் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்ட போதும் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டிய தன் அவசியத்தை இந்தியப் பிரதமர் வலியுறுத்தி இருந்தார்.

இதேவேளை, இந்திய வெளிநாட்டமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுக்கும், இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஜி. எல்.பிரிஸுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது, தாம் புறந்தள்ளப்படுகிறார்கள் என்று சிறுபான்மையினர் உணர்ந்திடாதிருக்கும் விதத்தில் இலங்கை அரசின் தீர்வு முயற்சிகள் அமையவேண்டும் என்று இந்திய அமைச்சர் வலியுறுத்தினார். தமிழர்களின் விவகாரம் போதிய அளவில் கவனத்தில் எடுக்கப்படவேண்டும்; அதற்கான தருணம் இப்போது கிடைத்துள்ளது என்பதையும் அவர் அமைச்சர் பீரிஸிடம் எடுத்து விளக்கியதாகவும் தகவல்கள் உண்டு.

இவற்றுக்குப் பதிலளித்த எமது வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் -

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துக் கலந்துரையாடுவதற்கு, கருத்தறிவதற்குப் பரந்த மட்டத்தில், வெவ்வேறு வகையான யோசனைகளை முன்வைப்பவர்களுக்கு இடமளிக்க விரும்புகிறோம் என்று இந்தியாவிடம் தெரிவித்தோம். தமிழ் - முஸ்லிம் மக்கள் மட்டத்தில் கருத்து ஒற்றுமையை உருவாக்குவதற்கு அதுவே ஒரே ஒரு சிறந்த மார்க்கம் என்று - எடுத்தியம்பி உள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற வசனம், வாசகம் இந்திய, இலங்கைத் தலைவர்களுக்குப் பொழுது போக்குச் சரக்காக மாறி இருப்பதையே இப்போது காண முடிகிறது.

இவ்வருடம் ஜூன் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது - ஐந்து மாதங்களுக்கு முன் நடைபெற்ற பேச்சுக்களின்போது -

அரசரமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு இசைவாக, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுத் தீர்வு ஒன்று வகுக்கப்படவேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்திய வேளை -

பதின்மூன்றாவது திருத்தத்தை உள்ளடக்கிய தீர்வைக் காண்பதே தமது இலக்கு என்றும், அதன் பொருட்டு சிறுபான்மை இனத்தவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பித் திருப்பதாகப் பதிலளித்துவிட்டுக் கொழும்பு வந்து சேர்ந்தார் ஜனாதிபதி மஹிந்த.

ஆனால், அதனை நாடிய குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் செயலளவில் இடம்பெறவில்லை. இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்னர் இந்த விடயத்தில் தாம் அக்கறை காட்டுகிறார் என்பதற்கான வேடம் பூண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேசினார். அத்தோடு எல்லாம் சரி...!

இடைப்பட்ட நான்கரை மாதங்களில் தீர்வுக்கான எந்த வகை நாட்டமும் இல்லை. அரசமைப்புச் சட்டங்களை இயற்றுவது ''நூடில்ஸ்'' தயாரிப்பது போன்று இலகுவானதல்ல. அரசமைப்புச் சட்டங்களை இயற்றுவதும் சரி, திருத்தம் செய்வதும் சரி, ஆற அமர சிந்தித்து ஆலோசனைகள் நடத்தி ஆற்றவேண்டிய பணி என்று கூறி, இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தை கிணற்றில் போட்டுவிட்டது இலங்கை அரசு.

அதுவும் போதாது என்று, 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ், மற்றும் பொது நிர்வாக அதிகாரங்களை நீக்கும் சட்டத்தை நாடாளு மன்றத்தில் அரசு நிறைவேற்றிவிட்டது.

அதிகாரப் பகிர்வுக்கு, நேர் எதிரான - பாதகமான நடவடிக்கை இது.

இந்த இலட்சணத்தில் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இலங்கை அரசாங்கம் இதய சுத்தியுடன் செயற்படும் என்ற நம்பிக்கை தகர்ந்து கொண்டிருக்கிறது.

இவை எல்லாம் இந்தியாவுக்குத் தெரியாதவையும் அல்ல; புரியாதவையும் அல்ல.

நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன் நீ அழுவது போல் அழு என்ற பேச்சு வழக்குமொழியை மன்மோகன் சிங்கும் மஹிந்தவும் சேர்ந்து சில சில மாத இடைவெளியில் ஒரே நாடகத்தை மேடை ஏற்றுகின்றனர்.

இந்த நாடகம் எண்ணுக் கணக்கற்ற காலத்துக்கு நீடிக்கப்போகிறது. அவ்வளவுதான். இனப்பிரச்சினைத் தீர்வில் ஓர் அங்குலமாவது முன்னேற்றகரமாக நடைபெறமாட்டாது. காலத்தைப் போக்கி, தான் நினைத்த தீர்வைத் திணிப்பதற்கு இன்னும் ஆறு வருடங்கள் போதிய கால அவகாசம் இலங்கை அரசுக்கு உண்டு.

அதுவரையும் இப்போதைய நாடகம் அடிக்கடி மேடையேற்றப்படும்... அவ்வளவுதான்! இந்த நாடகத்தைத் தொடர்ந்து பார்க்கவேண்டிய அபாக்கியம் எங்கள் தமிழ்மக்களுக்கு.

# வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் தற்போது ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சை

## நோயாளர்களின் துயரங்களுக்கு தீர்வு என்கிறார் வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணம்,ஒக்.17

வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளின் ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சை மூலம் புற்றுநோயாளர்கள் அனுபவித்து வந்த துன்பங்களுக்கு ஓரளவு தீர்வுகாணப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்திய நிபுணர் என்.ஜெயகுமாரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணத்தில் புற்றுநோயாளர்களின் சிகிச்சைக்காக பல வசதிகள் தற்போது நடைமுறையில் உள்ளன. இவர்களுக்கான மருத்துவ ரீதியான சிகிச்சை யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள விடுதி இலக்கம் 26இல் வழங்கப்படுகின்றது. கதிர்வீச்சு சிகிச்சை தெல்லிப்பழை கதிர்வீச்சு சிகிச்சை நிலையத்தில் நடைபெறுகின்றது. சிகிச்சை முடிவுற்ற புற்றுநோயாளர்களுக்கான கிளினிக்குகள் யாழ். போதனா வைத்தியசாலையில் வாரம் தோறும் வெள்ளி, சனிக் கிழமைகளிலும் மற்றும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் முதலாவது புதன் கிழமையிலும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரண்டாவது புதன்கிழமையிலும் சங்கானை, காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் நாலாவது புதன்கிழமையிலும் நடைபெறுகின்றன.

அத்துடன் இரண்டாவது செவ்வாய்க்கிழமையில் வவுனியா வைத்தியசாலையும், மூன்றாது செவ்வாய் கிழமையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையிலும் இவை கிரமமாக நடைறெுகின்றன.

இவை அனைத்தும் ஒரு புற்றுநோய் வைத்திய நிபுணரினாலும் ஒன்பது வைத்திய அதிகாரிகளாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

புற்றுநோயாளருக்கு காய்ச்சல், வீதி விபத்து, நெஞ்சுவலி, தலைசுற்று ஏற்படுமிடத்து அவர்கள் புற்றுநோய் விடுதியில் நேரடியாக அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் வெளிநோயாளர் பிரிவில் உள்ள வைத்திய அதிகாரியின் மூலமாக எந்த விடுதியில் சேர்க்கப்பட வேண்டும் என் பது தீர்மானிக்கப்படும்.

இவ்வாறாக வடமாகாணத்தில் உள்ள ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சை மூலமாக 2004 ஆம் ஆண்டுக்கு முன்னர் புற்றுநோயாளர் அனுபவித்த சொல்லொணா துயரங்கள் நீக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. - என்றார்.

## நவாலியில் இன்று சிறுவர் சங்கமம் நிகழ்வு

மானிப்பாய்,ஒக்.17

நவாலி சிறுவர் சங்கமம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நவலி ஹேமலதா சிறுவர் நிதியத்தில் இடம்பெறும்.

தொடர்ந்து சிறுவர்களின் நவராத்திரி பூசையும் நடைபெறும்.(ற-302)

## அரிச்சுவடி ஏடுகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.17

விஜயதசமியான இன்று ஏடு தொடக்கவுள்ள ஆலயங்கள், பாடசாலைகள், சைவ நிறுவனங்கள் அரிச்சுவடி ஏடுகளை யாழ். நகரின் காங்கேசந்துறை வீதியில் உள்ள மில்க்வைற்தொழிலகத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று அதன் உரிமையாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# சம்பளம் 2 லட்சத்தை எட்ட வேண்டும்; இல்லையேல் போராட்டம் தான் ஒரே வழி

## அரச மருத்துவர் சங்கம் அறிவிப்பு

சுகாதார அமைச்சின் சம்பள அளவுத் திட்டத்துடன் ஒப்பிடும் போது மருத்துவர்கள் பெறுகின்ற சம்பள இடைவெளியில் பெரும் வித்தியாசம் காணப்படுகின்றது. எனினும் ஏனைய் நாடுகளில் மேற்படி சம்பள இடைவெளியில் சிறு அளவிலான வித்தியாசமே நிலவுகின்றது. எனவே குறைந்த பட்சமாக ஏனைய நாடுகளில் நிலவும் 1:20 என்ற சம்பள இடைவெளியை அண்மிக்கும் விதத்தில் தமது மாதாந்தச் சம்பளம் இரண்டு லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டுமென இலங்கை அரச மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசு அவ்விதமான அணுகு முறையொன்றை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் தீவிரமான தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் மருத்துவர் சங்கம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அரச மருத்துவர் சங்கம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆரம்ப காலத்தில் சம்பள இடைவெளி திருப்தியுறும் விதமாக காணப்பட்டது.எனினும் 2006ஆம் ஆண்டின் சம்பளச் சுற்று நிருபத்தின் மூலம் இலங்கையில் அது வரையில் நிலவிய 1:12 என்ற சம்பள இடைவெளி இல்லாதொழிக்கப்பட்டு அது 1:4 என்ற கீழ்மட்டம் வரையில் பயணித்துள்ளது.

இந்த நிலைப்பாடு காரணமாக பெருமளவிலான இலங்கை மருத்துவர்கள் அரச சேவையிலிருந்தும் வெளியேறியதோடு, அவர்களுள் சில தரப்பினர் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனர். எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தினூடாக நாம் கோரும் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு அரசு தவறுமானால் அதற்கு எதிராக தீவிரமான தொழிற்சங்க நட்வடிக்கையொன்றை இலங்கை அரச மருத்துவர் சங்கம் நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவுள்ளது - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-22)

# அடுத்தமாதம் அம்பாந்தோட்டைத் துறைமுகத் திறப்பு விழா; கப்பல் சேவையை நடத்த 5 நிறுவனங்கள் இணக்கம்

கொழும்பு,ஒக்.17

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத் திறப்பு விழாவின் போது, வர்த்தகக் கப்பல் சேவையை ஆரம்பிக்க ஐந்து பிரபல கப்பல் நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக துறைமுக அதிகாரசபையின் தலைவர் கலாநிதி பிரியத் பந்து விக்கிரம தெரிவித்துள்ளார்.

அத்தோடு மேற்படி திறப்பு விழாவின் போது, வழமையாகச் சரக்குகள், வாகனங்கள் என்பவற்றை ஏற்றி வரும் கப்பல்கள் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கே வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தகச் செயற்பாடுகளுக்காகத் துறைமுகம் திறந்து விடப்படும் சுப வேளையில் இரண்டு பிரபல கப்பல் நிறுவனங்களுக்குச் சொந்தமான இரு கப்பல்கள் முதலில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் பிரவேசிக்கவுள்ளன. இந்தத் துறைமுகத்தில் பொருள்களைக் களஞ்சியப்படுத்தும் குதங்கள் மற்றும் ஏனைய களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்கான வாய்ப்புக்கள் தனியார்துறை முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-3)

# புதிய முயற்சிகளை ஆரம்பிக்க உகந்த நன்னாள் விஜயதசமி

இன்று(17-10-2010) ஞாயிற்றுக்கிழமை விஜயதசமி விரத நாளாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது

நவராத்திரி விழா என்ற சொல்லில் விரதம் அனுட்டித்தல் என்றால் சித்தத்தை ஒன்றுசேர்த்தல் என்னும் பொருளைத் தருகின்றது. நவராத்திரி விரதம் என்பது ஒன்பது இரவுகளில் சக்தியின் மேல் சித்தத்தை ஒருமுகப் படுத்தி நிற்றல் எனப் பொருள்படும். புரட்டாதி மாதத்தில் அமாவாசையை அடுத்துவரும் ஒன்பது இரவுகளே நவராத்திரி ஆகும். இவ்வொன்பது இரவுகளையும் இந்துமத மக்கள் சிறப்பு நாள்களாகவும் புண்ணிய தினங்களாகவும் கொண்டாடுகின்றனர். நவராத்திரியிலுள்ள அட்டமி, நவமி ஆகியவை மகா அட்டமி, மகா நவமி என்று பொருள் பெறுகிறது. இவ் விழா இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.இந்தியாவில் இவ்விரதம் வடக்கே காஷ்மீரத்திலும் தெற்கே கன்னியாகுமரியிலும் கொண்டாடப்படுகிறது. இவ்விரதத்தை இந்துக்கள் மட்டுமல்லாமல் சைவர், வைஷ்ணவர், காணபத்திரர், சௌரர் முதலிய எல்லோரும் கொண்டாடுகிறார்கள்.

இறைவனை அன்னையாக வழிபடுதலே சக்தி வழிபாடு ஆகும். ஆதி பராசக்தியை வீரம் தரும் துர்க்கை என்றும், செல்வம் தரும் இலக்குமி என்றும், கல்வி தரும் சரஸ்வதி என்றும் மூன்று சக்திகளாக மும்மூன்று இரவுகள் போற்றுவதே நவராத்திரி தினம் ஆகும். பத்தாம் நாள் விஜயதசமி நாள் ஆகும். இதை மானம்பூ என்றும் கூறுவார்கள். இது மகா நோன்பு என்றும் கூறப்படும். மகிடன் என்ற அசுரனால் வருந்திய மக்கள் பெரு நோன்பு இருந்து அம்பாளை நோக்கி பிரார்த்தித்துக் கொண்டனர். அம்பாள் மக்களின் [illegible] அடக்கி மகிடனை சங்கரித்து உலகுக்கு மகிழ்ச்சியையும், சமாதானத்தையும், அன்பையும் நல்கிய திருநாளே விஜயதசமியாகும். இவ்விழா வீடுகளிலும், பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா பெரிய விழாவாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்நாளை ஆயுத பூசை நாள் என்றும் குறிப்பிடுவார்கள். தொழில் செய்யும் அனைவரும் தத்தம் பொருள்களைப் பூசையில் வைத்து வணங்குவார்கள்.

ஏடு தொடங்குதல், புதிதாக வேலை, கலை கல்விகளைத் தொடங்குதல் போன்ற நாளே விஜயதசமி நாளாகும். நவராத்திரி நாள்களில் வீடு களில் அழகான பொம்மைகள் கொண்டு கொலு அமைத்தல் என் பன செய்யப்படும். கோயில்களில் விசேட ஆராதனைகளும், தீபம் ஏற் றுதல் என்பன முக்கியமாக இடம்பெற்று அம்பாளுக்கு சிறந்த அலங் கரிப்புகளும் நடைபெற்று அம்பாள் மக்கள் தரிசனத்துடன் வீதி உலா வருவார். ஆகவே நவராத்திரி விழா சிறப்பான விழாவாக அமைந்துள்ளது.

- ராஜா -

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 01 | | 18.10.2010 திங்கட்கிழமை |
| திதி: | : | ஏகாதசி பி.இ 12.33 வரை |
| நட்சத்திரம் | : | அவிட்டம் பி.ப. 12.08 வரை |
| சுபநேரம் | : | 12.02-01.32 வரை |
| ராகுகாலம் | : | [illegible] வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் கல்வி நிறுவனம்

உயர்தரப் பிரிவின் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

# 5 ஆம் ஆண்டு நிறைவு விழாச் சிறப்பு மலர்

## நற்பணி புரிந்து நீடூழி வாழியவே!



யாழ்ப்பாணம் நாவலர் கல்வி நிலையத்தினர் உயர் தரத்துக்கான வகுப்புக்களை ஆரம்பித்து ஐந்தாண்டுகள் நிறைவைக் கொண்டாடுவதை அறிந்து பேருவகை அடைகின்றோம். கல்வியறிவை ஊட்டுகின்ற அளப்பரிய சேவையாற்றும் இந்நிறுவனம் நற்றமிழ் வளர்த்த நாவலர் பெருமானின் பெயர்கொண்டு விளங்குவதால் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றியே அரியசேவை செய்கின்றது என்று கூறின் சாலப்பொருந்தும்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தம்மாலான பணி புரிந்து இன்று யாழ். மாவட்டத்திலேயே முன்னணியில் திகழும் இந்த நாவலர் கல்வி நிலையம் இன்னும் பல நற்பணிகளாற்றி கலை, கலாசார, பண்பாடுகளில் மேம்பாடுற்று நல்ல வளர்ச்சியுற வேண்டுமென்று நல்லைக் குருமணியின் திருவடி வணங்கி எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் பாத பங்கஜம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து ஆசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

வேகமும் அதே நேரத்தில் விவேகமும் அறிவுத்திறனும் கற்பிக்கும் நுட்பமும் புரிந்த தெரிந்த இளம் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனால் மகிழ்வுற்ற மாணவ உலகம் மேன்மேலும் வளர்ச்சியுற்று பேராற்றல் கொண்டு விளங்க வாழ்த்துக்கள் கூறினோம். நல்லாசிகள் வழங்கினோம். இக்கல்வி நிலையம் தொடர்ந்து கல்விச் சேவையாற்றிநிற்க எம்முடைய உளங்கனிந்த நல்ல வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.*

## இயக்குநரின் இதயத்திலிருந்து



எமது நாவலர் கல்வி நிறுவனத்தின் 22 ஆவது அகவையில் உயர்தரப் பிரிவின் 5 ஆம் ஆண்டு நிறைவை எண்ணி மனநிறைவடைகின்றேன். இம் மகிழ்ச்சிமிகு கணப்பொழுதினில் நாவலர் கல்வி நிறுவனம் கடந்து வந்த பாதை தனிலே மீண்டும் நடந்து சென்று அந்நினைவுகளை மீட்டிப் பார்க்க என் மனம் விரும்புகின்றது.

உண்மையைச் சொல்வதெனில் நாவலர் கல்வி நிறுவனத்தில் உயர்தர பிரிவு வகுப்புக்கள் ஆரம்பமாவதற்கு நான் காரணமல்ல. அதற்கான முழுப்பொறுப்புக்களும், பெருமையும் என் மகனையே சாரும். அவரது விருப்பத்தினாலும் விடா முயற்சியினாலுமே உயர்தர பிரிவு வகுப்புக்கள் ஆரம்பமாகின. சாதாரணதரம் வரை எமது நிறுவனத்திலேயே கல்வியைத் தொடர்ந்த அவருக்கு உயர்தர வகுப்புகளுக்கு வேறு கல்வி நிறுவனங்களை நாட மனம் இடம் கொடுக்கவில்லை. இதையறிந்த நான் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்ற அவருக்கும் அவரின் நண்பர்கள் சிலருக்கும் பிரத்தியேகமான முறையில் வகுப்புக்களை ஒழுங்கு செய்தேன். அந்த ஆசிரியர்கள் இது நாள் வரை வேறு எந்தக் கல்வி நிறுவனங்களிலுமே தமது கல்வி சேவையை ஆற்றியிருக்கவில்லை.

ஆனால் அவர்களது அறிவுத்திறனும், கற்பிக்கும் திறனும் இவரைப் பெரிதும் கவர்ந்திருந்தது. இதன் விளைவாய் இவர்களைக் கொண்டு எமது நிறுவனத்தில் உயர்தரப் பிரிவு வகுப்புக்களை ஆரம்பித்தால் என்ன? என என்னை வினாவினார். ஆனால் அதை நிர்வகிப்பது கடினம் என்பதால் ஆரம்பத்தில் நான் ஆர்வம் காட்டவில்லை. இருப்பினும் இவரின் உத்வேகமும் விடாமுயற்சியும் என் மனதை மாற்றியது. அதன் பயனாய் 2005 ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவுடன் உயர்தர வகுப்புக்கள் உத்தியோகபூர்வமாய் ஆரம்பிக்கப்பட்டன. மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே கணித, விஞ்ஞான, கலை பிரிவு வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டன. மகனின் உயர்தரப் பரீட்சை 2005 ஆம் ஆண்டு நிறைவடைந்தவுடன் அவரிடமே உயர்தர வகுப்புக்களின் முழு நிர்வாகப் பொறுப்பையும் ஒப்படைத்தேன்.

நானே எதிர்பாராத வகையில் துடிப்புடனும் துணிவுடனும் வேறு பல கல்வி நிறுவனங்களுடனான ஆரோக்கியமான போட்டியில் பங்கெடுத்து வெற்றியும் கண்டுவிட்டார். இந்த நிலையில் அவரின் நிர்வாகத் திறனையும் மதிநுட்பத்தையும் எண்ணிப் புளகாங்கிதம் அடைகின்றேன். ஆனால் அவர் மட்டுமே இவ் வெற்றிக்குக் காரணம் அல்ல என்பதையும் நான் அறிவேன்.

அவரோடு இணைந்திருந்த இளம் ஆசிரிய படையணியை இந்நேரத்தில் நன்றியுணர்வோடும் பெருமையோடும் பார்க்கின்றேன். அவர்களது சேவையை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அதேபோல் ஆர்வத்துடனும் ஒழுக்கத்துடனும் கல்வி கற்ற அனைத்து மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் மனதிற் கொள்கின்றேன். இனிவரும் வளர்ச்சிப் பாதைகளிலும் அனைவரும் எம்மோடு இணைந்திருப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு எல்லாம் வல்ல இறைவனையும் வேண்டி நிறைவு செய்கின்றேன்.

## கல்வியறிவூட்டும் நாவலர் கல்வி நிலையமே வாழியவே



சிந்தனையில் ஆற்றலுஞ்சிறப்பான எண்ணங்களுடன்
கல்வியறிவூட்டும்நாவலர்கல்வி நிலையமே வாழியவே!
வந்தனை செய்தோம் நீ வளர்ச்சியுற்றுத் திகழவே
வாழ்க பல்லாண்டே நற்பணிவளர்க பல்லாண்டே!
உந்தனை வாழ்த்துவதில் உவகை மிகக் கொள்ளுகின்றோம்
ஊக்கமுடன் பணியாற்றி ஐந்தாண்டுப் பூர்த்தியிலே
கந்தனைக் கரங்குவித்தோம் நற்பணி தொடர்ந்திலங்க
உளமார வாழ்த்துகின்றோம் வாழ்க பல்லாண்டே

*சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.*




**நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)**

P.கமல் (அளவையியல்), A.K.றொபின்சன் (அரசியல்), K.கஜன் (பௌதிகவியல்),K. சயந்தன்(இணைந்த கணிதம்),S.ஜைசன் (பொது ஆங்கிலம்),T.ஸ்ரீஸ் (இந்து நாகரிகம்),R.R. ஆனந்தன் (வரலாறு), S.யசோ (வணிகக் கல்வி).

**இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)**

V.A. ஞானேந்திரன் (உயிரியல்),T.S.குணநாதன் (இயக்குநர்- நாவலர் கல்வி நிலையம்), A.P.பகீரதன் (கணக்கீடு), K.லவன் (இயக்குநர்- நாவலர் கல்வி நிலையம்- உயர்தரப் பிரிவு), NB.கஜீதரன் (பொருளியல்), S. வாசு (இரசாயனவியல்),A.K கீர்த்திராஜன் (தமிழ்).

## உயர்தரப் பிரிவின் நிர்வாக இயக்குநரின் உள்ளத்திலிருந்து



எமது நாவலர் கல்வி நிறுவனத்தில் உயர்தரப் பிரிவு வகுப்புக்கள் உருவாக்கப்பட்டு 5 ஆண்டுகள் வெற்றிகரமான முறையில் பூர்த்தியாகியுள்ளமையை எண்ணிப் பேருவகையடைகின்றேன், பெருமையடைகின்றேன்.

எனது தந்தையாரினால் 1988 ஆம் ஆண்டில் இருந்து தரம் 1 முதல் 11 வரையிலான வகுப்புக்களைக் கொண்டதாக நாவலர் கல்வி நிறுவனம் நடத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் நான் உயர்தரம் கற்கும்போதே உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் வேர்விட்டது. இதை எனது தந்தையாரிடம் தெரிவித்து 2005 ஆம் ஆண்டு உயர்தர வகுப்புக்கள் ஆரம்பமாகின. எனது உயர்தரப் பரீட்சை முடிவடைந்தவுடன் உயர்தரப் பிரிவின் சகல நிர்வாகப் பொறுப்புக்களையும் எனது தந்தையார் என்னிடம் ஒப்படைத்தார். பின்னர் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய அனைத்துப் பிரிவுகளையும் ஒரு சேர கற்பிக்கும் முதலாவது நிறுவனமாக நாம் உருவெடுத்தோம்.

சில வருடங்கள் ஆனைப்பந்தியிலுள்ள எமது நிறுவன வளாகத்தி லேயே உயர்தர வகுப்புக்களும் நடைபெற்று வந்தன. அக்கால கட்டத்தில் நாட்டில் அசாதாரணமான சூழ்நிலை நிலவியதால் போக்குவரத்துப் பிரச்சினைகள் இருந்தன. மேலும் ஏனைய கல்வி நிறுவனங்களுடனான ஆரோக்கிய போட்டியில் கலந்துகொள்ள வேண்டிய கட்டாயமும் நிலவி யது. இதனால் எமது உயர்தர வகுப்புக்களை மணிக்கூட்டுக் கோபுர வீதி யில் பெருமாள் கோயிலுக்கு முன்னுள்ள ஒரு வளாகத்தில் நடத்தினோம். அங்கே நாம் எதிர்பாராத அளவில் எமது வளர்ச்சி அமைந்திருந்தது. நாம் நினைத்துப் பாரா வண்ணம் வகுப்புக்களில் மாணவர்கள் நிறைந்திருந்தனர். எதிர்பாராவகையில் இடப்பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது சில விஷமிகளினால் வேறு பல இடையூறுகளும் மேற்கொள்ளப்பட்டன. அதன் உச்சக் கட்டமாய் எமது நிறுவனம் தீக்கிரையாக்கப்பட்டது.

இப்படியாய் பல சோதனைகளுக்கு முகங்கொடுத்த போதும் கல்வி உலகில் சாதனை படைக்க வேண்டும் என்ற திண்ணிய எண்ணத்துடன் செயற்பட்டோம். இக்காலப் பகுதியில் நாட்டுச் சூழ்நிலை சுமூகமாக மாறியது. எமது நிறுவனமும் பல மாணவர்களது மனதில் தனித்துவமான தன்னிகரற்ற ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டது. எனவே நாம் மீண்டும் பருத்தித் துறை வீதியில் அமைந்த எமது வளாகத்திலேயே தொடர்ந்து இயங்கத் தீர்மானித்தோம். இதன் நிமித்தம் 2010 ஆம் ஆண்டு மீண்டும் நாம் பழைய இடத்திலேயே இயங்கத் தொடங்கினோம்.

இப்படியாய் எமது நிறுவனம் குறுகிய காலத்தில் உயரிய வளர்ச்சியடையக் காரணமானதை இக்கணப் பொழுதினில் மனதால் வணங்குகின்றேன். எனது நிர்வாக நடவடிக்கைகளை ஆராய்ந்து ஆலோசனை தந்து வழிகாட்டிய என் தந்தையாருக்கு எனது நன்றிகள். என்னோடு இணைந் திருந்த, இணைந் திருக்கின்ற புகழ்பூத்த எம் இளம் ஆசிரியர் படையணியை நன்றியுணர்வோடு இம்மகிழ்ச்சிமிகு பொழுதினில் நினைவிற் கொள் கிறேன். அவர்களது அறிவு பூர்வமான, அன்பான, ஆத்மார்த்தமான அந்த ஆசிரிய சேவையினாலேயே அசாதாரணமான இவ்வளர்ச்சி சாத்திமாகியது. அதேபோல் விசுவாசத்துடனும், விருப்புடனும் கல்வி கற்று எம்மோடு நல்லுறவைப் பேணிவரும் மாணவச் செல்வங்களை மனதிற் கொள் கின்றேன். எம் நிறுவனம்மேல் அசைக்க முடியா நம்பிக்கையோடு தம் பிள்ளைகளை எம்மிடம் அனுப்பி வைக்கும் பெருமதிப்பிற்குரிய பெற் றோர்களையும் மனதிற் கொள்கின்றேன். அவ்வாறே எமது பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் நினைவிற் கொள் கின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாய் எம்மை ஆசிர்வதித்த எல்லாம் வல்ல இறைவனை என்றும் வணங்குகின்றேன்.

இந்தக் குறுகிய கால உயரிய வளர்ச்சியைக் கண்டு மதிமயங்காது இன்றும் வினைத்திறனுடன் செயற்பட்டுக் கல்விச் சமூகத்திற்கு எம் மாலான பணியை செய்வோம் என இத்தருணத்தில் உறுதியளிக்கின்றேன். அதே போல் இன்றும் போல் என்றும் உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றேன்.

## ஆசிச் செய்தி



கல்வி அறிவைப் பெருக்கும், பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் ஆளுமையை வளர்க்கும் அறியாமையை அகற்றும் வாழ்வில் பெருமையைப் பெற்றுத் தரும் என்று கல்வியின் பரிமாணங்கள் நீண்டு செல்லும். அவற்றில் கல்வி மனிதனைப் பண்புள்ளவனாக்கும் என்ற கல்வியின் பக்கமே எல்லாவற்றுக்குள்ளும் முதன்மை பெறுகின்றது. அத்தகைய கல்விப் பணியை வழங்கும் ஆசிரியர்களும் நிறுவனங்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே!

அந்த வகையில் கடந்த 23 ஆண்டுகளாக யாழ். மண்ணில் நிலைத்து நின்று யுத்த நெருக்குதல்களுக்கு மத்தியில் முகம் கொடுத்து யாழ். மாணவர்களின் கல்வித் தேவையை தன்சேவையாக முன்னெடுத்து உழைத்து வரும் நாவலர் கல்வி நிலையம் (NEC) பாராட்டுதற்குரியது.

உயர்தரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடைகின்ற இந்நாளில் இக்கல்வி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர், ஆசிரிய குழாமினர், மாணவர்கள் அனைவரையும் ஆசித்து வாழ்த்தி நிற்கின்றேன்.

*அருட்பணி எஸ்.ஏ. அருட்செல்வன்*
*யா/ புனித பத்திரிசியார் கல்லூரி*

## ஆசிரியர்களின் அகத்திலிருந்து

எமது ஆசிரிய சேவையினை ஆற்றுவதற்கு அரிய வாய்ப்பை நல்கிய நாவலர் கல்வி நிறுவனத்தின் உயர்தரப் பிரிவின் ஐந்தாம் ஆண்டு பூர்த்தியாவதை எண்ணி அகமகிழ்கின்றோம். இந்நிறுவனத்தின் குறுகிய கால உயரிய வளர்ச்சியை உள்ளிருந்து பார்த்தவர்கள் என்ற வகையில் அவ்வளர்ச்சிக்கு வழி சமைத்தவர்களில் நாம் உள்ளடங்குகின்றோம் என்பதிலும் உள்ளம் மகிழ்கின்றோம்.

இந்நிறுவனத்தின் உயர்தரப் பிரிவின் ஆரம்ப காலத்தில் ஆரோக்கியமற்ற நாட்டு நிலைமையையும் ஆரோக்கியமான போட்டி நிலைமையையும் எம்மைச் சிந்திக்கச் செய்தன. எனினும் கடின உழைப்புக்கும் ஆத்மார்த்தமான சேவைக்கும் உரிய பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கல்விச் சேவையில் காலடி எடுத்து வைத்தோம்.

மாணவர்களின் மதிப்பும் பெற்றோர்களின் நம்பிக்கையுமே எமது சேவைக்குக் கிடைத்த அங்கீகாரமாக நாம் கருதுகின்றோம். இவ் அங்கீகாரத்திற்கு என்றும் களங்கம் ஏற்படா வண்ணம் எமது சேவையை தொடர்ந்து செய்ய நாம் மனவுறுதி கொண்டுள்ளோம். எமது மாணவர்ச் செல்வங்கள் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ள வழியமைத்துக் கொடுப்பதும் ஆளுமை மிக்கவர்களாகவும் ஒழுக்க மிகு மனிதர்களாகவும் உருவாக்குவதுமே எமது எண்ணம்.

எமது இவ்வெண்ணம் எண்ணியபடி நிறைவேற நாவலர் கல்வி நிலையம் நல்லதொரு களமாக அமைந்துள் ளது. நாவலர் கல்வி நிலையச் சூழலும் அதன் இயக்குநரின் சுபாவமும் எமது பணி தடையின்றி நடைபெற உறுதுணையாக உள்ளன. இதேபோல் எம்மீது நம்பிக்கை வைத்து தம்மை எம்மிடம் ஒப்படைக்கும் எமதருமை மாணவச் செல்வங்களை மனதிற் கொள்கின்றோம். இந்நேரத்தில் எமது ஆசிரியச் சேவைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த தோடு என்றும் ஆதரவு நல்கும் நாவலர் கல்வி நிலைய இயக்குநருக்கு எமது நன்றிகள். இந்நிறு வனத்தில் நாம் என்றும் இணைந்திருப்பதன் மூலம் எமது மாணவச் சமூகத்திற்கு நல்லதொரு கல்விச் சேவையை நாம் வழங்குவோம்.

எமது நாவலர் கல்வி நிலையத்திற்கு ஆசிரியர்கள் சார்பாக எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேலும் இந்நிறுவனம் பல காலம் தொடர்ந்து தனது சேவையினை வழங்க எல்லாம் வல்ல இறைவனின் ஆசியினை வேண்டி நிற்கின்றோம்.

*ஆசிரியர் குழாம்*

## மாணவன் மனதிலிருந்து



எமது நாவலர் கல்வி நிறுவன உயர்தரப் பிரிவின் 5 ஆம் ஆண்டுப் பூர்த்தியை எண்ணி மனம் பூரிப்படைகின்றேன். இவ்விழாவிற்குத் தலைமை தாங்கும் வாய்ப்பு எனக் குக் கிடைத்தமையை பெரும்பாக்கியமாய் கருதுகின்றேன். இந்நிறுவனத்தின் மாணவர்களென எம்மைச் சொல்லிக் கொள்வதில் நானும் என் சகசகோதர சகோதரிகளும் மகிழ் வடைகின்றோம், பெருமையடைகின்றோம். இந்நிறுவனத் தில் எமது கல்வி யைத் தொடர்வதனால் நாம் பெரும் பயனடைகின்றோம். முதலில் எமது உயர்தரப் பிரிவின் நிர்வாக இயக்குநரை எண்ணி வியக்கின்றேன். இளம் வயதிலேயே இவ்வளவு பெரிய நிறுவனத்தைச் சிறப்பாய் நிர்வகிக்கும் திறனையும் ஆசிரியர்களோடும், மாணவர்களோடும் அவர் பேணும் நல்லுறவும் இந்த வயதில் இவ்வளவு அனுபவமா என எண்ணத் தோன்றுகின்றது.

எமது ஆசிரியப் பெருந்தகைகளை இவ்விடத்தில் நன்றியுணர்வோடு பார்க்கின்றேன். தமது வருமானத்தைப் பாராது எமது வருங்காலத்தைப் பார்த்து அதற்காய் அவர்கள் செய்யும் சேவைக்கும் நாங்கள் தலை வணங்குகின்றோம். எதை? எப்படி, எங்கே, எப்போது சொன்னால் எங்களுக்குப் புரியும் என்று எங்களை விட அவர்களுக்கு நன்கு புரிந்திருக்கிறது. அதனால்தான் வெறுப்பின்றி விருப்புடன் எங்களால் கல்வி கற்க முடிகின்றது. அவர்கள் இன்று மட்டுமல்ல என்றுமே எமது போற்றுதற்குரியவர்கள்.

அதேபோல் எமது கல்வி நிறுவனச் சூழல் எம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இளைஞர் நாம் வழி மாறி வாழ் விழந்து போகும் வண்ணம் எந்த அம்சமும் அண்மையில் இல்லை. மாறாய் கலாசார பண்பாட்டு ஆன்மீக விழுமியங்களோடு ஒன்றிணைந்த அமைதியான கல்வி நிறுவனச் சூழல் மாணவர்களை கல்வியை தவிர வேறு எதையுமே சிந்திக்க வைக்காத நல்லதொரு நிலைமை அங்கே நிலவுகிறது. இது வேறு எங்கும் அனுபவிக்க முடியாத நான் அறிந்திராத அரிய விடயம்.இப்படியாய் ஒவ்வொரு அம்சங்களும் மாணவ சமுதாயத்தின் கல்வி நடவடிக்கைக்கு பெரும் பங்களிப்பு செய்கின்றன. நானும் என் சக சகோதரிகளும் மாணவர்களாய் மட்டுமன்றி பழைய மாணவர்களாயும் இக்கல்வி நிறுவனத் தோடு என்றும் இணைந்திருப்போம். வாழ்த்த வயதில்லை என அறிவோம். ஆனாலும் எமது நாவலர் கல்வி நிறுவனத்தின் மகத்தான கல்விச் சேவையை வாழ்த்தி, அதற்கு வழி சமைக்கும் அனைத்து நல்லுள்ளங்களையும் வாழ்த்தி இன்னும் பல ஆண்டுகள் இதன் சேவை நிலைத்திருக்க இறைவனை வணங்குகின்றோம்.

**சானுகா**
**நகைமாடம்**
200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**வஜிதா**
மோட்டார் சைக்கிள் திருத்தகமும்
சேவிஸ் சென்ரும்
தொ.பே: 021 5672219,
0778097741.
300/1, நாவலர் வீதி, ரயில்வே சந்தி, யாழ்ப்பாணம்.

கணனிவேலைகள், பக்ஸ்,
போட்டோக்கொப்பி
என்பவற்றை பெற்றிட
**பிரகாஷ்**
56B, பலாலி வீதி,
திருநெல்வேலி.
தொ.பே: 0217915627

**மாருதி**
ரக்ரர் என்ஜினியர்ஸ்,
195, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777448341

**அம்பாள் மரக்காலை**
இல.261,
பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்மன்
கோயிலடி,
யாழ்ப்பாணம். நல்லூர்.

**விஜி கூல்பார்**
உரிமையாளர் :
K.வரதன்,
194, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**SRI VINAYAGAR**
**FANCY, VIDEO &**
**PRINTERS**
Valakkamparai,
[illegible]

**கஜன் பிளாஸ்ரிக்**
**தொழிலகம்**
சகல விதமான மோட்டார் வாகன
பிளாஸ்ரிக் பொருள்கள் சிறந்த
முறையில் மீள் திருத்தி
கொடுக்கப்படும்.
[illegible] அரியாலை.
T.P. 0771607752

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீர் வழங்கப் போதிய பவுசர்கள் இல்லை; வலி.தென்மேற்குப் பிரதேச மக்கள் கஷ்டம்

சண்டிலிப்பாய்,ஒக்.17

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் உவர் நீர் உள்ள பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான குடிதண்ணீரை வழங்குவதற்கு பிரதேச சபையிடம் போதியளவு பவுசர்கள் இல்லாததால் மக்களின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாகின்றனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மாதகல், வடலியடைப்பு, கட்டுடை, காக்கை தீவு, மானிப்பாய் ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களுக்கு பவுசர் மூலம் பிரதேச சபை குடி தண்ணீரை வழங்கி வருகின்றது.

பிரதேச சபையிடமிருந்த இரு பவுசர்களில் ஒரு பவுசர் பழுதடைந்த நிலையில் இருப்பதால் தற்பொழுது ஒரு பவுசர் மூலமே குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க முடியாத நிலை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது.

போதியளவு குடிதண்ணீரை பிரதேச சபையினால் வழங்க முடியாததால் மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். எனவே உரிய தரப்பினர் எமக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்து குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-115)

## மின்னிணைப்பை பெற்றுத் தருமாறு கைதடிப் பிரதேச மக்கள் கோரிக்கை

கைதடி,ஒக்.17

கைதடி கிழக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள கைதடி இராஜபுரிக் கிராமம் மின்னிணைப்பு இல்லாத நிலையில் மிக நீண்ட காலமாக இருந்து வருவதாக பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிராமத்தில் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் தாம் வாழ்ந்து வருவதாகவும் பல தடவைகள் வளர்மதி சனசமூக நிலையத்தினூடாக மின்சாரத்தைப் பெறும் நோக்கோடு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரோடு கடித மூலமும் நேரடியாகவும் தொடர்பு கொண்ட போதும் விரைவில் வழங்கப்படும் என்ற உறுதிமொழியே தமக்குக் கிடைப்பதாகவும் ஆனால் மின்னிணைப்போ இதுவரை தமக்கு கிடைக்கவில்லை எனவும் பொதுமக்களால் கூறப்படுகின்றன.

இதேவேளை கைதடியின் ஏனைய பகுதிகளில் மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ள போதும் இந்த இடம் புறக்கணிக்கப்பட்டதன் நோக்கம் ஏன் எனத் தெரியாது இப் பகுதி மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

தேர்தல் காலங்களில் வாக்குகளை அள்ளிவீசும் அரசியல் வாதிகள் வெற்றி பெற்றதும் வாக்குறுதிகளை நிறைவேற்றாதது தமக்கு பெரும் வேதனையளிப்பதாகவும் அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவ்விடயத்தில் அரச அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் உடனடிக் கவனமெடுத்து இப்பிரதேசத்திற்கு மின்னிணைப்பு விரைவில் கிடைக்க ஆவன செய்யுமாறும் இப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (6-288)

# தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்தோருக்கு 'வேள்ட் விஷன்' வாழ்வாதார உதவிகள்

தென்மராட்சி,ஒக்.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் மீளக்குடியமர்ந்த 70 குடும்பங்களுக்கு 'வேள்ட் விஷன்' நிறுவனத்தினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வாழ்வாதார உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வைத்து 29 பேருக்கு தையல் இயந்திரங்களும் 15 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்களும், 11 பேருக்கு விவசாய உபகரணங்களும், 5 பேருக்கு கட்டுமாணப் பொருள்களும் (மேசன்), 5 பேருக்கு தச்சுத் தொழில் உபகரணங்களும், 2 பேருக்கு சலவைத் தொழில் உபகரணங்களும் மின்னிணைப்புத் தொழில் உபகரணங்கள், மீன்பிடி உபகரணங்கள், வர்ணம் தீட்டுதல் உபகரணங்கள் தலா ஒருவருக்கும் வழங்கப்பட்டன.

ஒவ்வொருவருக்கும் குறைந்தது 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

உதவிப்பிரதேசசெயலர் செல்வி. ர.நவரத்தினம் உதவிப் பொருள்களை வழங்கினார். (6-207)



யாழ்.ஒஸ்மானியக் கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வின் போது மாணவர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பரிசுப் பொருள்களுடன் அதிபர், ஆசிரியர்கள் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: உமா)

# 'உலக கை கழுவுதல்' தினத்தையொட்டி பருத்தித்துறையில் வெள்ளியன்று பேரணி

வடமராட்சி,ஒக்.17

'உலக கை கழுவுதல்' தினத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் சகிதம் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நகரில் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

பருத்தித்துறை மத்தியில் பஸ் நிலையத்திலிருந்து காலை 10 மணிக்கு அதிபர் அ.திரவியராசா தலைமையில் ஆரம்பமான இப் பேரணியில் வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.சுகுமார், பருத்தித்துறை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான பொலிஸ் அதிகாரி நிஷாந்த ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கை கழுவுதல் தொடர்பாக கோஷங்களை எழுப்பியவாறும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும் பேரணியாக வந்த மாணவர்கள் பிரதான வீதி வழியாக பருத்தித்துறை, குருமணல் கந்தசுவாமி கோயில் வரை சென்று திரும்பி வித்தியாலயத்தை வந்தடைந்தனர்.

''எமது கைகளை தூய்மையாக வைத்திருந்து ஆரோக்கியத்தைப் பாதுகாப்போம்'', '' அழுக்கான கைகள் எங்களை நோயாளியாக்குகின்றது எனவே எங்களது கைகளைச் சரியாகக் கழுவுவோம்'', ''கைகளைக் கழுவ இன்று தொடங்குவோம் என்றும் கடைப்பிடிப்போம்'', ''ஒவ்வொரு உணவு வேளைக்கு முன்னரும் உங்கள் கைகளை சவர்க்காரமிட்டு நன்றாகக் கழுவுங்கள்'' ஆகிய வாசகங்கள் கொண்ட சுலோக அட்டைகளைத் தாங்கியபடி, கோஷங்களையும் எழுப்பியவாறு மாணவர்கள் பேரணியில் சென்றனர். (6-236)

## சித்தியடைந்த மாணவனுக்கு காரைநகர் ஆலயம் நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஒக்.17

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனை மேலும் ஊக்குவிக்கும் முகமாக வியாவில் ஐயனார் ஆலய அறங்காவலரினால் ஒரு தொகைப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் கல்வி பயின்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த லோ.குருபரன் என்ற மாணவனுக்கே வியாவில் ஐயனார் ஆலய பரிபாலகர் க.சோமசேகரம் 5 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

மேற்படி கல்லூரியில் கடந்த வாரம் காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற மாணவர்களுக்கான நிதிக் கையளிப்பு நிகழ்வில் க.சோமசேகரத்தினால் மேற்படி நிதி வழங்கப்பட்டது. (201-250)

# காசநோயைக் கட்டுப்படுத்த தொழில்நுட்ப ஊழியரின் பங்களிப்பைப் பெற்றுத் தாருங்கள்

## ஆளுநரிடம் மருத்துவர் யமுனானந்தா கோரிக்கை

தென்மராட்சி,ஒக்.17

வடக்கு மாகாணத்தில் காசநோயைக் கட்டுப்படுத்த வைத்தியசாலைகளில் பணிபுரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் (M.L.T) ஒத்துழைப்பைப் பெற்றுத் தருமாறு யாழ். மாவட்ட காசநோய் தடுப்புப் பிரிவின் அதிகாரி மருத்துவர் செ.யமுனானந்தா மாகாண ஆளுநருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

வைத்தியசாலைகளில் இருமலால் பீடிக்கப்பட்ட 12 வயதுக்கு மேற்பட்ட நோயாளர்களின் சளியை பரிசோதிப்பதற்கான மருந்துகளும் காகிதாதிகளும் தெல்லிப்பழை, சாவகச்சேரி, மந்திகை ஆகிய வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை, சாவகச்சேரி, மந்திகை வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்ற 24 ஆயிரம் இருமல் நோயாளர்களில் 10 வீதமானோர் சுவாச நோயினால் பாதிப்படைந்திருக்கக் கூடிய வாய்ப்பு உள்ள போதிலும் குறைந்தது இரண்டு வீத நோயாளர்களின் சளி பரிசோதனை செய்திருப்பின் குறைந்தது 500 பேருக்கு காசநோய் ஏற்பட்டிருப்பதை ஆரம்பத்தில் தடுத்திருக்கலாம்.

சளிப் பரிசோதனை செய்வது மக்கள் மத்தியில் காசநோய் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதாக இருந்திருக்கும். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையிலான கட்டமைப்பின் ஊடாகவே காசநோயை முற்றாகத் தடுக்க முடியும்.

இதனால் காசநோயைத் தடுப்பதற்கான வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தருமாறும் அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-207 )



அறவழிப் போராட்டக்குழுத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேலின் தலைமையில் தென்மராட்சியைச் சேர்ந்த மாற்றுவலுவுடைய 5 இளைஞர், யுவதிகளுக்கு முச்சக்கரவண்டிகள் வழங்கப்படுவதையும் பிரதம விருந்தினரான முத்துக்குமாருடன் தலைவர், செயலாளர், பயனாளிகள் பெற்றோர்கள் நிற்பதையும் காணலாம்.

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### தளபதி ஹத்துருசிங்கவுக்கு சமாதான விருது

யாழ்ப்பாணம்,ஒக்.17

குஷி- சர்வதேச சமாதான விருது யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரில் வைத்து இந்த உயர் விருது எதிர்வரும் 24 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க 1980.09.16 இலங்கை இராணுவத்தின் கடேட் அதிகாரியாக இணைந்து இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் நாடுகளில் பல்வேறு பயிற்சிகளைப் பெற்றவர்.

மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க ஏற்கனவே பல்வேறு படை நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றுக்காக இராணுவத்தின் உயர் விருதுகளைப் பெற்றுள்ளார் [illegible] (201-302)

# காணிகளை துப்புரவு செய்யாத உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க ஆளுநர் பணிப்பு

தென்மராட்சி,ஒக்.17

டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இதுவரை துப்புரவு செய்யப்படாத காணி உரிமையாளர்கள் மீது மாகாண ஆளுநரின் விசேட பணிப்புக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களால் இனங்காணப்பட்டு அறிவிக்கப்பட்ட காணிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு 14 நாள்களில் துப்புரவு செய்யும் அறிவித்தல் ஒட்டப்பட்டு வருகிறது.

குறித்த 14 தினங்களுக்குள் துப்புரவு செய்யப்படாத காணிகள் நகர சபையின் டெங்கு ஒழிப்பு பிரிவினரால் துப்புரவு செய்யப்படுவதுடன் காணி உரிமையாளர் மீது சுகாதாரத் திணைக்களத்தினரால் வழக்குத் தொடரப்படும்.

காணி துப்புரவு செய்யப்படும் கூலி காணியின் ஆதனவரியுடன் சேர்க்கப்பட்டு அறவிடப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைக்காத காணி உரிமையாளர்களின் பெயர்ப்பட்டியல் கிராம அலுவலரின் அலுவலகம் உட்பட பொது இடங்களில் பொதுமக்களின் பார்வைக்காக ஒட்டப்பட்டுள்ளன.

இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (201-207)

# சுதுமலை இளைஞர் கழகத்தின் முன் மாதிரியான செயற்பாடு

## மாணவர்களுக்கு இலவச வகுப்புகள்

சண்டிலிப்பாய்,ஒக்.17

மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும் கிராம அபிவிருத்தியையும் கருத்திற் கொண்டு சுதுமலை வடக்கு இளைஞர் கழகம் வாராந்த இலவச வகுப்புக்களை நடத்துகின்றது. மேற்படி கழகம் எடுத்துக் கொண்ட முன்மாதிரியான செயற்பாட்டால் இப்பகுதி மாணவர்கள் குறிப்பாக வசதி குறைந்த மாணவர்கள் நன்மையடைந்துள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலரின் அறிவுறுத்தலுக்கமைய ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு தோறும் இளைஞர் கழகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சுதுமலை வடக்கு இளைஞர் கழகம் கிராம வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி வருவதுடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான பல திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் முன் வந்துள்ளது.

இதனடிப்படையில் உயிர்கொல்லியான டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள இக்கழகத்தினர் வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பது மட்டுமல்லாமல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளனர்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட மேற்படி கழகத்தினர் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையை நோக்கமாக வைத்து தரம்-4 இல் இருந்து மாணவர்களுக்கு வாராந்த வகுப்புக்களை நடத்தி வருகின்றனர். சுதுமலை, சிந்மய பாரதி வித்தியாலயத்தில் இடம்பெறும் மேற்படி வகுப்புக்களில் சிறந்த ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இதேபோல் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கும் இலவச வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-201-115)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

## அபுதாபி

முன்னணி நட்சத்திர ஹோட்டலில் பின்வரும் பதவிகளுக்கான ஆள்சேர்ப்பு நேர்முகத்தேர்வு 2010.10.23 அன்று காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வெளிநாட்டில் இருந்து வருபவரால் நடத்தப்படும்.

| Srl | JOB POSITIONS | No of Vacancies | Salary in Dirham | |
|---|---|---|---|---|
| | | | Minimum | Maximum |
| 01 | WAITRESS (பெண்கள்) | 10 | 800/= | 1000/= |
| 02 | WAITER | 10 | 800/= | 1000/= |
| 03 | சமையலறை உதவியாளர்கள் (ஆண்/பெண்) | 08 | 750/= | 850/= |
| 04 | வரவேற்பாளர்கள் (ஆண்/பெண்) | 06 | 900/= | 1200/= |
| 05 | தொலைபேசி இயக்குநர் (ஆண்/பெண்) | 04 | 900/= | 1100/= |
| 06 | பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்/பெண்) | 12 | 1000/= | 1200/= |
| 07 | ROOM BOY | 10 | 800/= | 900/= |
| 08 | பராமரிப்பு உதவியாளர் | 04 | 800/= | 900/= |
| 09 | அலுவலக சுத்திகரிப்பாளர்கள் (ஆண்/பெண்) | 08 | 700/= | 800/= |
| 10 | நிர்வாக உத்தியோகத்தர் (ஆண்/பெண்) | 04 | 1000/= | 1400/= |
| 11 | HOUSE KEEPING STAFF | 08 | 800/= | 1000/= |
| 12 | COOK - (CONTINENTAL - EASTERN - WEST - ERAN - ASIAN - ARABIC - CHINESE & OTHER) | 20 | 1500/= | 2500/= |
| 13 | HOSTESS/GUEST RELATION OFFICER | 03 | 1500/= | 2500/= |
| 14 | BARMAN | 05 | 1200/= | 1400/= |
| 15 | BAR WAITER (MALES & FEMALE) | 16 | 800/= | 1000/= |
| 16 | LAUNDRY STAFF | 08 | 800/= | 1000/= |
| 17 | பொது சுத்திகரிப்பாளர்கள்- | 20 | 700/= | 800/= |

## டுபாய்

### A LEADING OPERATION & MAINTENANCE COMPANY

**2010 நவம்பர் 2 ஆம் திகதி நேர்முகப்பரீட்சை வெளிநாட்டவரினால்**
*காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடத்தப்படும்.*

| | |
|---|---|
| பதவி | பாதுகாப்பு உத்தியோகத்தர் |
| சம்பளம் (12 மணித்தியால கடமை) | APPROXIMATELY DHS 1250/= |
| வெற்றிடங்கள் | 50 (FIFTY) |
| தகைமை | HEIGHT 5' FEET – MUST BE ABLE TO SPEAK, READ, WRITE & UNDERSTAND ENGLISH – MUST BE G. C. E. (O/L) COMPLETED CANDIDATES – AGE BELOW 38 YEARS |

| | |
|---|---|
| பதவி | HOUSE KEEPING ATTENDANTS (வீட்டுப்பராமரிப்பாளர்) |
| சம்பளம் (9 மணித்தியால கடமை) | APPROXIMATELY DHS 700/= |
| வெற்றிடங்கள் | 50 (FIFTY) |
| தகைமை | 33 வயதிற்குட்பட்டவர்கள் |

Company Provide the following:- FREE ACCOMMODATION – FREE TRANSPORT – INSURANCE – UNIFORM & MEDICAL. CONTRACT PERIOD 02 YEARS & RENEWABLE.
IF YOU ARE INTERESTED ON THE ABOVE JOB COME IMMEDIATELY WITH YOUR PASSPORT – 03 NO'S WHITE BACKGROUND PHOTOGRAPHS & ALL YOUR TESTIMONIALS ON OR BEFORE 31ST OCT 2010

## DUBAI - U.A.E.

### A LEADING CLEANING COMPANY

| | |
|---|---|
| பதவி - | சுத்திகரிப்பாளர் (பெண்) |
| அடிப்படைச் சம்பளம் (8 மணித்தியால வேலை) | DHS 600/= |
| மேலதிக வேலை நேரம் சம்பளம் ஒருமாதத்திற்கு தினமும் 4 மணித்தியாலம் | DHS 200/= |
| சாப்பாட்டு அலவன்ஸ் ஒருமாதத்திற்கு | DHS 200/= |
| வெள்ளிக்கிழமையிலும் ஓய்வுநாளிலும் வேலை செய்தால் ஒருநாள் சம்பளம் | DHS 30/= |
| பதவி வெற்றிடங்கள் | 50 (FIFTY) |

Company Provide the following:-
FREE ACCOMMODATION – FREE TRANSPORT – INSURANCE – UNIFORM & MEDICAL.
IF YOU ARE INTERESTED ON THE ABOVE JOB COME IMMEDIATELY WITH YOUR PASSPORT – 03 NO'S WHITE BACKGROUND PASSPORT SIZE PHOTOGRAPHS AND FULL PHOTOGRAPH

### A LEADING CLEANING COMPANY (BERKELEY COMPANY)

## DUBAI - U.A.E.

| | |
|---|---|
| பதவி - | சுத்திகரிப்பாளர் (ஆண்) |
| அடிப்படைச் சம்பளம் (8 மணித்தியால வேலை) | DHS 400/= |
| மேலதிக வேலை நேரம் சம்பளம் ஒருமாதத்திற்கு தினமும் 4 மணித்தியாலம் ஒரு மாதவேதனம் | DHS 140/= |
| வெள்ளிக்கிழமையிலும் ஓய்வுநாளிலும் வேலை செய்தால் ஒருநாள் சம்பளம் ஒரு நாள் வேலைக்கான வேதனம் | DHS 30/= |
| பதவி வெற்றிடங்கள் | 50 FIATY |

Company Provide the following:-
FREE ACCOMMODATION – FREE FOOD – FREE TRANSPORT – INSURANCE – UNIFORM & MEDICAL.
IF YOU ARE INTERESTED ON THE ABOVE JOB COME IMMEDIATELY WITH YOUR PASSPORT – 03 NO'S WHITE BACKGROUND PHOTOGRAPHS

### TOP URGENT VACANCIES IN

## KUWAIT

### "A LEADING CLEANING COMPANY HAVING CONTRACT WITH MINISTRY OF HEALTH AND SEVERAL OTHER MINISTRIES TO DO CLEANING JOBS"

| | |
|---|---|
| JOB: POSITION | - CLEANERS |
| SALARY | - 45/= KUWAIT DINAR |
| NO OF VACANCIES | - 200 (TWO HUNDRED) |
| WORK LOCATION | - CANDIDATE WILL HAVE TO WORK IN MINISTRY'S BUILDINGS – INSIDE AND OUTSIDE BUILDING INCLUDING ALL LOCATIONS IN THE BUILDING. AS AND WHEN NECESSARY CANDIDATES WILL BE TRANSFERRED TO HOSPITALS FOR CLEANING JOBS |
| TERMS & CONDITIONS OF EMPLOYMENT | - 08 HOURS DUTY – 06 DAYS A WEEK – 01 DAY OFF – OVERTIME WILL BE PAID EXTRA AFTER 08 HOURS – ACCOMMODATION, MEDICAL, TRANSPORT PROVIDED BY THE COMPANY – CONTRACT PERIOD 03 YEARS – RETURN AIR TICKET PROVIDED BY THE COMPANY ON COMPLETION OF 03 YEARS CONTRACT |
| OTHER BENEFITS | - AFTER 08 HOURS DUTY CANDIDATE CAN DO PART TIME WORK. AND ALSO ON OFF DAYS AND HOLIDAYS THEIR WILL BE NO OBJECTION BY THE COMPANY. |

CANDIDATES INTERESTED FOR THE ABOVE JOB WE NEED ORIGINAL – 02 YEARS VALID PASSPORT WITH 03 PASSPORT SIZE COLOUR PHOTOGRAPHS WITH WHITE BACKGROUND FOR IMMEDIATE VISA PROCESSING, CANDIDATE HAS TO MAKE A DEPOSIT OF RS. 38,500/= TO SEND GP LETTER THROUGH KUWAIT AIRWAYS OFFICE COLOMBO TO KUWAIT AIRWAYS OFFICE IN KUWAIT TO ISSUE A TICKET FOR THE VISA PROCESSING IN KUWAIT. COME PERSONALLY

## டோகா - கட்டார்

### IMMEDIATE VACANCIES
### A LEADING CONSTRUCTION AND CONTACTING COMPANY

| Srl | Position | QTY | Salary in Sri Lanka Rupees |
|---|---|---|---|
| 01 | Structural Steel Fabricators | 20 | 31,500.00 |
| 02 | Welders | 10 | 31,500.00 |
| 03 | Helpers | 42 | 25,200.00 |
| 04 | Masons | 30 | 28,350.00 |
| 05 | Shuttering carpenters | 20 | 28,350.00 |
| 06 | Steel fixers | 20 | 28,350.00 |
| 07 | Electricians | 05 | 31,500.00 |
| 08 | Security guards | 03 | 31,500.00 |

**TERMS & CONDITIONS OF EMPLOYMENT:**

1. Accommodation is provided by employer
2. Medical facilities will be provided by employer
3. Food will be provided by the employer
4. Working hours shall be eight (8) hours per day and forty eight (48) hours per week. Working hours shall not exceed twelve (12) hours per day
5. One day per week will given a day off
6. The period of contract will be two (2) years with probation of three(3) months
7. Free return ticket will be provided on completion of two years
8. Full cost of employees resident permit shall be borne by the employer
9. All other terms and conditions of employment shall be in accordance with the Laws and Regulations of the State of Qatar

## மத்திய கிழக்கில்

### "TO WORK IN IQ AMERICAN BASE CAMPS"

வெளிநாட்டவரால் நேர்முகப் பரீட்சை விரைவில்

| POST | QTY | SALARY IN SRI LANKA RUPEES |
|---|---|---|
| மரவேலையாளர் | 22 | 63,250/= |
| பார ஊர்தி இயக்குநர்கள் (BACKHOE/ GRADER-DOZER.30K FORKLIFT ) | 15 | 63,250/= |
| PLUMBER | 09 | 63,250/= |
| வாகனங்களைப் பராமரிக்கும் இயந்திரதொழில் நிபுணர் | 16 | 63,250/= |
| நிர்வாக உதவியாளர் (ஆங்கிலம் நன்றாக கதைக்கவும் எழுதவும் தெரிந்திருத்தல்) | 50 | 63,250/= Plus Special Allowance |
| ADMIN ASSISTANT – MAXIMO SPECIALIST | 20 | 63,250/= Plus Special Allowance |
| மரவேலையாளர் | 120 | 63,250/= Plus Special Allowance |
| DEFAC | 79 | 63,250/= Plus Special Allowance |
| சமையலாளர் | 78 | 63,250/= Plus Special Allowance |
| HEAVY / BUS DRIVER | 30 | 63,250/= Plus Special Allowance |
| FUEL SPECIALIST | 10 | 63,250/= Plus Special Allowance |
| HVAC MECHANIC | 62 | 63,250/= Plus Special Allowance |
| PLUMBER | 50 | 63,250/= Plus Special Allowance |
| POWER GEN MECHANICS | 35 | 63,250/= Plus Special Allowance |
| WAREHOUSEMAN | 30 | 63,250/= Plus Special Allowance |
| REFRIGERATION TECHNICIAN | 10 | 63,250/= Plus Special Allowance |
| WATER SUPPLY TECHNICIAN | 15 | 63,250/= Plus Special Allowance |

Company Provide the following:- FREE FOOD – FREE ACCOMMODATION – FREE TRANSPORT – INSURANCE – UNIFORM & MEDICAL. CONTRACT PERIOD 02 YEARS & RENEWABLE.
IF YOU ARE INTERESTED ON THE ABOVE JOB COME IMMEDIATELY WITH YOUR PASSPORT – 03 NO'S WHITE BACKGROUND PHOTOGRAPHS & ALL YOUR TESTIMONIALS AND MEET ONE OF OUR RECRUITMENT OFFICER'S.

## டோகா - கட்டார்

### CATERING COMPANY

If You have Selected for the below job position with the salary offer and the terms and conditions of employment are in detail.

| CATERING | QTY | SRI LANKA RUPEES | |
|---|---|---|---|
| | | MINIMUM | MAXIMUM |
| **F&B CONTROLIER** Commerce graduate with a diploma in Hotel/Restaurant management with a minimum of 3 years relevant experience | 05 | 38,400 | 48,000 |
| **STORE KEEPER** Candidates with a diploma in Hotel/Restaurant management with 3.5 years relevant gulf experience | 05 | 32,000 | 38,400 |
| **CATERING SUPERVISOR** Candidates with a diploma in Hotel/Restaurant management with 3.5 years relevant gulf experience | 04 | 44,800 | 54,400 |
| **INDIAN COOK** Candidates with a relevant experience of 5 years and above. | 04 | 28,800 | 35,200 |
| **BUTCHERS** Candidates with a relevant experience of 5 years and above. | 08 | 22,400 | 28,800 |
| **CHAPATHI/PARATHA MAKER** Candidates with a relevant experience of 5 years and above. | 10 | 22,400 | 28,800 |
| **ASST COOKS** Candidates with a relevant experience of 5 years and above. | 10 | 22,400 | 28,800 |
| **SERVICE BOYS(STEWARDS)** Candidates with a relevant experience of 5 years and above with pleasing personality preferred and better English communication skills. | 08 | 22,400 | 28,800 |

# AL-QAREEM AGENCY (PVT) LTD.

## FOREIGN EMPLOYMENT AGENT

NO; 143, GRANDPASS ROAD, COLOMBO – 14

0112 332 026 - 0112 327460 - 0112 381403 - 0112 381404

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழு கற்றுக்கொண்ட பாடங்கள்

இலங்கை அரசினால் நியமிக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளிக்கப் போவதில்லை என மூன்று சர்வதேச அமைப்புக்கள் கூட்டாக மறுப்புத் தெரிவித்திருக்கின்றன. இதன்மூலம் இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவைச் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது வெளிச்சமாகியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக இந்த நல்லிணக்க ஆணைக்குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவின் விசாரணைகள் கடந்த மாதம் கொழும்பில் ஆரம்பமாகின. பின்னர் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களிலும் கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் இந்தக் குழுவின் விசாரணைகள் நடைபெற்றன.

கடந்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் இந்தக் குழுவின் முன் தமது சாட்சியங்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், கைதுகள், உயிரிழப்புக்கள் என்பவை தொடர்பாகவும் அவர்கள் தமது சாட்சியத்தில் விவரித்திருக்கிறார்கள். குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் யுத்தத்தின்போது தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை வெளியுலகுக்கு அப்பட்டமாக வெளிப்படுத்துபவையாக அமைந்தன.

யுத்தத்தின்போது தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை, சந்தித்த இழப்புக்களை எதுவித பயமுமின்றி துணிவுடன் இந்த மக்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் எடுத்துக் கூறியமை பலரையும் வியப்பிலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது. தமது பிள்ளைகள் தமது கண்முன்னால் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டார்கள் என்பதை ஆணைக்குழுவின் முன்னால் ஆணித்தரமாக அவர்கள் எடுத்துக் கூறியமை விசாரணை அதிகாரிகளைக் கூட அதிர வைத்தது.

இந்த விசாரணைகளின்போது விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கிய உறுப்பினர்களான திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன், மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத் துணைப்பொறுப்பாளர் பிரபாகரன் ஆகியோரின் மனைவிமார்களும் சாட்சியம் அளித்தனர். தமக்கு முன்னால் தமது கணவன்மார் கைது செய்யப்பட்டு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டதை அவர்களும் உறுதியுடன் கூறினார்கள். தமது கணவன்மாரின் தற்போதைய நிலை என்ன? என்பது பற்றியும் அவர்கள் ஆணைக்குழுவின் முன் கேள்வி எழுப்பினார்கள். இவர்களுடைய கேள்விக்குப் பதில் ஏதுவும் அங்கு கிடைக்கவில்லை.

இவ்வாறு ஆணைக்குழுவின் விசாரணைகள் பல மாவட்டங்களில் இடம்பெற்றபோதும் இந்த விசாரணைகளின் பெறுபேறு - உண்மைத் தன்மை எப்படி அமையப் போகிறது என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. ஆணைக்குழுவின் அமர்வு இடம்பெற்ற பல இடங்களின் நேரத்தைக் காரணம் காட்டி மக்களுக்குச் சாட்சியம் அளிக்க அனுமதி மறுக்கப்பட்டது. மாறாக மக்களின் கோரிக்கைகளை எழுத்துமூலம் தருமாறும் கோரப்பட்டது. இதனால் பல மக்கள் தம்மிடம் இருந்த பல உண்மைகளை வெளிப்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். இது தொடர்பாக இப்போது பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மக்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட அனைத்துச் சாட்சியங்களையும் ஆணைக்குழு அறிக்கை வடிவில் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்குமா? அல்லது அதிலும் தணிக்கைகள் இடம்பெறுமா? என்ற கேள்விகளும் எழுந்திருக்கின்றன.



உள்நாட்டில் ஆணைக்குழுவின் விசாரணைகள்

## சர்வதேச அமைப்புக்கள் நிராகரித்தமை இலங்கை அரசுக்குப் பெரும் அபகீர்த்தி

இவ்வாறு நடந்துகொண்டிருக்கையில் இது தொடர்பாகச் சர்வதேச ரீதியில் எழுந்துள்ள கருத்துக்கள் - வியாக்கியானங்கள் இலங்கை அரசைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியிருக்கின்றன. நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நிறுவி, விசாரணைகளை முன்னெடுப்பதன் மூலம் போர்க் குற்றங்களில் இருந்து தப்பிக்கொள்ள முயன்ற இலங்கை அரசுக்கு அந்த ஆணைக்குழுவின் விசாரணைகளே பெரும் தலையிடியாக அமைந்திருக்கின்றன.

இந்த ஆணைக்குழுவின் முன்பாக ஆஜராகிச் சாட்சியங்களை வழங்குமாறு இலங்கை அரசு சார்பாக ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.எம்.சமரக்கோன்

அதிரன்

எழுத்துமூலம் விடுத்த அழைப்பை சர்வதேச நெருக்கடிகள் குழு, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை ஆகியவை அடியோடு நிராகரித்திருக்கின்றன. இது தொடர்பாக உத்தியோகபூர்வக் கடிதம் ஒன்றையும் அந்த அமைப்புக்கள் கூட்டாக அனுப்பி வைத்திருக்கின்றன. சர்வதேச நெருக்கடிகள் குழுவின் தலைவர் லூயிஸ் ஆர்பர், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹெனத் ரூத், சர்வதேச மன்னிப்புச் சபை செயலாளர் நாயகம் சலீல் ஷெட்டி ஆகியோர் கையொப்பமிட்டு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

இந்த ஆணைக்குழு போதிய நம்பகத்தன்மையைக் கொண்டிருக்கவில்லை என்றும், அதனால் தண்டனை வழங்கக் கூடிய சாத்தியங்கள் இல்லை என்றும் இந்த அமைப்புகள் கூறியுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாகச் சுதந்திரமான அனைத்துலக விசாரணை தேவை.

போரின் இறுதி 12 மாதங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிக் கூடச் சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்படும் சாத்தியமில்லை.

இதனால் நல்லிணக்க ஆணைக்குழுவின் அழைப்பை நிராகரிக்க முடிவு செய்துள்ளோம்.

இலங்கையில் வரலாற்றில் அமைக்கப்பட்ட பல ஆணைகுழுக்கள் எதையும் செய்யத் தவறிவிட்டன.

போர் முடிவுக்கு வந்தாலும் கூட இலங்கையில் அவசரகால நிலை தொடர்கிறது.

அவசாரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் அளவில்லா அதிகாரம் பெற்ற படையினராலும் காவல்துறையினராலும் அரசுக்கு எதிராகக் கருத்து தெரிவிப்பவர்கள் இலக்கு வைக்கப்படுவது தொடர்கிறது.

கடுமையான இராணுவச் சூழலுக்குள் தான் வடக்கில் உள்ள தமிழர்கள் வாழ்கின்றனர் என்றும் அனைத்துலக மனிதஉரிமை அமைப்புகள் காரணம் தெரிவித்துள்ளன. இதன்மூலம் நல்லிணக்க ஆணைக்குழு சர்வதேசரீதியில் உண்மைத் தன்மையுடைய - சுதந்திரமான ஒரு அமைப்பாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது உறுதியாகியுள்ளது. ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கச் சர்வதேச அமைப்புக்கள் மறுத்தமை இலங்கைக்குச் சர்வதேச ரீதியில் ஏற்பட்டிருக்கும் விமர்சனத்தை மேலும் இரட்டிப்பாக்குவதாகவே அமைந்துள்ளது. இதனால் இலங்கை அரசும் பெரும் விசனமடைந்திருக்கிறது. சர்வதேச அமைப்புக்களையும் ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியம் அளிக்கவைப்பதன் மூலம் ஆணைக்குழுவுக்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைத்திருக்கிறது என்பதையும், ஆணைக்குழு சுதந்திரமாகவும் நம்பகத்தன்மையுடனும் செயற்படுகிறது என்பதையும் வெளியுலகுக்குக் காட்ட நினைத்த இலங்கை அரசுக்கு இந்த மூன்று அமைப்புக்களின் மறுப்பு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

இதனால் ஆணைக்குழுவில் சாட்சியமளிக்க மறுத்திருந்த வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகளை நல்லிணக்க ஆணைக்குழு சாடியுள்ளது.

தங்களுடைய தப்பு அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டு இவர்கள் ஆணைக்குழுவின் செயற்பாட்டை விமர்சிக்க முடியாது எனவும் அது தெரிவித்துள்ளது.

எது எவ்வாறாயினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமையப்போகின்றன என்பது பற்றிய கருத்துக்கள் பல தரப்பில் இருந்தும் இப்போது எழுந்துள்ளன. சர்வதேச அமைப்புக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு குழுவின் மூலம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் எந்த அளவு உண்மைத்தன்மை - நடுநிலைமை - சுதந்திரம் இருக்கும் என்ற கேள்விகளும் எழுகின்றன. இந்த விமர்சனங்களில் இருந்து தப்பிக்கொள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் விடயத்தை இலங்கை அரசு எவ்வாறு கையாளப்போகிறது என்பதே அடுத்துள்ள கேள்வி. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

யாழ்.நவீன சந்தையில் உள்ள கடை ஒன்றின் சோக்கேஸ், தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776306733, 0213201090. (104680)


# விழிப்புணர்வு செயலமர்வு

தென்மராட்சி, ஒக்.17

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 3,4 ஆம் வகுப்பு ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாடும்" ஊட்டச்சத்து தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வுகள் எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தரம் 3,4 ஆகிய வகுப்புகளிலிருந்து தலா ஒரு ஆசிரியரையும் பாடசாலை அதிபரையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (207)

# வீதி அகலிப்புப் பணிகள் நீர்வேலியில் ஆரம்பம்

யாழ்.பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகள் நீர்வேலி தெற்கு பிரதேசத்தில் ஆரம்பமாகியுள்ளன. தற்போது புத்தூர் சிறுப்பிட்டி பகுதிப் பணிகள் கட்டம் கட்டமாக நிறைவடைந்து வருவதையடுத்து வீதி அகலிப்புப் பணிகள் நீர்வேலிப் பிரதேசத்தில் ஆரம்பமாகியுள்ளன. (6-72)


வசீகரத் தோற்றத்திற்கு!
## சந்தனாலேப




(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பாச்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை, சவரம் செய்வதை இலகுவாக்கும்.

**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250. (சி/555203)



## கட்டட நிர்மாணப் பணியாளர்களுக்கான வெற்றிடங்கள்

யாழ்.குடாநாட்டிலும், தீவகத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டட நிர்மாணப் பணிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் உடனடியாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

* மேசன்மார், தச்சுவேலை செய்வோர், கம்பிவளைப்போர் உடனடியாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் சமுகம் தரவும்.
* காவலாளிகள் முன் அனுபவத்துடன் சிங்கள மொழியில் உரையாடக்கூடியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கிராம அலுவலரிடம் அண்மையில் பெற்றுக் கொண்ட நற் சான்றிதழுடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் உடனடியாக சமுகம் தரவும்.

முகாமையாளர்:
**வி.வி.இராமநாதன்&கொம்பனி (வ.து.)**
கிளை அலுவலகம் (யாழ்.குடாநாடு)
23, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.



## BOYS WORLD


யாழ் நகரில் முதன் முறையாக ஆடவரின் தேவைகளை 100% பூர்த்தி செய்யக்கூடிய BOYS WORLD புடவையகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம். இங்கு இறக்குமதி செய்யப்பட்ட தரமான நவீன Design களில் அமைந்த Denims, Shirts, T.Shirts, Trousers, casual wear, Cosmatic items. ஆகியவற்றை கொழும்பு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:-தீபாவளியை முன்னிட்டு விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும்.

213/1/1 கஸ்தூரியார் வீதி
லலிதா கட்டிடம் 1st மாடி
(ராஜா தியேட்டர் அருகாமை)
யாழ்ப்பாணம்.
T.P:-0773604830



## MBSL காப்புறுதி நிறுவனம்



இது முற்றிலும் Merchant Bank of Sri Lanka வங்கியின் உடமையாகும். அத்துடன் இக் காப்புறுதி நிறுவனமானது இலங்கை காப்புறுதி வாரியத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு, ஆயுள் மற்றும் பொதுவான காப்புறுதிகளை வழங்குவதற்கான அதிகாரத்தையும் கொண்டுள்ளது. எமது நிறுவனம் சர்வதேச தரப்படுத்தல் மத்தியஸ்தர்களினால் நன்மதிப்பும், உறுதியான பொருளாதார நிலமையையும் கொண்டுள்ள நிறுவனமாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது.

MBSL நிறுவனத்தின் பிரதானமான பங்குதாரர் ஆகிய இலங்கை வங்கி 100% இலங்கை அரசின் உடமையாகும். Merchant Bank of Sri Lanka வங்கியானது, MBSL காப்புறுதி நிறுவனத்தைப் பிரதான பங்குதாரர்களின் உறுதியான பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கிளை முகாமையாளர்**

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், நுவரேலியா, வெலிமட மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களுக்கான கிளை முகாமையாளர்கள்.
விண்ணப்பதாரிகள் 45 வயதிற்குட்பட்ட, பெறுபேறு அடிப்படையிலான அத்துடன் அவர்களது கிளைக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கிற்குத் தனது குழுவை கொண்டு நடாத்தக் கூடிய திறமையையும், இப்பதவியில் குறைந்தது 8 வருட அனுபவமும், அத்துடன் 5 வருட விற்பனை, விற்பனை முகாமைத்துவ அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரி அல்லது CIM, SLIM, CPM (Asia) அல்லது அதற்கு நிகரான தகுதியை கொண்டிருக்கவும் வேண்டும்.

**பிராந்திய முகாமையாளர் - வடகிழக்கு**

வவுனியாவை நிலையமாகக் கொண்டு யாழப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பிலுள்ள எமது கிளைக் காரியாலயங்களுக்குப் பொறுப்பாளராகவும், மேற்பார்வையாளராகவும் செயற்பட வேண்டும். இத்துறையில் 2 வருடத்திற்கு கூடிய அனுபவமும், ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதித் துறையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்ததிற்கான பதிவுகளை உறுதிப்படுத்த வேண்டும். விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரி அல்லது CIM, SLIM, CPM (Asia) அல்லது அதற்கு நிகரான தகுதியை கொண்டிருக்கவும் வேண்டும்.

**விற்பனை முகாமையாளர் - ஆயுட் காப்புறுதி / பொதுக் காப்புறுதி (நாடுமுழுவதும்)**

விண்ணப்பதாரர்கள் 25 வயதிற்கு மேட்டவராக இருக்க வேண்டும். தன்முனைப்பாற்றலுடன் வெளியில் சென்று வேலை செய்யக் கூடியவர்களாகவும், 5 வருட விற்பனை மற்றும் 3 வருட தொழிற்றுறை அனுபவமும் CIM, SLIM, CPM (Asia) அல்லது அதற்கு நிகரான தகுதியை கொண்டிருக்கவும் வேண்டும்.

**விற்பனைப் பிரதிநிதி - ஆயுட் காப்புறுதி / பொதுக் காப்புறுதி (நாடுமுழுவதும்)**

தன்முனைப்பாற்றலுடைய, செயலாற்றல் மிக்க, 22 வயதிற்கு மேற்பட்ட, வெளியில் சென்று வேலை செய்யக் கூடிய, குறைந்தது 2 வருட விற்பனை அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**குழுத் தலைவர் - ஆயுட் காப்புறுதி (நாடுமுழுவதும்)**

தலைமைத்துவப் பண்புகளும், பெறுபேற்று அடிப்படையில் விற்பனையில் இயல்பான திறமையுடையவர்கள், சாதிக்கும் திறமை கொண்டவர்கள், அத்துடன் தெளிவாக கதைக்கக்கூடிய தொடர்பாடல் திறமை வாய்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்குக் கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.
அனைத்து வெற்றிடங்களுக்கும் காப்புறுதித் துறையில் முன் அனுபவம், அத்துடன் பொருத்தமான பிரதேசத்தில் குறைந்தது இரண்டு மொழிகளில் பேசும் ஆற்றல் அவசியம்.

நீங்கள் தெரிவுசெய்யும் கிளைக் காரியாலயத்தைக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும். உங்கள் சுயவிபரக்கோவையில் இரண்டு உறவினரல்லாத சிபாரிசு செய்வோரைக் குறிப்பிட்டு,

முகாமையாளர்
MBSL Insurance Co. Ltd.
Total protection under one roof
388, காலி வீதி, கொழும்பு - 03.

முகவரிக்கு இவ் விளம்பரத் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் அல்லது kethakih@mbslinsurance.lk என்கின்ற மின்னஞ்சல் முகவரிக்கு அஞ்சல் செய்யவும்.
விண்ணப்பிக்கும் பதவியை அஞ்சல் உறையில் குறிப்பிடவும்.



**British Business School** இன் பாலர்பாடசாலைகளில் இன்று (17.10.2010) விஜயதசமி தினத்தில் காலை 7.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை ஏடு தொடக்கப்படும்.

மிகவிரைவில் கொக்குவிலில்...... கொக்குவில் மாணவர்கள் நல்லூரில் ஏடுதொடக்கலாம்.

மிகக்குறைந்த அனுமதிக்கட்டணம் (Admission Fees) முதலாம் வருடத்திற்கு மட்டுமே

**BBS இன் பாலர் பாடசாலை இன்று முதல் சங்கானையில்..!**
பிரதேச செயலகம் அருகில், நிகர வைரவர் கோவில் முன்பாக, சங்கானை.

சர்வதேச பாடத்திட்டம்,
விசாலமான விளையாட்டுத்திடல்,
மேலைத்தேய கற்கைநெறிகளுடன் சம்மந்தப்பட்ட கல்வி /விளையாட்டு உபகரணங்கள்.

வார இறுதிநாட்களில் பாடசாலைமாணவர்களுக்கும், பெரியவர்களுக்கும்ஆங்கில வகுப்புக்கள்.

சைவகுருமார்களாலும், கல்விமான்களாலும் எமது நல்லூர், கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நீர்வேலி, பருத்தித்துறை, சாவகச்சேரி வளாகங்களில் ஏடுதொடக்கப்படும்.

**BRITISH BUSINESS SCHOOL**
140, கோவில் வீதி, நல்லூர்.
Contact: 021 222 5796, 0773627055, [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மதத்தவர்களும் ஒன்றிணைந்தால் உலகில் சமாதானத்தை உருவாக்க முடியும்

## இலங்கைப் பேரவையின் தலைவர் நம்பிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.17

சமயத்தைச் சார்ந்தவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்பட்டால் இலங்கையில் மட்டுமல்ல உலகில் எங்கும் சமாதானத்தை உருவாக்க முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைப் பேரவையின் தலைவர் பெல்லன்வில விமல் ரத்ன தேரர்.

சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைப் பேரவையின் யாழ்.மாவட்ட ஒன்றியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது கல்லூரியில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

30 வருட யுத்தத்தின் பின்னர் தற்போது ஏற்பட்டுள்ள இந்த சூழ்நிலையில் நடக்கும் மாநாட்டில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த காலங்களில் சமயங்களுக்கு இடையில் பிரச்சினை இருந்தது உண்மைதான்.

சமயங்கள் ஒன்று சேர்ந்து எவ்வாறு செயற்படலாம் என புத்திஜீவிகள் சிந்திக்கின்றார்கள். மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமே இந்த அமைப்பு செயற்படுகின்றது.

எமது தலைமைக் காரியாலயம் நியுயோர்க்கில் இயங்கி வருகின்றது. ஐரோப்பிய நாடுகள், ஆசிய நாடுகளிலும் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. இலங்கையில் மட்டக்களப்பு, கண்டி, அம்பாறை, அனுராதபுரம், வவுனியா மாவட்டங்களில் ஆரம்பித்துச் செயற்பட்டு வருகின்றது.

அரசினுடைய கட்டுப்பாட்டில் இல்லாத சுயாதீனமான அமைப்பு இது. இந்த அமைப்பின் மாவட்ட உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றை சேர்ந்து கொழும்பில் விரைவில் மாநாடு ஒன்று நடத்த உள் ளோம் - என்றார்.

(த-204-15)



சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைப் பேரவையின் யாழ்.மாவட்டக் கிளையின் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்.திருமறைக்கலாமன்ற கலைத்தூது கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான தலைவர் பெலன்வில்ல விமல்ரத்ன தேரர், கண்டிபேராயர் ஷியனி பெர்ணான்டோ, சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள், திருமதி சிவாநந்தினி துரைசுவாமி, உம்மா பள்ளி வாசல் பிரதம மௌலவி மகன்லூட் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# நாட்டின் விசாலமான உப்பளம் கும்புறுப்பிட்டியில்

கொழும்பு,ஒக்.17

'கிழக்கின் உதயம்' திட்டத்தின் கீழ் இலங்கையிலேயே விசாலமான உப்பளத்தைத் திருகோணமலைப் பிரதேசத்தின் கும்புறுப்பிட்டியில் நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மீன்பிடித்துறை மற்றும் நீர் வளங்கள் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் தனியார் துறையின் ஒருங்கிணைப்பில் நிறுவப்படும் கும்புறுப்பிட்டி உப்பளம் 1,800 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்டிருக்குமெனவும் அதன் மூலம் ஆண்டொன்றுக்கு 50 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை உற்பத்தி செய்ய முடியுமென எதிர்பார்ப்பதாகவும், இதற்கான நிலப்பிரதேசம் அண்மையில் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த உப்பளத்தை நிறுவுவதன் ஊடாக 800 வரையான நேரடி வேலைவாய்ப்புக்களையும், 1,500 வரையான மறைமுக வேலை வாய்ப்புக்களையும் பெற முடியும் எனவும் அவர் கூறினார். (த-22)

# ஆயிரம் மாணவர்கள் என்றாலும் சிறையில் தள்ள அரசு தயங்காது

## உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. ஆவேசம்

கொழும்பு, ஒக். 17

மாணவர் போராட்டங்களில் ஈடுபடும் ஓரிரு மாணவர்களை மாத்திரமல்ல, 500 முதல் ஆயிரம் மாணவர்களை சிறையில் அடைக்கவும் அரசு தயங்காது - என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடந்த வியாழக்கிழமை உயர்க்கல்வி அமைச்சுக்கு எதிரில் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

மாணவர்கள் இடையில் மோதல் காரணமாக ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். பேராதனை பல்கலைக்கழகத்திற்கு நான் சென்றிருந்த போது 'ஹூ' எனச் சத்த மிட்டு - கல்வீச்சு நடத்திய மாணவர்களே கைதுசெய்யப்பட்டனர்.

இந்த மாணவர்கள் பகிடிவதை மற்றும் வன்முறைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். இச்சட்டத்தில் கைது செய்யப்பட்டால், நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்க முடியாது. மேல் நீதிமன்றம் மாத்திரமே பிணை வழங்க முடியும். இதற்குச் சிறிது காலம் செல்லும். அதுவரை அவர்கள் சிறையில்தான் இருக்க வேண்டும் -இப்படி அவர் கூறினார். (சி)

# வெல்லா வெளியில் வெள்ளியன்று யானை தாக்கி விவசாயி பலி

மட்டக்களப்பு,ஒக்.17

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பிரதேசத்தில் யானை தாக்கி இறப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை வெல்லா வெளிப் பகுதியில் வயலுக்குச் சென்ற தம்பிப்பிள்ளை உலகநாதன் (வயது-35) என்ற விவசாயி யானை தாக்கிப் பலியானார்.

கடந்த திங்கட்கிழமை முதல் நேற்று முன்தினம் வரை 3 விவசாயிகளும் பெண் ஒருவரும் யானை தாக்கிப் பலியாகி யுள்ளனர். இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

வெல்லாவெளி, வாகனேரிப் பகுதியில் இந்த மாதம் மட்டும் ஐவர் கொல்லப்பட்டனர் என்றும் இந்த வருடத்தில் நேற்று முன்தினம் வரை 8 பேர் பலியாகியுள்ளனர் என்றும் வன பரிபாலன திணைக் கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-ஐ)

# ஒவ்வொரு மாவட்டத்துக்கும் விளக்கமறியல் சிறைச்சாலை

## ஆலோசனைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு,ஒக்.17

மாவட்டங்கள் தோறும் விளக்கமறியல் சிறைச்சாலைகள் நிறுவப்பட வேண்டியுள்ளதென சிறைச்சாலைகள் புனரமைப்புத் தொடர்பான ஆலோசகர் குழு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் சிறைச்சாலைகளில் தற்போது நிலவும் நெரிசலைக்குறைத்துக் கொள்ள முடியும் எனவும் சந்தேக நபர்களுக்கு முறையான வசதிகள், புகலிடத்தை வழங்கவும், நிர்வாகச் செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும் எனவும் இந்த ஆலோசனைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது அனைத்து மாவட்டங்களுக்கும் மேல் நீதிமன்றங்கள்,நீதிவான் நீதிமன்றங்கள் அமைந்திருந்தாலும் அவற்றின் மூலம் நாளாந்தம் விளக்க மறியல்களுக்கு அனுப்பப்படுவோரைத் தடுத்து வைப்பதற்கான சிறைச்சாலைகள் அந்த மாவட்டங்களில் அமைக்கப்படவில்லை எனவும் மேற்படி குழு தெரிவித்துள்ளது.

(த-22)

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 17ஆவது ஆண்டு நிறைவுவிழா நாளை

வவுனியா,ஒக்.17

இலங்கையில் உள்ள 18 தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஒன்றான வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 17ஆவது ஆண்டு நிறைவுவிழா நாளை திங்கட்கிழமை பீடாதிபதி கே.பேர்ணாட் தலைமையில் கல்லூரியில் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் வருடாந்த சஞ்சிகையான 'வித்யா தீபம்' வெளியீடும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் 'என்றெப்' நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எஸ்.சிவகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களான சோ.சந்திரசேகரன், மா.கருணாநிதி மற்றும் கலாநிதி எஸ்.எஸ்.சிவகுமார், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தைச் சேர்ந்த கலாநிதி கந்தையா சிறிகணேஸ், கலாநிதி அ.புஸ்பநாதன், கலாநிதி திருமதி ந.அனந்தினி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் உப பீடாதிபதி கலாநிதி க.இரவீந்திரன், கலாநிதி செல்வி நி.நல்லையா (யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

1993ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி மூவின, நான்கு சமயப் பிரிவுகளையும் சேர்ந்த மாணவர்களை உள்வாங்கி இதுவரை 3000இற்கும் அதிகமான ஆசிரியர்களை உருவாக்கியுள்ளது. அத்துடன் பத்து பாடநெறிகளை மும்மொழிகளிலும் நடத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

# இறுதிக் கட்ட யுத்தத்தில் இலங்கைக்கு இந்தியா காத்திரமான உதவி வழங்கியது

## டில்லியில் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

இறுதிப் போரின்போது இந்தியா தெரிந்தும் தெரியாமலும் பல முக்கியமான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது - என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளி விவகாரக் கொள்கைக்கு இந்தியாவே ஆதாரமாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

டில்லி சென்றுள்ள அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அங்கு இந்திய ஊடகவியலாளர் ஒருவருக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இருள் சூழ்ந்த நேரத்தில் இந்தியா எமக்கு உதவியது. நான்காவது கட்ட ஈழப்போரின் போது இந்தியா முக்கியமான உதவிகளை வழங்கியுள்ளது. இரு நாடுகளினதும் தலைவர்களுக்கும் இடையில் நெருக்கமான ஒத்த கருத்துகள் காணப்படுகின்றன.

மூடுபனி போன்றிருந்த இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் புதுப்பித்திருந்தார். அது தற்போது மேலும் வலுவடைந்துள்ளது.

100 கோடி டொலர் பெறுமதியானபல்வேறு மீள்கட்டுமான உதவிகளையும் இந்தியா வழங்கியுள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்காக 50,000 வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறது- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# தமிழ் வர்த்தகர்களிடம் கப்பம் கோரும் சம்பவங்கள் மீண்டும் அரங்கேற்றம்!

## பிரபா கணேசன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

தமிழ் வர்த்தகர்களைக் கடத்திச் சென்று கப்பம் கோரும் சம்பவங்கள் மீண்டும் நடைபெறுகின்றன - என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னைய காலங்களில் தமிழ் பேசும் வர்த்தகர்களைக் கடத்திச் சென்று கப்பம் கோருவது எமது கடும் முயற்சியால் தடுத்து நிறுத்தப்பட்டது. இன்று மீண்டும் இவ்வாறான சில சம்பவங்கள் நடைபெறுகின்றன. அண்மையில் செட்டியர் தெரு வர்த்தகர் ஒருவரும் இவ்வாறு கடத்திச்சென்று கப்பம் கோரும் சம்பவத்திற்கு உள்ளாகியுள்ளார் என அறிய முடிகின்றது.

மேலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றாலும் சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸாரிடமோ, மக்கள் பிரதிநிதிகளிடமோ சென்று முறைப்பாடு செய்ய அஞ்சுகின்றார்கள். இதனால் இப்படிக் கப்பம் கோரும் நபர்களைச் சட்டத்திற்கு முன்கொண்டுவர முடியாதுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் தைரியமாகச் செயற்பட்டால்தான் இவ்வாறான சட்ட விரோதச் செயல்களை முறியடிக்க முடியும்.

அண்மையில் செட்டியார் தெருவில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கப்பம் கோரியவர்களைக் கைது செய்திருக்கின்றனர் என அறியமுடிகின்றது. குற்றப் புலனாய்வுப் பிரிவினரைப் பாராட்டும் அதேவேளை, ஏற்கனவே இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரைத் தொடர்பு கொண்டு கப்பம் கோருபவர்களை அடையாளம் கண்டு கொள்ளலாம். இதன் மூலம் தாங்கள் கப்பம் செலுத்திய பணத்தை மீளப் பெறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படலாம்.

ஆகவே தெமட்ட கொடையிலுள்ள கொழும்பு குற்றப் பிரிவு புலனாய்வுத்துறையினருக்குச் சம்பந்தப்பட்டவர்கள் தங்களது முறைப்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# இந்திய அழுத்தத்துக்கு அடிபணிந்தே புலிகளுடன் யுத்தம் செய்தார் மஹிந்த

## ஜயலத் ஜயவர்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசும் ஒருபோதும் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்ததில்லை என்று கூறுவது அப்பட்டமான பொய் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன லண்டனில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியாவின் அழுத்தத்துக்கு அடிபணிந்தே ஜனாதிபதி மஹிந்தவின் அரசு புலிகளுடனான யுத்தத்தை முன்னெடுத்திருந்தது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒரு காலத்தில் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இந்திய அரசு செயற்பட்டதன் காரணமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் பிரேமதாஸ போன்றோர் ஜனாதிபதியாக இருந்த காலங்களில் புலிகளுக்கு எதிரான போரைத் தீவிரமாக நடத்த முடியாமற் போனது என்றும் பின் வந்த காலங்களில் நடைபெற்ற சில சம்பவங்களின் அடிப்படையில் புலிகளை முற்றாக ஒழித்துக் கட்டும் நிலைப்பாட்டுக்கு இந்திய அரசு தள்ளப்பட்டது எனவும் அவர் கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலப்பகுதியில் அந்த நிலைப்பாடு அதி தீவிரமாக முனைப்புப் பெற்றிருந்தது எனவும், அதன் காரணமாக அவர் நினைத்திருந்தால் கூட யுத்தத்தை நிறுத்தியிருக்க முடியாது என்றும் இந்தியாவின் அழுத்தத்துக்கு அடிபணிந்து இந்திய ஆதரவுடன் யுத்தத்தை முன்னெடுப்பதைத் தவிர அவருக்கு வேறு தெரிவுகள் எதுவும் இருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் ஜனாதிபதி மஹிந்தவின் அரசு தாம் எந்தவொரு வெளிநாட்டு அழுத்தத்துக்கும் அடிபணியவில்லை என்று கூறுவது அப்பட்டமான பொய் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

சரத் பொன்சேகாவுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையானது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தியஸ்தர் சபையின் செயற்பாடு இன்று இல்லை

பருத்தித்துறை மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை விஜயதசமி தினத்தன்று நடைபெறமாட்டாது என்று சபையின் தவிசாளர் ஆர்.வடிவேலு அறிவித்துள்ளார். (ஓ-16)

## கண்ணீர்க் காணிக்கை



**அமரர் இராமலிங்கம் கந்தையா**
(முன்னாள் காணி உத்தியோகத்தர், சமாதான நீதிவான்)

அன்பான அண்ணரும் பண்பாளரும் விநாயக பக்தருமான அமரர் இராமலிங்கம் கந்தையா அவர்களது மறைவு குறித்து வருந்துவதுடன் எமது கண்ணீரைக் காணிக்கையாக்கி அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நெடுந்தீவு. (சி/571968) கோபாலசிங்கம் குடும்பம் (சகோதரி ).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில்
22
*
04
*
1947



மேலுலகில்
28
*
09
*
2009

**அமரர் சோமேஸ்வரசர்மா விமலாதேவி**

*திதி: விஜயதசமி (17.10.2010)*

அன்புள்ள அம்மா!
நீங்கள் காற்றோடு கரைந்து ஓர் ஆண்டு கரைந்தது
எங்களோடு வாழ்ந்த காலங்கள் மறக்க முடியாதவை
பாலும் தேனுமாய் இனிக்கும் உங்கள் நினைவுகள்
இன்றுவரை இனித்தபடியே இருக்கின்றன.
நாம் எல்லோரும் ஒன்றாகக் கூடி மகிழ்ந்த காலங்கள்
இப்போது நீங்கள் இல்லாது வெறுமையாக...
நீண்டகாலம் எம்மோடு வாழ்வீர்கள் என நாம் எண்ண...
போதும் என்று விஜயதசமியில் இறைவனோடு நீங்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்யும்

அருளானந்தப்பிள்ளையார் கோயிலடி,
கந்தரோடை, சுன்னாகம். (104693)

குடும்பத்தினர்.

---

இன்று 17.10.2010 (ஞாயிறு)
யாழ்.நகரில், மீண்டும் ஆரம்பம்
விகிர்தி வருஷ, விஜய தசமியில்

## ஸ்ரீகுமரன் புத்தகசாலை

154, நாவலர் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 3219484

## வாகனங்கள் விற்பனைக்கு

WP.LH - XXXX தொடர் இலக்கமுடைய சிறிது காலம் பாவித்த (1777 km மட்டும் ஓடியது) டீமோ பட்டா (அலுமினியப் பொடியுடன்) வாகனமும் 60 - XXXX தொடர் இலக்கம் கொண்ட நல்ல நிலையில் உள்ள TATA 909 (ஒற்றைக்கதவு) Bus உம் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6951680

## விற்பனைக்கு

SLT CDMA PHONE உடன் External Antana உடன் விற்பனைக்குண்டு. விலை 5000/= பெயர் மாற்றிக் கொடுக்கப்படும். தொடர்பு: 0212230126 (104607)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆசிரியர் B.A, வயது 39, சுவாதி, செவ்வாய் தோஷம் இல்லை, 1 ஆம் சுற்று கிரக பாவம் 17,3 சுற்று பாவம் 33 மணமகளுக்கு பொருத்தமான வரன் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 0771875186 (104688)

## விற்பனைக்கு

*நல்லநிலையில் உள்ள, வெள்ளை நிற, ISUZU டபிள்கப் (பிக்கப்) விற்பனைக்குண்டு. நிறுவனங்களுக்கும் வீட்டுப் பாவனைக்கும் ஏற்றது.*

தொடர்பு:
0776306733, 0213201090. (104681)

## காணி, வீடு விற்பனைக்கு

செம்மணி வீதியில் யாழ்ப்பாண கல்வி வலயத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் 6 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

மற்றும் பாரதி ஒழுங்கையில் செம்மணி வீதியும் ஆடியபாதம் வீதியும் இணையும் சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் 18 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
தொ.பே.இல: 0771543471

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு மகேந்திரன்**
*(J/95 கிராம சேவையாளர்)*

எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது
வாழ்க்கை என்னும் ஓடத்திலே
வாழ்ந்து வந்தோம் மகிழ்வுடனே
பாதிவழியில் எம்மைப் பரிதவிக்க
விட்டதேனோ

நான்காண்டுகள் சென்றதப்பா
எம் வாழ்வு இப்படியானதப்பா
சொல்லத் துடிக்குது மனசு - ஆனால்
சொல்ல முடியாது தவிக்குது அப்பா
கண் இருந்தும் குருடானோம்
காதிருந்தும் செவிடானோம்
வாயிருந்தும் ஊமையானோம்-அப்பா
நீங்கள் இல்லா எம் வாழ்க்கை
இருளிலும் கொடியதப்பா
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

77, பாரதி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

***திருமதி சோமசுந்தரம் சின்னப்பிள்ளை***



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சின்னப்பிள்ளை (10.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் இராசரத்தினத்தின் (கனடா) அன்புத் தாயும் சறோசாதேவியின் (கனடா) அன்பு மாமியும் றஜீவன் (கனடா), றஜீதரன் (லண்டன்), றஜீந்தன் (கனடா), றஜீகரன் (கனடா), றஜீலன் (கனடா), றமணதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியை இன்று (17.10.2010) ஞாயிறு மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
*ஆ.சோமசுந்தரம் (கணவர்),*
*இராசரத்தினம் (மகன்) கனடா.*

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை. (104747)*

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி, நன்றி நவிலல் 7ஆம் மாத நினைவஞ்சலி



அன்பான ஐயா,அம்மா

அறிவாலும் அன்பாலும் எமக்கு நல்வழி காட்டி, நல்லகாலம் இது கெட்ட காலம் இது என ஐயா தங்கள் சோதிட முதிர்ச்சியால் புத்தி புகட்டி அன்பு, எளிமை, அடக்கம் என எம்மை உற்றார், உறவினர், நண்பர்களு டன் இன்முகத்துடன் வாழப்பழக்கி, இன்று வானுறையும் தெய்வங்களாகி விட்டீர்கள். என் றும் உங்கள் ஆசியுடன் எங்கள் வாழ்க்கை தொடர காவற் தெய்வங்களாக இருங்கள் அன்னை, தந்தையே!

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

கடந்த 18.09.2010 அன்று
இறைவனடி சேர்ந்த எமது
குடும்பத் தலைவர்
அமரர் பொன்னையா மார்க்கண்டு
அவர்களின் இறுதிக்
கிரியைகளில் கலந்துகொண்டு
பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும்
அனுதாபச் செய்திகள் மூலம்
ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்,
நண்பர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவிப்பதுடன்
நளை (18.10.2010) திங்கட்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும்
ஆத்ம சாந்திப்
பிரார்த்தனையிலும் தொடர்ந்து
நடைபெறும் மதியபோசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு
அழைக்கின்றோம்.



தோற்றம் 25.03.1918 மறைவு 18.09.2010

**அமரர்**
**பொன்னையா மார்க்கண்டு**
(ஓய்வுபெற்ற கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தரும், பிரபல சோதிடரும்,
திதி: வளர்பிறை ஏகாதசி

தோற்றம் 27.11.1922 மறைவு 14.03.2010

**திருமதி**
**சரஸ்வதி மார்க்கண்டு**

20, டச் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பயணத்திற்கு சொல்லவில்லை

திருமலை சுந்தா

அமைதியோடு இருக்கும் விறாந்தைக்கு மின் விளக்கு ஒளிகொடுத்துக் கொண்டிருந்தது. சாய்வான நாற்காலிகளும், சீமெந்து நிலமும், ஏழெட்டு ஜென்மங்களால் சூடேறிக் கொண்டிருந்தன. ஆழ்ந்த உறக்க அமைதி நீண்டுகொண்டேயிருந்தது.

கதவு நிலையோடு சாய்ந்திருந்த ஆச்சியும், விரித்திருந்த பாயில் நீட்டி நிமிர்ந்து படுத்தபடி பல்ப் வெளிச்சத்திற்குக் கண்களை மூடித்திறந்தபடியிருக்கும் அப்புவும் அரை நித்திரையில் ஆழ்ந்த குழந்தையொன்றும், பாண்டி விளையாடிக்கொண்டிருக்கும் பன்னிரண்டு வயதுப் பிள்ளைகள் இரண்டும். வாசல்படியில் குந்தியிருந்து கால்களை ஆட்டிக்கொண்டிருக்கும் அடுத்த வீட்டுப்பொன்னம்மா பெத்தாவுந்தான் இந்த விறாந்தையின் அமைதியின் கீறல்கள்.

'பொலிஸ், இஞ்சவா... நீயும் யாழ்ப்பாணம் எங்க கூட நாளைக்கு வாறியா?....' அமைதியின் காரணகர்த்தாவான காந்தன், அந்த வீட்டின் நாயினை அழைத்து அமைதிக்கு முற்றப்புள்ளி வைத்தது, மற்றவர்களுக்குப் பரபரப்பூட்டியது.

'தம்பியா.... உன்ர கொண்ணரிட்ட ஒரு சொல்லுகூட சொல்லாம நீயி நாளைக்குப் பஸ் ஏறுறது சரியில்லை. எப்படித்தான் பிழை செய்திருந்தாலும் கூடப்பிறந்த பிறப்பல்லவா. இது என்ர முகத்துக்காவது போயிட்டு வாவன் ஒருக்கால்....'

பாயில் படுத்திருந்த அந்த வீட்டின் தலைவர் அப்பு. இப்படிச் சொன்னதைக் கேட்டிட, காந்தனுக்குச் சிரிப்புத்தான் பொத்துக்கொண்டு வந்தது. 'எணை அப்பு.... கூடப் பிறந்ததென்றாலும் எங்களை வெளியில துரத்தினது துரத்தினதுதானே, வெளியில தள்ளக்க கொஞ்சம் யோசிக்க வேணாமா? ஏச்சு... ஏச்சு தான். துரத்தினது... துரத்தினதுதான். அவ வுக்கு அண்ணன் பயப்படேக்க, அங்க இன்னுமா போகச் சொல்லுறியள்... நானும் இனி போகல்ல... போய் எதையும் கேட்கவும் விரும்பல்ல...'

காந்தன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த பக்கத்து வீட்டுப்பெத்தா, வாயினைத் திறந்து, தனது அறுபத்தொன்பது வயதின் அனுபவ வார்த்தைகளை சொல்லத் தொடங்கினாள். 'ஒரு தரம் சூடுபட்ட பூனை உறிக்கு போகாது.' காந்தனும், கீதாவும் - கீதாவின் தம்பியும் போய் என்ன ஏச்சு வேண்டியிருக்காங்க அவங்கட்ட! அட.... வீட்டதான் தேடி வந்திட்டுதுகளேயென்றாவது கொஞ்சமாவது அந்தப்பாவி மனுசிக்கு இரக்கமாவது வந்திச்சா!! தம்பியா! உனக்கு ரோசங் இருக்குமென்றால் உன்ர கொண்ணன் வந்து கூப்பிட்டால் ஒழிய அங்க இனிமேல் போகதை. நாளைக்கு ஊருக்குப் போறதையும் நீயேன் வலியச் சென்று சொல்ல வேணும்?

'......'

**திருமலை சுந்தா திருகோணமலையைச் சேர்ந்தவர். 1960 களில் ஈழத்துத் தமிழ்ச்சிறுகதைத் துறையில் இணைந்து கொண்ட இவரது சிறுகதைகள் ஈழத்தின் பிரபல பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. இவரது சிறுகதைத் தொகுதிகள் வேள்வி, வீதியோரத்துக் கனவுகள், நாளையைத் தேடும் மனிதர்கள். 1974 ஆம் ஆண்டில் 'சுதந்திரன்' பத்திரிகையில் வெளியான இவரது 'பயணத்துக்குச் சொல்லவில்லை' சிறுகதை இங்கு இடம் பெறுகிறது.**

'எணை நீ இஞ்ச வந்தால் சும்மா இரன். அரளை பெயர்ந்த கதை கதைக்கிறியே நீ! சண்டையைத் தீர்க்க வழிய சொல்லலாம். நீ பெரிய போருக்கே ஆயத்தமாக்கிறியே' வீட்டுக்கார அப்புவின் மனைவி ஆத்திரத்தோட கத்தினாள்.

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 169**

அனைத்தையும் கேட்டபடியே அமைதியாக இருந்த காந்தனின் மனைவி கீதா தன் கண்களைத் துடைத்துவிட்டு, கன்னத்தில் கைகளினை ஊன்றியபடியே நிமிர்ந்து சுவரில் கொழுவிருந்த சத்திய சாயிபாவா படத்தினைப் பார்க்கலானாள். சாயிபாவாவின் ஏதோவொரு ஞாபகம் - ஐந்து நாள்களுக்கு முன்பாக தொடங்கி இன்றுவரை தொடரும் பிரயாண பிரச்சினைகளையும் - சம்பவங்களையும் நினைவூட்டத் தொடங்கிற்று.

பஸ்ஸில் இருந்து இறங்கியதும், தெரிந்த அலங்கார வெசாக் பந் தலைக் கண்டதும் பிரமித்தபடியே நிற்கும் தன்னை ? 'பிள்ளை... பிறகு ஆறுதலாய் பார்க்கலாம்.... வா வீட்டபோவம்....' என்று அப்பு அழைத்தபோதுதான் தங்களை பஸ் ஸ்ரேண்டில் இருந்து கூட்டிக் கொண்டு போக அவர் வந்திருக் கிறார் என்பதை உணரலானாள் கீதா.

கலியாணம் செய்த ஆறு மாதத்துக்குள் நீர்கொழும்பு - புத்தளம் - மன்னார் - கொழும்பு இப்படி எல்லா ஊருக்கும் போய், திருகோண மலைக்குப் போகவேண்டுமென்ற ஆசையின் நிமித்தம் தானும் அவரும், தன் தம்பியும், வருவதாக அறிவித்ததன் பலனே, அப்பு தங்களை அழைக்க வந்தாரென்பது கடிதமெழுதின கீதாவுக்குத் தெரியாதா? திருகோணமலையில் தங்களுக்கென்று ஒரு உறவென்றால் - தனது அம்மாவின் ஒன்றுவிட்ட தகப்பனும் அவர் குடும்பமும் தான் என்பதைத் தனது தகப்பன் அடிக்கடிச் சொல்லித் தூண்டிய உணர்வே. ஊர் பார்க்க திருக்கோணமலைக்குப் போகவேண்டு மென்று நினைத்தபோது - நினைவுக்கு வந்தது.

(20 ஆம் பக்கம் பார்க்க.....)

# அதியமானும் ஔவையாரும்

அதியமான் நெடுமானஞ்சி சேரநாட்டின் ஒரு பகுதியை ஆண்ட மன்னன். இரப்போர்க்கு இல்லையென் னாது வாரிவழங்கும் கொடைத் திறன் மிக்கவன். தமிழ்ப் பாடல் பாடிவரும் பாணருக்கும் விறலியர்க்கும் பரிசிலும் வழங்கிக் கௌரவிப்பவன். அதேநேரம் தோல்வி அறியாத போர்வீரனும் ஆவான்.

ஒருமுறை, அறியமானைக் கான ஔவையார் சென்றிருந்தார். அவனது புகழ்கேட்டு, காடும் மலையும் கடந்து நடந்து வந்த ஔவையார், அவனது வாயிலில் நின்று அவன் புகழ்ப்பாடினார்.

ஆயினும், ஔவையாரை வரவேற்க அதியமான், உடனே வாயிலுக்கு வரவில்லை. அது ஔவையாருக்குப் பெரிய ஏமாற்றம்!

''சோற்றுக்காக வாழும் வாழ்க்கை எம்முடையதல்ல; உணவுக்காகவா இவ்வளவு தூரம் வந்தேன்! இவனைப் பற்றிப் பலருங் கூறக்கேட்டதன் பயனாய் இதனை அறிந்து செல்லலாமென வந்தேன்.'' என எண்ணிய ஔவையார், திரும்பிப் போகுமுன், தனது மனநிலையைப் பற்றி வாயிற்காவலனிடம்,

''வாயிலோயே! இங்கே வரும் புலவர்களது நிலைமைகளை அறிந்து அவரவர் தகுதிக்கேற்ப பரிசிலும் உண்டியும் வழங்கும் மனநிலை கொண்ட மன்னவன் வாயிலோயே! நெடுமானஞ்சி தனது தரத்தை அறிந்திலனோ? அன்றி எனது தரத்தையாவது அறிந்திலனோ? உலகம் இன்னும் பெரியதாக வறுமை அடையவில்லை. யாம் எத்திசைச் செல்லினும் அத்திசையில் சோறு கிடைக்கும்'' என்னும் கருத்துடைய இப்பாடலைக் கூறுகின்றார்.

''வாயிலோயே! வாயிலோயே!
வள்ளியோல் செவி முதல்
வயங்குமொழிவித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடைய உள்ளத்து
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே!
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்னறி யலன்கொல்? என்னறியலன் கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுத்தலை உலகமும் அன்றே, அதனால்
காவின் எம்கலனே, சுருக்கின் எம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறா அர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே!''
[புறம் 206]

வாயிற்காப்போன் இப்பாடலைக் கேட்டதும், ஔவையாரின் மனம் புண்பட்ட தன்மையை உணர்ந்தான். விரைந்து சென்று மன்னவனுக்குக் கூறினான்.

அதியமான் கவலையுடன் ஓடோடி வந்தான். ஆறுதல் கூறி ஔவையாரை உள்ளே அழைத்துச் சென்றான்.

ஒரு அரசனுக்கு இருக்கக்கூடிய பலவித பணிகளுக்கிடையில் தன்னைக் கவனிக்காமல் இருந்தது பெரிய செயல் அல்ல எனத் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு அரசனுடன் சென்றார் ஔவையார்.

இவ்வாறு அதியமான் - ஔவையார் முதல் சந்திப்பு இருந்தாலும் அந்த இரு அன்புள்ளங்களின் நட்பு நாளும் வளர்ந்து வந்தது.!

செயற்கரிய யாவுள; நட்பினது போல்
வினைக்கரிய யாவுள காப்பு. என்னும் வள்ளுவர் இலக்கணத்துக்கு இலக்கியமாக இருவர் நட்பும் விளங்கியது. இதனால் தமிழகம் மிகுந்த நன்மை பெற்றது; பல நல்ல செயல்களை அதியமான் செய்து முடித்தான்!

மேலும், ''விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்து எனினும் வேண்டற்பாற் றன்று'' என்னும் தமிழரின் விருந்தோம்பல் நாகரிகத்தின் இலக்கணத்துக்கும் இலக்கியம் கிடைத்தது அதியமானின் செய்கைத்திறனால்.



**இலக்கியக் காட்சி 61**

ஆம். அதியமானுக்கு அந்நாளில், கிடைத்தற்கரிய மலை நெல்லிக்கனியொன்று கிடைத்தது. அதனை உண்பவர் அதிக காலம் உயிர்வாழலாம். ஆயின், அதனைத்தான் உண்டு அதிக காலம் உயிர்வாழ அவன் ஆசைப்பட்டானில்லை.

பொதுவாகத் தன்னலம் கருதும் மக்களே அதிகம் உள்ள இவ்வுலகில், அதியமான் ஒரு புதுமையானவனாக இருந்தான்.

''மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்''
என எண்ணியது அவனது மனம்.

போர்த்திறனும் கொடைத்திறனும் மிக்க அதியமான், போர்க் களத்தில் எத்தனை பகை உயிர்களைக் கொன்றிருப்பான். ஆயினும், கற்றறிந்த ஒரு புலவர் உயிருடன் நீண்டகாலம் வாழ்வதைப் பெரிதாக மதித்தான்.

அரசனோ அன்றி வேறு யாரோ அல்லவை செய்தால் அவர்களை நெறிப்படுத்தியும், கொடுங்கோல் வேந்தரை அறநெறிப்படுத்தியும் வாழுகின்ற புலவர்களே நாட்டு மேலானவர்கள் என்று எண்ணினான்.

அதனால், தனது உயிரைவிடத் தன் நட்புக்குரிய ஔவையாரின் உயிர் பலமடங்கு மேலானது என்னும் கருத்து அதியமானின் மனதில் உதித்தது.

எனவே, ஔவையாரை அன்புடன் வரவழைத்தான். தான் அரிதிற் பெற்ற அந்த நெல்லிக்கனியை உண்ணும்படி அவரிடம் கொடுத்தான். அதன் மகிமைபற்றி அவன் எதுவும் கூறவில்லை.

ஔவையார் நெல்லிக்கனியை உண்டபின்னர்தான் அதன் பெருமைபற்றி அவருக்கு விளக்கினான்.

ஔவையாரின் உள்ளம் நடுக்குற்றது! எவ்வளவு பெரிய செயலை அதியமான் மிக எளிதாகச் செய்துவிட்டான்!

மனிதன் செய்யக்கூடிய செயலா இது? 'மாதொரு பாகத்து அண்ணலை ஒப்பான் இம் மாண்புடை மன்னன்' என ஔவையின் உள்ளம் பூரித்தது!

பெருமலை விடரகத்து அருமிசைக்கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே!

என இரக்கமும் பெருமிதமும் கொண்டு பாடினார் ஔவையார்.

அது கேட்ட மன்னன், அத் தீங்கனியினைத் தின்னத் தகுதியுடையவர் ஒண் தீந் தமிழ்ப் பாடல் வல்ல ஔவையாரே என அவரின் பா நலம் வியந்து பாராட்டினான்.

சிறு குழந்தைகளின் மழலை மொழிகளைக் கேட்டுப் பெற்றோர் மகிழ்வதுபோல, நீயும், உன் அருளால் பிறந்த எனது மழலைப் பாட்டை உயர்வாகப் புகழ்ந்து பேசுகின்றாய் என ஔவையாரும் அதியமானைப் பாராட்டினார்.

''குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள்
மழலைச் சொற் கேளா தவர்''
என்ற குறள் இலக்கணம் இங்கே இலக்கியமாகிறது!


பரிசில் வழங்கத் தாமதித்தமைக்காகக் கோபங்கொண்ட ஔவையாரை இங்ஙனம் அன்புக் கயிற்றால் பிணித்துத் தமிழ் இலக்கியம் உள்ளவரை மறக்க முடியாத நண்பர்களாக வாழ்கின்றான் அதியமான் நெடுமானஞ்சி!

*****

- நா.நல்லதம்பி, மட்டுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
17.07.1977

உதிர்வு:
17.10.2004

## ஆறுமுகம் மகேஸ்வரன்

(உரிமையாளர்,
அருண் ஹாட்வெயர்)


அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்!
புன்னகையுடன் வாழ்ந்தாயே இறையடி சேர்ந்து
ஆண்டுகள் ஆறு சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அறிவாலயம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

(104654)

குடும்பத்தினர்.

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
25.03.1947

மறைவு:
21.09.2007

அமரர்

## தாமோதரம்பிள்ளை இராசநாயகம்

(உரிமையாளர், கிரியோன் கூல்பார்,
சாவகச்சேரி)

திதி:தசமி (17.10.2010)

மூன்று ஆண்டுகள் ஓடி முடிந்ததப்பா
ஆண்டுகள் பல ஓடிக் கழிந்தாலும்
உம் நினைவுகள் என்றும்
எம்மைவிட்டு நீங்கா

"லாவண்யம்"
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(104711)

என்றும் நினைவுடன்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.




அண்ணா அன் கோ

551/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 2220171 Fax: 021 2220172
E mail: aac.jaffna@gmail.com



Internet Cafe
Gaming Zone
Communication
Coffee Shop
Call Taxi

வீடியோ கோல் 1மணித்தியாளத்திற்கு ரூ: 60/=
(Web Cam with Browsing)
Colour Photocopies & Print outs, Laminating,
Binding, Stationeries, Accessories, Scanning
CD, DVD Writing & Converting
Soft Drinks, Ice Creams, Tea
Net 2 Phone, Online Movies,
IDD & Local Calls Calling Cards & Reloads.




நேரம்: (Opening Hours) 6.00am - 10.00pm

கலர் போட்டோ கொப்பி மற்றும் பல சேவைகள்

With the Best Compliments From:

# ESWARRAN
Traders & Transport Service



ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்விஸ்
அதிசொகுசு பஸ்சேவை
யாழ்ப்பாணம் ⟺ கொழும்பு

★தீபத் திருநாளை முன்னிட்டு 10.11.2010 ஆம் திகதிவரை விசேட கட்டணக்குறைப்பு
★தனிவழிக்கட்டணம்-1000/- மட்டும் இருவழிக் கட்டணம்-1900/-
★முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட பொதிகள் சேவைக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
★உள்ளூர் விவசாயிகளின் நன்மைகருதி உள்ளூர் உற்பத்திப்பொருள்களை தம்புள்ள, புத்தளம் மற்றும் கொழும்பு கொண்டு செல்வதற்கு 1 கிலோவுக்கு 1.50 மட்டுமே அறவிடப்படும்.
★மேலும் உள்ளூர் விவசாய உற்பத்திப்பொருள்களை வெளிமாவட்டங்களில் விற்பனை செய்வதற்கு விவசாயிகள் எம்முடன் தொடர்புகொண்டால் அதற்கான ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.




ESWARRAN
Traders & Transport Service

இல.115, 69,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222813/2224317/0773865439

இல.01, கரடிப்போக்கு,
கிளிநொச்சி. (செலான் வங்கிக்கிளை அருகில்)
தொ.பே: 0212285306
பக்ஸ்: 0212285307

இல.201B, டாம் வீதி,
கொழும்பு-12
தொ.பே: 0112433889
பக்ஸ்: 0112435247


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மண்ணில் தமிழ் செம்மொழி மாநாடு

## ஈழத்தின் தமிழ் வளர்ச்சிக்கு கனதியான பங்களிப்பு நல்கிய முஸ்லிம் அறிஞர்கள்

**சந்திரசேகர ஆசாத்**

உலகம் முழுவதும் பேசப்பட்டுவரும் ஆயிரக்கணக்கான மொழிகளில் ஆறுமொழிகளே செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுள்ளன. அவற்றில் லத்தீன், சமஸ்கிருதம் போன்றவை வழக்கொழிந்து தேவமொழிகளாக அதாவது வழிபாட்டு மொழிகளாக ஆகிவிட்டுள்ளன. ஆனால் இறுதியாகச் செம்மொழி அங்கீகாரம் பெற்ற எமது தமிழ்மொழி இன்றும் இளமை குன்றாது செழித்திருப்பது மட்டுமன்றி, பல கிளை மொழிகளையும் கொண்டு சிறப்புற்றிருக்கிறது.

ஒரு தேசிய இனத்தின் அடையாளங்களாக மொழி, பண்பாடு, பொருளாதாரம் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் எமது மொழி என்பது உணர்வுகள், கருத்து வெளிப்பாடு, தொடர்பாடல் என்பவற்றின் அடிப்படை அம்சமாக விளங்குவதால் அது ஏனைய அம்சங்களை விட முக்கியத்துவம் பெறுகிறது.

இவ்வகையில் இலங்கையிலும் எமது தேசிய இனத்தின் அடையாள மையமாக எமது தமிழ்மொழி விளங்குகிறது. எனவே தான் மொழி என்பது ஒவ்வொரு தமிழரினதும் பேச்சாக மட்டுமன்றி மூச்சாகவும் இருந்து வருகின்றது.

முதல் முதலாக இலங்கையில் எமது மொழியுரிமை சட்டபூர்வமாக நிராகரிக்கப்பட்டபோது எழுந்த இயல்பான எதிர்ப்புணர்வு சமாதான வழியிலான போராட்டங்களாக வெடித்தது. எமது மொழியுரிமை மறுப்பில் உறுதியாக நின்ற சிங்கள அதிகாரபீடங்கள் அகிம்சைப் போராட்டங்களை ஆயுத வன்முறை மூலம் அடக்கின. எனவே எமது இளைஞர்களும் எமது மொழியுரிமை, நில உரிமை என்பவற்றைக் காக்க ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். காலப் போக்கில் அது ஒரு பெரும் போராகவே வெடித்தது.இன்று ஆயுதப் போர் முடிவடைந்து விட்டது.

பல்லாயிரக்கணக்கான உயிர்களும் உடைமைகளும் அழிக்கப்பட்டுவிட்டன. வளம் கொழித்து அழகு பரப்பிய எமது வன்னி மண் சுடுகாடாகிவிட்டது. போகுமிடமெல்லாம் விதவைகளும், ஊனமுற்றோரும் என எமது மக்கள் பொலிவிழந்து போய் நிற்கின்றனர்.

நாம் ஒரு தோற்றகடிக்கப்பட்ட இனம் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் எமது மொழியையும் பண்பாட்டையும் எமது தொன்மை வாய்ந்த கலை இலக்கியச் செல்வங்களையும் எவரும் தோற்கடித்து விட முடியாது; அப்படி விடவும் கூடாது ?

ஆயுதப் போர் முடிவடைந்து விட்டபோதிலும், எமது இனம் பேரழிவுகளைச் சந்தித்து அகதி வாழ்விலும், அடிப்படை வசதிகள் கூடக் கிடைக்காத மீள்குடியேற்றங்களில் அல்லற்பட்ட போதிலும் இங்கு எம்மீது இன்னொரு போர் தொடர்கிறது என்பதை நாம் கவனத்தில் எடுக்கத் தவறிவிடக்கூடாது.

அது எமது மொழி, எமது பண்பாடு, எமது நிலவுரிமை என்பவற்றின் மேல் தொடுக்கப்பட்டிருக்கும் மௌன யுத்தமாகும். இது அபிவிருத்தி, இன ஐக்கியம், சிங்களக் குடியேற்றங்கள் என்ற அழகிய வர்ணங்கள் பூசப்பட்ட ஆபத்துக்களாக எம்மீது திணிக்கப்படுகின்றன.

எனவே எமது மொழி, பண்பாடு, பொருளாதாரம், நிலவுரிமை என்பவற்றைக் காப்பது ஒவ்வொரு தமிழனதும் தவிர்க்க முடியாத தலையாய கடமையாகிறது.

இவ்வகையில் மன்னாரில் நடைபெறவுள்ள தமிழ் செம்மொழி மாநாடு காலத்தின் தேவையை நிறைவேற்றும், ஒரு முக்கிய தேவையை நிறைவு செய்யும் ஒரு செயற்பாடாக அமைகிறது. எமது மொழியின் தொன்மை, இலக்கிய இலக்கண வளம், காலத்துடன் கைகோர்த்து நகரும் வளர்ச்சி, அதே அடிப்படையில் எமது மொழி எதிர்கொள்ளும் பிரயாசைகளும் அவற்றை எதிர்கொண்டு முன்செல்லும் வழிவகைகள் என்பன போன்ற விடயங்கள் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இம் மாநாடு இடம்பெறவுள்ளது. அது மட்டுமன்றி வரலாற்று ரீதியாக செழிப்படைந்திருந்த எமது இன அடையாளத்தை வெளிப்படுத்தும் எமது நாகரிகமும், அது விஞ்ஞான யுகத்தின் நவீன போக்குடன் எவ்வாறு இணைந்து தன் தனித்துவத்தை இழக்காது வளர்ச்சி பெறுகிறது என்பதும் ஆராயப்படவுள்ளது.

நாம் ஏறக்குறைய நானூறு ஆண்டுகள் அந்நிய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு அடிமைப்பட்டுக் கிடந்தோம். எமது மொழியிலும், எமது பண்பாட்டின் மேலும் நேரடியாக இல்லாத போதும் பல மறைமுகமான அழுத்தங்களை எதிர்கொண்டோம். ஆனால் காலத்துக்குக் காலம் எம் மத்தியில் தோன்றிய பெருந்தகைகள் மேற்கொண்ட தீவிரமான முயற்சிகளாலும், அர்ப்பணிப்பான செற்பாடுகளாலும் எமது மொழியும், பண்பாடும் மாசுபடாமல் காப்பாற்றப்பட்டது. அது மட்டுமன்றி எமது மொழி புதிய எல்லைகளை நோக்கி வளர்ச்சியும் பெற்றது. இன்னொரு புறம் எமது மொழி, பண்பாடு, கலை இலக்கியங்கள் என்பவற்றைக் காப்பதில் உழைக்கும் மக்களாகிய கிராமிய மக்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். இவர்கள் வாய்மொழி மூலமே ஒரு தலைமுறைக்கு முன்னைய தலைமுறை என்ற வகையில் பங்களிப்பு வழங்கி எமது அரிய கலை இலக்கியங்களைப் பாதுகாத்தனர் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்றும்கூட நாம் ஓர் ஒடுக்குமுறைக்கு உட்பட்ட சமூகமாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம். எமது மொழி, பண்பாடு, கலை இலக்கியங்கள் என்பவற்றின் மேல் பல்வேறு விதமான அழுத்தங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் திணிக்கப்படுகின்றன. எனவே எமது மொழியை, பண்பாட்டைக் கலை இலங்கியங்களை நாமே இடையூறுகளைத் தகர்த்தெறிந்து பாதுகாத்து வளர்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இப் பாரிய பணியில் இந்தச் செம்மொழி தமிழ் மாநாடு பெரும் பொறுப்பைத் தனது தோளில் சுமந்திருக்கிறது.

இம் மாநாடு மன்னார் மண்ணில் இடம்பெறுவது மிகவும் ஒரு பொருத்தமான விடயமாகும். சங்கிலி செகராச சேகரன் போர்த்துக்கேயரால் தோற்கடிக்கப்பட்ட பின்பு தொடர்ந்தும் நானூறு ஆண்டுகளுக்கு [illegible] அந்நியர் ஆக்கிரமிப்பிலேயே இருந்தது. அந்த நெருக்கடிக்குள் இம் மண்ணின் சாதாரண மக்கள் எமது மொழியைப் பேணி வளர்த்தனர். அங்கு இன்னும் பிரபலமாக விளங்கும் வடபாங்கு, தென்பாங்கு கூற்றுகளே எமது மொழிக்குரிய இயல், இசை, நாடகம் என்ற மூன்று அம்சங்களையும் நிலைபெறச் செய்தன. இக் கூத்துக்களின் பாடல்களை அங்கு பிறந்து வளர்ந்த புலவர்களே இயற்றினர். அப்பகுதியைச் சேர்ந்த இசைக் கலைஞர்களே பாடி, பக்கவாத்தியங்கள் இசைத்தனர். மீன்பிடி, விவசாயம் ஆகிய சாதாரண தொழில்களில் ஈடுபடும் உழைப்பாளிகளே அவற்றில் நடித்தனர். இன்றும் இயல், இசை, நாடகம் என முத்தமிழும் ஒன்றிணைந்த இத்தகைய கூத்துக்கள் வருடாவருடம் ஆலயங்களில் ஆடப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆலயங்களுக்கும் அவற்றுக்கேயுரிய தனித்தனிக் கூத்துக்கள் இருப்பதை அவதானிக்க முடியும். இதன் மூலம் மொழி காப்பதில் ஒவ்வொரு ஊர்களும் ஒன்றுக்கொன்று சளைக்கவில்லை என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

ஈழத்தில் தமிழ் வளர்ச்சியில் முஸ்லிம் பெரியார்கள், படைப்பாளிகளின் பங்கை எவரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. இன்றும் எமது தொன்மைசார் இலக்கியங்கள் தொடர்பாக ஆய்வுகள், படைப்புகள் என்பவற்றில் அவர்கள் காத்திரமான பங்கை வகிக்கின்றனர். நவீன இலக்கியப் படைப்புகளிலும் அவர்கள் இன்று முன்னணியில் நிற்கின்றனர். இத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் முஸ்லிம் அறிஞர்கள், படைப்பாளிகள் பங்கு கொண்டு தங்கள் பங் களிப்பை வழங்குவது ஒரு முக்கிய விடயமாகும்.

வடக்கு, கிழக்கின் சகல மாவட்டங்களிலும் உள்ள தமிழ் அறிஞர்கள், படைப்பாளிகள், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த அறிஞர்கள், ஆர்வலர்கள் எனத் தமிழால் அனைவரையும் ஐக்கியப்படுத்தும் பெரும்பணியை இம்மாநாடு மேற்கொள்வது ஒரு சிறப்பாகும்.

இன்று பல இலக்கிய விழாக்கள், திறப்பு விழாக்கள் அங்குமிங்கும் பல ஆடம்பர நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. ஆனால் இவை கலையின் பேராலும் இலக்கியத்தின் பேராலும் அரசியல் ஆதாயம் தேடும் மூன்றாம் தர நிகழ்வுகளாகவே காணப்படுகின்றன. எமது மக்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் அவர்கள் களியாட்டங்களை விரும்புகின்றனர் எனவும் ஒரு பொய்த் தோற்றப்பாட்டை உருவாக்கும் நோக்கம் கொண்டவையாகவும் அவை அமைகின்றன.

அவலங்களால் அல்லற்படும் எமது மக்கள் இப்படியான நிகழ்வுகளைப் புறமொதுக்குவது அப்படியொன்றும் ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல.

இப்படியான ஒரு சூழ்நிலையில் எமது தாய்மொழி யின் மேன்மைக்காக மன்னாரில் ஒரு தமிழ் செம்மொழி மாநாடு இதய சுத்தியுடனும் நேர்மையுடனும் நடத்தப்படுவது வரவேற்கத்தக்கது.

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழுங்கு'' என்ற பாரதிதாசனின் சங்கற்பத்தை மன்னார் தமிழ் செம்மொழி மாநாடு உலகெங்கும் ஓங்கியொலிக்க வைக்கும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லத் தமிழினிச் சாகுமா?

"மெல்லத் தமிழினிச்சாகும் - அந்த மேற்குமொழிகள் புவிமிசையோங்கும் என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ...."

என்று மகாகவி பாரதியார் சீறிச் சினந்தது இந்தியாவில் தமிழ்நாட்டு மக்களை மட்டுமல்ல ஈழத்தமிழ் மக்களையும் குறித்துத்தான் என்பது இன்றைய ஈழத்தின் நிலையை அவதானித்தால் புலப்படும். ஈழத்தமிழ்மக்களை மனதில் வைத்துத் தான் பாரதியார் பாடினாரோ என்ற ஐயமும் கூடத் தோன்றுகிறது.

இதே சமயம் எங்கள் புலம்பெயர் தமிழர்கள் சிலர் தாம் தஞ்சம் புகுந்துள்ள நாடுகளிலிருந்து செய்யும் சில சாதனைகளைக் கண்டும் கேட்டும் வியக்காமலிருக்கவும் முடியவில்லை.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்கம் சமீபத்தில் தனது ஆண்டு விழாவை முத்தமிழ் விழாவாகக் கொண்டாடியது. பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடந்த இவ்விழாவுக்கு வருகை தந்தோரைக் குத்துவிளக்கு நிறை குடத்தின் மத்தியில் நிறைவாக நின்ற மூன்று தமிழ் மாணவிகள் சந்தனம், குங்குமம் தந்து வரவேற்றது மன நிறைவைத் தந்தது. கைத்தடியின் உதவியுடன் படியேறிச் சென்ற என்னைப் பரிவுடன் வரவேற்று மண்டபவாயில் வரை உதவிக்கு வரவும் ஒரு மாணவி முன்வந்தபோது தமிழ்ச் சங்கத்தின் பண்பு தெரிந்தது.!

இவ் விழாவில் மேன்முறையீட்டு நீதியரசர் அ.சிறிஸ்கந்தராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள, சிறப்பு விருந்தினராகத் தமிழ் நாட்டிலிருந்து கவிக்கோ அப்துல் ரகுமான் வந்து கலந்து கொண்டார்.

''இந்தியாவில் தமிழ் செத்துக் கொண்டிருக்கிறது. ஈழத்தில் தமிழன் செத்துக் கொண்டிருக்கிறான்'' என்று கவிக்கோ இங்கு சிறப்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டபோது மண்டபத்தில் கரவொலி.

இன்று உலகில் எண்பது நாடுகளில் தமிழ் ஒலித்துக் கொண்டிருப்பதற்குப் புலம்பெயர்ந்து அந்த நாடுகளில் வாழுகின்ற ஈழத் தமிழர்களே காரணம் என்று புகழ்பாடிய கவிக்கோ, தாய்மொழியான தமிழ் மொழியில் கல்வி போதிப்பதற்குத் தடை விதிக்க வேண்டுமென்று நீதிமன்றம் சென்ற விந்தை தமிழ்நாட்டில்தான் நிகழ்ந்தது என்று கூறியபோது பார்வையாளர் மத்தியில் ஆரவாரம்.

ஆனால் உண்மைநிலை என்ன? இலங்கையிலும் புலம் பெயர்ந்து ஈதுத்தமிழர் வாழும் நாடுகளிலும் தமிழ்மொழி எப்படி இருக்கிறது?

சிங்களம் மட்டுமே இலங்கையின் அரச கரும மொழி என்று சட்டரீதியாகப் பிரகடனப்படுத்தும் மசோதாவை அன்று பிரதம மந்திரியாக இருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

சுதந்திர இலங்கையின் முதல் பிரதமராக இருந்த டி.எஸ். சேனநாயகா சிங்களமும் தமிழும் இலங்கையின் அரச கரும மொழிகளாக இருக்குமென்றும், இதுவே ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி யின் கொள்கையென்றும் உறுதியாகத் தெரிவித்திருந்தார்.

டி.எஸ்.சேனநாயகாவுக்குப் பின்னர் பிரதம மந்திரிப் பதவி தமக்குக் கிடைக்கமாடாதென்பதை உணர்ந்துகொண்ட எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயகா ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி வேறு சில இனவாதக் கட்சிகளையும் சேர்த்து, மகாஜன எக்ஸத் பெரமுன என்ற மக்கள் ஐக்கிய முன்னணியைத் தொடங்கி தாம் ஆட்சிக்கு வந்தால் ஒரேநாளில் சிங்களத்தை அரியணையில் ஏற்றுவதாகப் பிரசாரம் செய்தார்.

சிங்களமும் தமிழும் தொடர்ந்து சம அந்தஸ்துடன் விளங்கும் என்று யாழ்ப்பாணத்தில் உறுதியாகத் தெரிவித்த பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவல, பண்டார நாயகாவின் சிங்களம் மட்டும் பிரசாரத்தினால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்த நெருக்கடியைத் தொடர்ந்து பெரிய சேனநாயகா கொடுத்த வாக்குறுதியைத் தூக்கியெறிந்து சிங்களம் மட்டுமே நாட்டின் அரச கரும மொழியாக இருக்குமென்றும் இதுவே ஐ.தே.கட்சியினதும் ஆட்சியினதும் கொள்கை என்றும் அறிவித்தார். பண்டாரநாயகா தமிழுக்கு நியாயமான உபயோகம் கொடுக்க முன்வந்தார். ஐ.தே.கட்சி அதுவும் இல்லை என்றது. இனவாதிகளின் உண்ணாவிரதத்தால் நியாயமான அளவும் நீங்கியது. சிங்களச் சட்டம் நிறைவேறியது.

இடதுசாரிச் சிங்களத் தலைவர்கள், வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவான முஸ்லிம் பிரதிநிதிகள், தமிழ்ப் பிரதிநிதிகள் மசோதாவை எதிர்த்து வாதாடியதுடன் எதிர்த்தும் வாக்களித்தனர்.

தமிழர்கள் சாத்வீக வழியில் எதிர்த்துப் போராடியதால் தமிழர் தலைவர் செல்வநாயகம் அவர்களுடன் பிரதமர் பேச்சு நடத்தி ஒப்பந்தமும் செய்துகொண்டார். இதற்கு ஜே.ஆர்.டட்லி தலைமையில் எதிர்க்கட்சி பலத்த எதிர்ப்பை வெளிப்படுத்தியது. ஆளும் கட்சிக்குள்ளும் சிலர் எதிர்ப்பு. ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. பண்டாரநாயகா கொல்லப்பட்டார். மனைவி சிறிமா, பின் டட்லி, ஜே. ஆர்., பிரேமதாஸா பின் பண்டாரநாயகாவின் மகள் சந்திரிகா என ஆட்சிக்கு வந்தவர்கள் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை!.

இப்பொழுது இலங்கையில் தமிழும் ஒரு உத்தியோகமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சட்டமாக இருக்கிறது. செயற்படுகிறதா என்பது வேறு விடயம். புத்தபிக்குகளுக் கும் தமிழ் அறிவை ஊட்டி அவர்களை வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்ப ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கடைசியாக வெளிவந்த ஒரு செய்தி கூறுகிறது.

தமிழர்களின் காந்தி வழி சாத்வீகப் போராட்டம், தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் எல்லாம் தமிழர்களின் ஒற்றுமையின்மையாலும் இந்திய உறவுப் பிரிவின் சீர்கேட்டினாலும், அமெரிக்க புஷ்ஷின் பயங்கரவாத ஒழிப்புத் திட்டத் தைக் கையிலெடுத்த சிங்களத் தலைவர்களின் ராஜதந்திரத்தினாலும் தோற்கடிக்கப்பட்டன. தமிழ் மக்களின் மொழிப்பிரச் சினை, நிலப்பிரச்சினை எனத் தமிழர்களின் உரிமைப்பிரச்சினைகள் யாவும் வடக்கு - கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் மூலை முடுக்குகளிலெல்லாம் நிலைகொண்டு நிற்கும் ஆயுதப் படைகளின் காலடியில் முடங்கிப் போயிருக்கின்றன.

தமிழ்மொழிக்குச் சட்டப்படி உரிமை இருக்கிறது, பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீள் குடியேற்றப்படுகிறார்கள், வடக்கில் அபிவிருத்தி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதனால் வடக்கில் வசந்தம் வீசத் தொடங்கியிருக்கின்றது. எல்லா மக்களும் எந்தப் பயமுமில்லாமல் எல்லா இடங்களும் சென்று வருகின்றனர். இனித் தமிழர்களுக்கு என்ன குறை?

**ஈழத்தின் மிக மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவர் எஸ்.எம்.கோபாலரத்தினம். "கோபு", "எஸ்.எம்.ஜீ." என்ற புனைபெயர்களுக்குள் மறைந்து நின்று எழுதி வருபவர். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த முதலாவது நாளிதழ் ஈழநாட்டின் செய்தி ஆசிரியராகவும் பின்னர் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றியவர். மற்றும் பல நாளேடுகள், சஞ்சிகைகளின் ஆசிரியராகப் பதவி வகித்த வாழ்நாள் பத்திரிகையாளர் அவர். சில வருடங்கள் நோய் வாய்ப்பட்டு இருந்த வேளை ஓய்ந்திருந்த அவரின் கரங்கள் மீண்டும் 81 ஆவது வயதில் எழுதத் தொடங்கியுள்ளன.**

இப்படிக் கேள்வி எழுகிறது.

1958 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் தமிழர்களுக்கு எதிராக இனக் கலகம் தூண்டி விடப்பட்ட காலத்திலும், இதற்கு முன் 56 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டபோதும் நாட்டில் தமிழர்கள் வித்தியாசமாகவே பெரும்பான்மைச் சமுகத்தினரால் பார்க்கப்பட்டனர். இக் காலத்தில் தமிழர்கள் தமிழில் உரையாடவும், வீடுகளில் வானொலிப் பெட்டிகளிலிருந்து தமிழ்ப் பாடல்களின் ஒலி வெளியே கேட்டுவிடுமோ வென்றும் அஞ்சினர். தமிழர்கள் என்று அடையாளம் காணமுடியாதபடி நடந்தும் கொண்டனர். பேருந்துகளில் பயணம் செய்யும் தமிழர்கள் வழமைபோல் உரையாடாமல் நண்பர்களைக் கூட அடையாளம் தெரியாதவர்கள் போல் நடந்து கொண்டனர்.

இக் காலங்களில் கொழும்பிலும் மற்ற நகரங்களிலும் கிராமங்களிலும், பேருந்துகள், தொடர் வண்டிகளிலும் தமிழில் எவரும் உரையாடாமல் செல்லவில்லை. வானொலிகளிலிருந்து தமிழ்ப்பாடல்கள் உரத்து ஒலிக்காமலும் விடவில்லை.

இஸ்லாமியத் தமிழர்கள் அச்சமின்றித் தமிழில் உரையாடினார்கள். பள்ளிவாசல்களில் ஜும்மாத் தொழுகையின் பின் பிரசங்கங்கள் தமிழில் நடக்கத்தான் செய்தன. இன்றும் நடந்துகொண்டிருக்கின்றன.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதா மீது நடந்த விவாதத்தில் வடக்குக் கிழக்கிலிருந்து வந்த இஸ்லாமியப் பிரதிநிதிகள் மசோதாவை எதிர்த்துப் பேசி வாக்களிக்கக் கொழும்பு மத்திய தொகுதி முதலாவது பிரதிநிதியாகவும் இலங்கைச் சோனகர் சங்கத்தின் தலைவராகவும் இருந்த சேர்ராசிக் பரீத் மசோதாவை ஆதரித்துப் பேசி வாக்களித்ததுடன், சிங்களத்தை உத்தியோக மொழியாக மட்டுமல்லாமல் தாய்மொழியாகவும் இலங்கை இஸ்லாமியர்கள் ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்று கூறினார்.

இன்று சோ.ராசிக்பரீத் அவர்களுடைய அறிவுரையோ, தமிழீழப்போராட்டத்தில் இஸ்லாமியர்கள் இயக்கங்களினால் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்பட்டு ஒதுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டதாலுமோ, சிங்கள ஆங்கில ஊடகங்கள் சில இஸ்லாமியர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் சிண்டு முடிந்து விடுவதில் வெற்றியீட்டியதாலோ, வேலைவாய்ப்புக்குச் சிங்களம் அவசியம் என்பதாலோ இன்று சிங்களமே இஸ்லாமியர்களின் தாய் மொழியாக வடக்குக் கிழக்கில் சில பகுதிகளைத் தவிர இலங்கையின் இதர பகுதிகளில் ஏற்றுக்கொள்ளப்பட் டிருப்பதைக் காண முடிகிறது.

கொழும்பு நகரிலும் தென் பகுதிகளிலும் மத்திய மாகாணப் பகுதிகளிலும் வாழும் இஸ்லாமியர்களின் வீடுகளில் தாய், தகப்பன், பிள்ளைகள், அயலவர்கள் என எல்லோரும் சிங்களத்தில்தான் உரையாடுகிறார்கள். பிள்ளைகள் சிங்கள மொழி மூலமே கல்வி கற்கின்றார்கள். மிகக் குறைந்த இஸ்லாமியப் பிள்ளைகளே தமிழ் மொழிமூலம் கல்வி கற்கின்றார்கள்.

கொழும்பு மருதானை ஸாகிராக் கல்லூரி புகழ்பெற்ற கல்லூரி. யாழ்ப்பாணம் இராமகிருஷ்ணமடம், வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவரான ஏ.எம்.ஏ.அஸீஸ் இந்த ஸாகிராக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றியிருக்கிறார். அஸீஸ் அவர்கள் செனட்டராகவும் இருந்திருக்கிறார்.

ஸாகிராக் கல்லூரியில் ஐம்பதுகளில் திருக்குறள் மாநாடு, பாரதி விழா, தமிழ் விழாக்கள் ஆண்டுதோறும் அல்லது இடையிடையே நடைபெற்றன. இந்தியாவிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் சிலர் வந்து, இங்குள்ள தமிழ், இஸ்லாமிய அறிஞர்களுடன் இவ் விழாக்களில் கலந்து சிறப்பித்ததும் உண்டு. பல தமிழ் அறிஞர்களையும் ஸாகிராக் கல்லூரி உருவாக்கி நாட்டுக்கு அளித்திருக்கிறது. ஸாகிராக் கல்லூரிக்குச் சமீபத்தில் மருதானை தெமட்டகொடை வீதியிலுள்ள கைரியா மகளிர் மகா வித்தியாலயத்தில் மாணவிகள் மிகச் சிறுதொகையினரைத் தவிர பெரும்பாலான மாணவிகள் சிங்கள மொழிமூலமே கல்வி கற்கின்றனர். வேறு சிலர் ஆங்கில மொழிமூலமும் கற்கின்றனர். ஸாகிராக் கல்லூரியில் இன்று தமிழ் மொழி மூலம் கல்வி கற்போர் வெகு சிலர்தான்.


இஸ்லாமியத் தமிழர்களின் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் சிங்கள மொழிமூலமே கல்வி கற்கின்றனர். இவர்களில் சிலர் வீடுகளில் தமிழ்மொழியில் உரையாடுகின்றனர்; தமிழ் மொழியில் படிக்கும் பிள்ளைகளுடனும் உரையாடுகின்றனர். ஆனால் இவர்களுக்குத் தமிழில் எழுதவோ, படிக்கவோ தெரியாது.

மிகச் சிறந்த தமிழ் ஆசிரியர்கள், தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், பத்திரிகையாளர்கள் பலர் இஸ்லாமியத் தமிழர்களில் உள்ளனர். இன்றைய சந்ததியினர் தமிழைப் புறக்கணித்து, சிங்களமொழி மூலமே கல்வி கற்பார்களானால் அடுத்த சந்ததியில் இஸ்லாமியத் தமிழர்கள் இருக்கமாட்டார்கள். இஸ்லாமியச் சிங்களவர்கள்தான் இருப்பார்கள்.

பல்லாண்டுகளுக்கு முன்னர் சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் பலர் இன்று தமிழில் உரையாடக் கூட முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இலங்கையிலிருந்து சமீபத்தில் வெளிநாடுகளுக்குக் குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கும் சென்று குடியேறி, அந்நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள பெரும்பாலான குடும்பங்களின் பிள்ளைகள் இப்பொழுது வீட்டில் தாய், தகப்பனுடன் தமிழில் பேசுவதுடன் திருப்தியடைந்து விடுகின்றனர். இந்தப் பிள்ளைகள் தமக்குள்ளே தாம் தஞ்சமடைந்துள்ள நாடுகளின் மொழிமூலமே உரையாடிக் கொள்கின்றனர். பெற்றோரும், பிள்ளைகள் தமிழில் உரையாட வற்றுபுறுத்துவதில்லை. ஐரோப்பிய நாடுகளில் பிள்ளைகள் தமிழில் கல்வி கற்க வசதியிருந்தாலும், பிள்ளைகள் தமிழ் படிக்க விடும்புவதில்லை. பெற்றோரும் இதில் பொதுவாக அக்கறை செலுத்துவதில்லை.

புலம்பெயர்ந்த நாடுகளில் பல நகரங்களில் தமிழ் மன்றங்களும் நாடக மன்றங்களும் தமிழ் எழுத்தாளர் மன்றங் களும் செயற்படு வதும், தமிழில் நூல் கள் எழுதி வெளி யிடுவதும், குறும் படங்கள் புலம் பெயர்ந்துள்ள மக்களின் வாழ் வைப் பிரதி பலிப்பனவாக வெளியிடுவதும் மகிழ்ச் சியுடன் பாராட்டுக்குரிய நிகழ்ச்சிகளே.



ஆனால், அடுத்த சந்ததி யில் தமிழின் நிலையும் தமிழன் நிலையும் என்ன? மெல்லத் தமிழி னிச் சாகுமா? ✻✻✻

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கு'பேர' ராஜ்ஜியம்

**4**

தமிழக முதல்வர் கருணாநிதி குடும்பத்தின் ஊடக ஆதிக்கம் பற்றி 'இந்தியா ருடே' சஞ்சிகை வெளியிட்ட கட்டுரை உதயனில் தொடராக வெளியாகிறது. ஈழத் தமிழர்களும் இந்த ஊடக ஆதிக்கத்துக்குள் சிக்கி சின்னாபின்னமாகி வரும் சூழலில் இக்கட்டுரை முக்கியத்துவம் பெறுகிறது.

**தொலைக்காட்சி அலைவரிசைகள் முதல் திரைப்படத் தயாரிப்பு வரை ஒட்டுமொத்த ஊடக உலகமும் கருணாநிதி குடும்பத்தின் ஆளுகைக்குள் இருப்பதாகக் குற்றம்சாட்டப்படுகிறது. இது நல்லதுதானா?**

**அருள்நிதி தமிழரசு**



ஆரம்பம்: விஜய் இயக்கத்தில் வம்சம் திரைப்படம் தான் ஆரம்பம். சொந்தத் தயாரிப்புத் தவிர எந்தத் தயாரிப்பாளர் படமாக இருந்தாலும் நடிப்பதற்குத் தயார்.

அறிவுரை: கருணாநிதியின் பேரன் என்ற தகுதியை மட்டும் வைத்து சாதித்துவிட முடியாது. சொந்தத் திறமைகளை வளர்த்துக் கொண்டாலேயே வெற்றி பெற முடியும் என்பது தாத்தா கருணாநிதியின் அறிவுரை.

அடுத்து: *வம்சம்*. முடித்து அடுத்த படத்துக்குக் கதை கேட்டு வருகிறார். சாப்ளின் என்ற இயக்குநரின் கதை முடிவு செய்யப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்திய தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையம் (ட்ராய்) 2008 இல் 'குரொஸ் மீடியா ஓனர்ஷிப்' சட்டம் குறித்த ஆலோசனைகளைப் பெறத் தொடங்கியது. ஒரு ஊடகத்தின் உரிமையாளர் அல்லது முக்கிய பங்குதாரர் மற்றொரு ஊடகத்தினதும் பெரும் பங்குதாரராக வருவதைத் தடுப்பதே இதன் நோக்கம்.

இந்த விடயத்தில் வெளிநாடுகளில் உள்ளது போன்ற ஜனநாயகத் தன்மையை ஏற்படுத்துவதுதான் 'ட்ராய்'இன் நோக்கம். ஆனால் ஊடக அதிபர்களின் கடும் எதிர்ப்பால் இரண்டு வருடங்கள் கடந்து விட்ட பிறகும் அத்தகைய சட்டம் குறித்து எதுவும் செய்ய முடியவில்லை.

இந்தியாவில் மீறல்களுக்குப் பிறகே விதிகளை உருவாக்கும் போக்கு தொடர்ந்து கொண்டு இருக்கிறது. ஊடகங்கள் விவகாரத்தில் விதிமீறல்களின் எண்ணிக்கையும் வீரியமும் மோசமாகிக் கொண்டே இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்துவதற்கான அறிகுறிகள்கூட தென்படவில்லை.

"இப்போது உள்ள சூழலில், இந்தியாவில் அத்தகைய சட்டம் வரப்போவதேயில்லை. ஏனெனில் அத்தகைய சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட வேண்டியவர்கள்தான் அத்தகைய சட்டத்தை உருவாக்குவதற்கான அதிகார மையத்திலும் இருக்கிறார்கள்" என்கிறார் தொடர்பியல் வல்லுநர் ஒருவர்.

இந்தியாவில் மீறல்களுக்குப் பிறகே விதிகளை உருவாக்கும் போக்கு தொடர்ந்து கொண்டு இருக்கிறது. ஊடகங்கள் விவகாரத்தில் விதிமீறல்களின் எண்ணிக்கையும் வீரியமும் மோசமாகிக் கொண்டே இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்துவதற்கான விதிகள் உருவாவதற்கான அறிகுறிகள் கூடத் தென்படவில்லை.

தங்கள் மீது தொடர்ந்து சுமத்தப்படும் குடும்பக் குற்றச்சாட்டுகளை கருணாநிதியும் தொடர்ந்து உன்னிப்பாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்.

*வம்சம்* திரைப்படத்தின் வெளியீட்டு விழாவில் அதை வெளிப்படையாகவே பேசினார். *வம்சம்* என்று படத்திற்கு பெயர் வைக்க வேண்டாம் என்ற கோரிக்கையை இயக்குநர் பாண்டிராஜ் ஏற்காததை அதில் குறிப்பிட்டிருக்கிறார். "*வம்சம்* என்றால் கருணாநிதி *வம்சம்* என்று குறை சொல்வார்கள் என்று அவரிடம் கூறினேன். ஏற்கெனவே குடும்பம், குடும்பம் என்று பேசி வருகிறார்கள்" என்று குறிப்பிட்டுப் பேசினார் அவர்.

"இவ்வாறு வம்சம், வம்சம் என்று பேசுகிறவர்களைத் துவம்சம் செய்துவிட வேண்டாமா என்று சிலர் கேட்கிறார்கள். துவம்சம் செய்துவிட முடியும்தான். ஆனால் அண்ணா வழியில் அவர்களை நாம் வசம் செய்ய வேண்டுமே ஒழிய துவம்சம் செய்யக்கூடாது" என்றும் கூட அவர் பேசினார்.



குடும்பப்படம். கருணாநிதி குடும்பத்தின் தற்போதைய 'போக்கு', பேரன்கள் எல்லாம் சினிமா பக்கம் வர பேர்த்திகள் எல்லாம் அரசியலுக்குள் நுழைகிறார்கள்.

அவர் நினைத்தது போலவே இந்தக் கட்டுரையின் தொடக்கமும் *வம்சம்* என்ற படத் தலைப்பு கருணாநிதி குடும்பத்தின் வம்ச ஏக போகத்தைச் சுட்டுகிறது என்ற வர்ணனையுடன் தான் ஆரம்பித்தது.

தீர்க்கதரிசியாகக் காட்சி தரும் கருணாநிதிக்கு தமிழ்த் திரையுலகில் தன் குடும்ப நபர்கள் அல்லது குழுக்களின் ஏகபோகம் எத்தகைய மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதும் தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. இயற்கையின் அம்சமான பன்மைத் தன்மையை ஏகபோகம் சிதைக்கிறது. காலப்போக்கில் இது கற்பனை வளம் குன்றவும் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கும் இட்டுச் செல்லும். அதிலும் குறிப்பாக மக்களுக்கும் நிகழ்வுகளுக்கும் பாலமாக இருக்கும் ஊடகத் துறையில் ஏற்படும் இத்தகைய ஏகபோகம் ஒட்டுமொத்த சமூகத்தின் வளர்ச்சிக்கும் விழிப்பு உணர்வுக்கும் சாவுமணி அடிக்கும். அதனால்தான் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் 'குரொஸ் மீடியா ஓனர்ஷிப்' போன்ற சட்டங்கள் இந்தியாவில் கொண்டுவரப்பட வேண்டும் என்கிறார்கள் தொடர்பியல் வல்லுநர்கள்.

*(முற்றும்)*

**தீர்க்கதரிசியாகக் காட்சி தரும் கருணாநிதிக்கு தமிழ்த் திரையுலகில் தன் குடும்ப நபர்கள் அல்லது குழுக்களின் ஏகபோகம் எத்தகைய மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது தெரியாமலிருக்க வாய்ப்பில்லை.**

---

# எந்திரனின் உளவியல் போர்

ரஜனிகாந் படத்தினை ஈழத்தமிழர்கள் முழுமூச்சாகப் பார்ப்பது வழக்கம். ரஜனிகாந் படத்தை ஒரு தடவை பார்த்துவிட்டால் ஒரு வருடத்துக்கு வேறு எந்தப் படமும் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அந்த வகையில், *எந்திரன்* படத்தினையும் பார்ப்பதற்குத் துணிந்தேன். நீண்ட நாள்களாகக் காத்திருந்து திரையரங்கு வாசலில் வரிசையில் நின்று படத்தைப் பார்த்தால் அதில் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

படத்தில் இடைவேளைக்குப் பின்னர் வரும் காட்சிகள் ஈழத் தமிழரை பெரும் வேதனை அடைய வைப்பவையாகவே உள்ளன. உளவியலைப் பொறுத்தவரையில் பின்வரும் விடயங்கள் முக்கியமானவை. Eustress - படத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களைப் பார்த்து உற்சாகம் அடைதல். Distress - நிகழக்கூடிய வன்முறைச் சம்பவங்களைப் பார்த்து/நினைத்துக் கிலேசம் அடைதல்.

ஈழத் தமிழர்கள் விடயத்தில் இரண்டாவது விடயத்தை தொடும் படமாக *எந்திரன்* இருக்கிறது. இதனால் ஈழத்தமிழர்கள் பெரும் மன அழுத்தங்களுக்கு (Stress) உள்ளாகின்றனர்.

**எந்திரன் பொதுமக்களை சுட்டுக் கொல்வது ஈழத் தமிழர் நிஜத்தில் சுட்டுக் கொல்லப்பட்டதைச் சமன் செய்யவே.**

2009 ஆம் ஆண்டில் வன்னியில் ஏற்பட்ட பேரழிவுகளில் இருந்து இன்னமும் மீளாத எமக்கு, மக்களை துப்பாக்கியினால் கண்டபடி சுடும் காட்சி ஜீரணிக்க முடியாததாக இருந்தது. கலைஞர் குடும்பத்தினால் இக்காட்சி படத்தில் திட்டமிட்டே புகுத்தப்பட்டுள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது. அதாவது வன்னியில் ஏற்பட்ட துயரத்தின் சாயலை தமிழகப் பாமர மக்களின் மனங்களில் இருந்து அகற்ற வேண்டிய தேவை கலைஞருக்கு இருந்தது. 2011 தமிழக சட்டசபைத் தேர்தலில் வெற்றிவாக்குகளை பெற வேண்டுமெனில் தமிழக மக்களிடம் காணப்படும் ஈழத் துயரையும் மறக்கடிக்க வேண்டியிருக்கிறது கருணாநிதிக்கு. எனவேதான் [illegible] இயந்திர மனிதன் பொதுமக்களைச் சுட்டுக் கொல்வது



போன்ற காட்சி படத்தில் புகுத்தப்பட்டது. படத்தில் பல நூற்றுக் கணக்கானோர் கொல்லப்படுவது ஈழத் தமிழர் நிஜத்தில் சுட்டுக்கொல்லப்பட்டதைச் சமன் செய்யவே. அதாவது ஈழத் தமிழர் அழிக்கப்பட்டதும் திரைப்படக்கதை போல சாதாரண விடயம் என்று நினைத்து தமிழக மக்கள் அதனை மறக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இக்காட்சி புகுத்தப்பட்டது.

இப்படத்தில் வரும் உலங்கு வானூர்தியும் அதன் பீரங்கித் தாக்குதலும் 1987 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் நாள் காலை 11.45 மணியளவில் சாவகச்சேரி நவீன சந்தைக் கட்டடத்திலும் அதே தினம் பிற்பகல் 2.45 மணியளவில் பொன்னாலைப் பாலத்திலும் அப்பாவிப் பொதுமக்கள் உலங்கு வானூர்தியால் கொல்லப்பட்டதை நினைவுபடுத்துகிறது. அடுத்து இப்படத்தில் வரும் கடலோரக் காவற்படைக் கப்பல் போன்ற ஒன்றே பல ஏதிலித் தமிழர்கள் கடலுடன் அள்ளுண்டு போயினர் என்பதும் கவனத்திற்குரியது. மொத்தத்தில் இப்படம் தமிழக மக்களிடையே ஈழத் தமிழர் சார்பான அனுதாப உணர்வுகளை குறைப்பதற்காகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது. மறுதலையாக ஈழத் தமிழர்களின் ஆழ் மனதில் உள்ள துன்பங்களை மீள எழவும் செய்துள்ளது.

Dr சி.யமுனானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SLIIT

# இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையம்

பொதுநலவாய பல்கலைக்கழகங்களின் சங்க உறுப்பினர்

# புதிய மாணவர்களுக்கான அனுமதி 2010 / 2011



கொள்ளுப்பிட்டி வளாகம்



மாலபே வளாகம்



மாத்தறை மண்டபம்



கண்டி மண்டபம்



யாழ்ப்பாணம் மண்டபம்

University Partners

Industry Partners

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையம் (SLIIT) தற்போது தகுதிவாய்ந்த மாணவர்களிடமிருந்து பின்வரும் பட்டப்படிப்புக்களுக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது.

❖ **B.Sc. (கௌரவ) பட்டப் படிப்பு (SLIIT)**
- தகவல் தொழில்நுட்பம் – 4 வருடங்கள்
- தகவல் முறைகள் – 4 வருடங்கள்
- கம்பியூட்டர் முறைகளும் வலையமைப்பும் – 4 வருடங்கள்

இந்தப் பட்டப்படிப்புக்கள் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடு SLIIT ஆல் வழங்கப்படுகின்றது.

❖ **B.Sc. கேர்டின் பல்கலைக்கழகம் - அவுஸ்திரேலியா**
- தகவல் தொழில்நுட்பம் – 3 வருடங்கள்
- கம்பியூட்டர் முறைகளும் வலையமைப்பும் – 3 வருடங்கள்

இந்தப் பட்டம் அவுஸ்திரேலியாவின் கேர்டின் பல்கலைக்கழகத்ததால் வழங்கப்படுகின்றது. SLIIT கற்கை நெறியை நடாத்துகின்றது.

❖ **B.Sc.(கௌரவ) ஷெபீள்ட்ஹலாம் பல்கலைக்கழகம் - ஐக்கிய இராச்சியம்**
- **B.Eng** (கௌரவ) இலத்திரனியல் பொறியியலில – 3 வருடங்கள்*
- **BBA** (கௌரவ) வியாபார முகாமைத்துவத்தில் – 3 வருடங்கள்*

இத்தகைய பட்டப்படிப்புக்கள் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் SLIIT நடாத்தப்பட்டு ஐக்கிய இராச்சியம், ஷெபீள்ட் ஹலாம் பல்கலைக்கழகத்தினால் பட்டமளிக்கப்படுகின்றன.

*இது தொடர்பான தனியான விளம்பரம் பத்திரிகைகளில் மிக விரைவில் பிரசுரிக்கப்படும் - மேலதிக தகவல்களுக்கு, முகாமையாளர் - கல்விசார் அலுவல்கள், அவர்களை தொடர்பு கொள்ளவும்.

❖ **B.Sc.(கௌரவ) ஷெபீள்ட்ஹலாம் பல்கலைக்கழகம் - ஐக்கிய இராச்சியம்**
- தகவல் தொழில்நுட்பம் – 3 வருடங்கள்
- கம்பியூட்டர் முறைகளும் வலையமைப்பும் – 3 வருடங்கள்
- மென்பொருள் பொறியியல் – 3 வருடங்கள்

SLIIT இல் 2 1/2 ஆண்டுகள் கல்வியைத் தொடருங்கள். இறுதி கல்வித் தவணை UK ஷெபீள்ட் ஹலாம் பல்கலைக்கழகத்தில்.

❖ **B.Sc.(IT): கேர்டின் பல்கலைக்கழகம், RMIT பல்கலைக்கழகம், வொல்லொங்கொங் பல்கலைக்கழகம், சுவின்பேர்ன் பல்கலைக்கழகம், தெற்கு அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகம், டீகின் பல்கலைக்கழகம். தான்சானியா பல்கலைக்கழகம்**

இரண்டு ஆண்டுகளுக்கான கற்கை SLIIT யிலும், ஒரு வருட கற்கை அவுஸ்திரேலியாவின் பங்காளிப் பல்கலைக்கழகத்திலும்.

❖ **B.Sc.(கௌரவ) (IT) : மென்செஸ்டர் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகம், லண்டன் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகம், ஒக்ஸ்போர்ட் புறூக்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் SLIIT /எடெக்ஸல் வலைப்பின்னல் கல்வி நிலையங்களில்.**
- SLIIT இல் இரண்டு வருட கற்கையும், ஒரு வருடம் பங்காளிப் பல்கலைக்கழகங்களில் கற்கையும்

❖ **B.Sc. (IT) : மோனாஸ் பல்கலைக்காகம், அவுஸ்திரேலியா**
- இரண்டு ஆண்டுகளுக்கான கற்கை SLIIT யிலும், ஒரு வருட கற்கை மோனாஸ பல்கலைக்கழகத்திலும்.

❖ **B.Sc. (IT) : சவுத் ஈஸ்ட் மிசோரி ஸ்ரேட் பல்கலைக்கழகம், சின்சின்னாடி பல்கலைக்கழகம், ஸ்ராட்போட் பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்கா.**
- இததொறி இல் 2 வருட கல்வியும் அதனைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பங்காளி பல்கலைக்கழகங்களுக்கு மாற்றம் செய்யப்படுவார்கள்.

**ஏனைய தகைமைகள் பட்டதாரி கற்கைத் திட்டத்தின் போது பெற்றுக் கொள்ளலாம்**

❖ **BTEC HND (UK) : ஐக்கிய இராச்சியத்தின் எடெக்ஸல் சர்வதேச நிறுவனத்தால் வழங்கப்படுவது**

❖ **தகவல் தொழில் நுட்பத்தில் டிப்ளோமா (SLIIT)**
- SLIIT இல் இரண்டாண்டு கற்கை

## தகுதி

- ☐ க.பொ.த. (உயர்தரம்) இலங்கை /லண்டன் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி (எந்தப் பிரிவாயினும்)

மற்றும்

- ☐ SLIIT ஆல் நடத்தப்பட்டுள்ள தகுதிகாண் பரீட்சையில் சித்தி
**கம்பியூட்டர் முறைமை மற்றும் வலைப்பின்னல் பட்டப்படிப்புத் திட்டத்துக்கான அனுமதி.**
- ☐ மேற்குறிப்பிட்ட அதே தகுதி விண்ணப்பதாரி கணித/பௌதிக விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்தவராயிருக்க வேண்டும்.

**குறிப்பு : க.பொ.த. (உயர்தரம்) 2010 பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

## விண்ணப்பிப்பது எவ்வாறு


- ☐ ஆர்வமுள்ள மாணவர்கள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பின்பற்றி ஆரம்ப கட்ட விண்ணப்பத்தைச் செய்ய வேண்டும். SLIIT இன் இணையத்தளமான (www.sliit.lk) இன் மூலமும் இந்த விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
- ☐ தகுதிகாண் பரீட்சை மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளுக்கு விண்ணப்பதாரி 600/- வைச் செலுத்த வேண்டும்.
- ☐ இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் பெயரில் அல்லது இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி கிளையில் நடைமுறைக் கணக்கு இலக்கம் **1630552** என்ற கணக்கு இலக்கத்தில் இந்தப் பணத்தைச் செலுத்தலாம். அல்லது சம்பத் வங்கியின் ஏதாவதொரு கிளையிலும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையம் நடைமுறைக் கணக்கு இலக்கம் **0039 9000 0033** என்ற கணக்கில் இந்தப் பணத்தைச் செலுத்தலாம்.

* பெரும்பாலான வங்கிக் கிளைகளில் இந்த கொடுப்பனவுக்கான விஷேட SLIIT கொடுப்பனவுச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

- ☐ முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமும், வங்கியில் பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டும் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

முகாமையாளர்/கல்வி விவகாரம்
இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையம், BoC மேர்சன்ட் டவர், 15 வது மாடி
28, சென்ட் மைக்கேல் வீதி, கொழும்பு 03.

**இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையம்.**
BoC Merchant Tower, # 28, St. Michael's Road, Colombo 3.
Tel: 230 1904 Fax : 230 1906
URL : www.sliit.lk E-mail : info@sliit.lk




பட்டப்படிப்பு வழிகாட்டி (DEGREE PROGRAMME PATHWAYS)

மேன்மைமிக்க தசாப்தத்தினூடாக தேசத்திற்கு
12,000 இற்கு மேற்பட்ட த.தொ தொழில்சார் நிபுணர்கள் !!

**ஆரம்பகட்ட விண்ணப்பத்துக்கான முடிவுத் திகதி: 25 ஆம் திகதி ஒக்டோபர் 2010**

## தகுதிகாண் பரீட்சை :

**திகதியும் நேரமும்** : 31 ஒக்டோபர் 2010 மு.ப. 10.00 – 11.00 வரை
**இடங்கள்** : கொழும்பு, மாலபே, கண்டி, குருணாகல், காலி, மாததறை,
**மொழிமூலம்** : ஆங்கிலம், சிங்களம், தமிழ்

## புலமைப்பரிசில்

- ☐ Industrial Financial Systems (IFS) Graduate Scholarship Programme + Internship at IFS
- ☐ Mahapola Higher Education Scholarship Trust Fund (MHESTF)
- ☐ SLIIT Performance Based Scholarships
- ☐ Exetel Scholarships

## PRELIMINARY APPLICATION FORM

**For the B.Sc. (Hons) Degree Programmes - 2010/2011**

1. Name with Initials (as is usually written) :.................................................
2. Date of Birth :Day .................. Month ...................... Year .......................
3. Present Mailing Address :.................................................
4. Contact telephone No. (if any):.................................................
5. The centre at which you wish to sit the Aptitude Test[1]:
   Colombo ☐ Malabe ☐ Kandy ☐ Kurunegala ☐ Galle ☐ Matara ☐ Jaffna ☐
6. The medium in which you wish to sit the Aptitude Test[1]:
   Sinhala ☐ English ☐ Tamil ☐

Bank receipt for Rs.600/- paid[2] at the Bank of Ceylon* / Sampath Bank* at .................................... branch is attached to this application. (*Strike off whichever is inapplicable)

I certify that the information given above are true and accurate.

Date : ..........................  ..........................................
Signature

Notes : (1) Aptitude Test will be held in Colombo, Malabe, Kandy, Kurunegala, Galle, Matara and Jaffna. The candidates are therefore requested to indicate their preferred location and medium. Please ( ✓ ) tick the appropriate cage.


(2) This fee should be paid at any branch of the **Bank of Ceylon** in favour of Sri Lanka Institute of Information Technology to the current account **No.1630552** at Bank of Ceylon, Kollupitiya or at any branch of **Sampath Bank** in favour of Sri Lanka Institute of Information Technology to the current account **No. 0039 9000 0033** at Sampath Bank. SLIIT pay-in slips are available for this purpose in most Bank branches.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனமோதலை மீண்டும் ஏற்படுத்தும் நோக்கிலேயே சிங்களமக்களை யாழ்ப்பாணத்தில் குடியேற்ற முனைகிறார்கள்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரமுகர் சீ.வி.கே. சிவஞானத்துடனான நேர்காணல்

## வடக்கில் உள்ள நிர்வாக மாவட்டங்களை தனித்தனித் தேர்தல் மாவட்டங்களாக மாற்றவேண்டும்



இனங்களுக்கு இடையில் மீண்டும் ஒரு இன மோதலை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தின் விளைவாகவே யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்களை மீளக்குடியமர்த்த வேண்டும் என்ற கோரிக்கைமுன்வைக்கப்பட்டது.

அரசியல் செல்வாக்குள்ள ஒரு வலையமைப்பு இதன் பின்னணியில் இருந்து செயற்படுகின்றது.இவ்வாறு தெரிவிக்கிறார் யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும் தமிழரசுக் கட்சிப் பிரமுகருமான சி.வி.கே சிவஞானம். இது குறித்து அவர் வழங்கிய கருத்துக்கள் வருமாறு.

யாழ்ப்பாணத்தில் காலம் காலமாக வாழ்ந்து இடம்பெயர்ந்திருந்த சிங்கள மக்கள் மீண்டும் இங்கு வந்து குடியேறுவதை நாம் ஒரு போதும் எதிர்க்கவில்லை. தமது சொந்த இடங்களை உறுதிப்படுத்தும் சான்றுகளுடன் அவர்கள் தாராளமாக வந்து குடியேறலாம்.

இதே போன்று இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் இப்பொழுது மீண்டும் இங்கு வந்து தமது சொந்த

*நேர்காணல்:-*
**இரா.புத்திரசிகாமணி**

இடங்க்ளில் குடியமர்ந்துள்ளனர். இவர்களால் எந்தப் பிரச்சினையும் இல்லை. இதனை எவரும் ஆட்சேபிக்கவும் இல்லை.

ஆனால் தற்போது இங்கு வந்துள்ள சிங்களவர்களின் நிலைமை அப்படி அல்ல. நாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஒரே நேரத்தில் பெருந்தொகையான சிங்களவர்கள் இங்கு வந்து தம்மை நிரந்தரமாகக் குடியேற்ற வேண்டும் என அடம்பிடித்துக் கொண்டிருப்பதும் அவர்களுக்குப் படையினர் பாதுகாப்பளிப்பதும், ஏனைய உதவிகளை வழங்கி வருவதும் திட்டமிடப்பட்ட ஒரு செயல். இதன் பின்னணியில் அரசியல் செல்வாக்குள்ள ஒரு அமைப்புச் செயல்படுகின்றது என்பது உறுதியாகின்றது.

எனவே இவ்விடயத்தில் அரசும் அரச அதிகாரிகளும் மிகவும் நிதானமாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டும்.

மேற்கண்டவாறு உதயனுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் தெரிவித்துள்ளார். இந்த நேர்காணலின் முழுவிபரமும் வருமாறு.

கேள்வி:- தமது பூர்வீக வாழ்விடங்கள் தொடர்பான உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்தால் சிங்கள மக்களை அவர்கள் வாழ்ந்த இடங்களில் குடியமர்த்துவது பற்றி பரிசீலிக்கப்படும் என அரச தரப்பில் கூறப்பட்டுள்ளது. இது பற்றி ....?

பதில்:- அதனை நாங்கள் எதிர்க்கவில்லை. அதேவேளை பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தமிழ் மக்கள் தமது வீட்டுரிமை, காணி உரிமை எனப்பல சான்றுகளை கையில் வைத்துகொண்டிருக்கும் போதே அவர்களை அகதிமுகாம்களிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் அடைத்து வைத்துள்ளனர்.பாதிக்கப்பட்ட எம் மக்களை எமது சொந்த மண்ணில்குடியமர்த்த ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? உடனடியாக அகதிகளாக அலைகின்ற தமிழ் மக்களை மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கே:- இடம்பெயர்ந்தவர்களுள் 90 வீதமானவர்கள் மீள்குடியமர்த்தப்பட்டுவிட்டனர். அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வரையிலான உதவித் தொகைகளும் வழங்கப்பட்டுள்ளன. தற்காலிகக் குடியிருப்புகளை அமைக்க உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்படுகின்றன. என்றும் அரச தரப்பில் கூறப்படுகிறதே?

ப:-குறிப்பிட்ட ஒரு சிலருக்கும் ஒரு சில பகுதிகளுக்கும் மட்டும் இவற்றை வழங்கிவிட்டு எல்லோருக்கும் வழங்கி விட்டதாக அர்த்தம் செய்து கொள்கின்றனர். தொண்டு நிறுவனங்களும் அரச சார்பற்ற அமைப்புக்களும் இவற்றை வழங்கி உள்ளன. அரசினால் வழங்கப்பட்ட தற்காலிக கூடாரங்கள் தரமற்றவை . வசதிகள் அற்றவை. எல்லா வசதிகளுடனும் வாழ்ந்தவர்கள் இன்று எதுவும் இல்லாமல் இருக்கின்றனர். இது தான் உண்மை.

கே:- இன்னும் பெருந்தொகையான தமிழ்மக்கள் அகதிமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறுகின்றீர்களா?

ப:-இதில் சந்தேகமே இல்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வலிகாமம் வடக்கில் 45 கிராம சேவகர்கள் பிரிவில் வாழ்ந்த மக்களை இன்னும் அகதிகளாகத்தானே வைத்துள்ளனர்.

கே:-அந்த பகுதிகளில் இன்றும் பூரணமாக கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை என்று படைத்தரப்பில் கூறப்படுகின்றதே?

ப:- இப்பகுதிகளில் படைத்தரப்பினராலும், கால்நடைகளாலும் தாராளமாகவே நடமாட முடிகிறது. இவர்கள் கண்ணிவெடிக்குள் சிக்கியதாக இது வரை ஒரு தகவலும் இல்லை.ஆனால் பொதுமக்களை மட்டும்தான் இந்த கண்ணிவெடிகள் தாக்குமோ?

கே:- நீங்கள் அதியுயர் அதிகாரியாகவும்,யாழ் மாநகர ஆணையாளராகவும் பொதுமக்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு பணியாற்றியவர். இதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறான நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என எண்ணுகிறீர்கள்?

ப:- ✱ இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் உடனடியாக தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும்.

✱ அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

✱ வீடுகளையும், உடமைகளையும் முற்றாக இழந்துள்ளவர்களின் இழப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

✱தமக்கு வழங்கப்பட்ட தொழில்களைச் செய்து தமது வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் உறுதிப்படுத்திக்கொள்ள கூடிய வகையில் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

✱தமது சொந்தக் காணிகளில் விவசாயம் செய்ய இவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

இவற்றை வழங்க ஏற்பாடு செய்வது ஓரளவாவது பிரச்சினைகள் குறைய வழிவகுக்கும்.

கே:- வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக பல ஆயிரம் கோடி ரூபாக்களை ஒதுக்கி அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்க பட்டிருப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. இதனை நீங்கள் மறுக்கின்றீர்களா?

ப:- மக்கள் உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் எந்த அபிவிருத்திகளும் ஏற்படவில்லை. ஆனால் வீதி அபிவிருத்தி வேலைகள் சில நடை பெறுகின்றன. மேலும் சில வீதிகளை அபிவிருத்தி செய்ய கேள்வி பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இதனால் இங்கு நிரந்தரமாக வாழ்பவர்களுக்கு எந்த நன்மையும் இல்லை. வெளியில் இருந்து வந்தவர்களே இலாபம் அடைகின்றனர்.

முதலாவதாக உள்ளூர் முதலீட்டாளர்கள் எந்த ஒரு ஒப்பந்த வேலையையும் பெறவோ அல்லது விண்ணப்பிக்கவோ முடியாத வகையிலேயே நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன .கடந்த ஏழு வருடங்களில் 600 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இத்தகைய வேலைகளை செய்த அனுபவமு டையவர்கள் மட்டுமேஇந்த ஒப்பந்த வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். இதன்படி பார்த்தால் கடந்த ஏழு வருடங்கள் எமது பிரதேசத்தில் 600 மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்தி வேலைகள் கூட செய்யப்படவில்லை. அப்படி இருக்கும் போது இப்பிரதேச முதலீட்டாளர்கள் எப்படி 600 மில்லியன் டொலர் பெறுமதியான வேலைகளை செய்த அனுபவமுடையவர்களாக இருக்க முடியும்? எம்மவர்கள் இந்த ஒப்பந்த வேலைகளை பெறக்கூடாது என திட்டமிட்டு இந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவதாக வெளிமாவட்டங்களிலிருந்து இத்தகைய ஒப்பந்த வேலைகளை பொறுப்பெடுத்தவர்கள் வெளிமாவட்டங்களில் இருந்தே தொழிலாளர்களையும் கொண்டு வருகின்றனர். உள்ளூர் வாசிகளுக்கு வேலைவாய்ப்பு கூட இல்லை.

இதனால் வெளிமாவட்டத்தவர்களுக்கே ஆதாயம் கிடைக்கின்றது. வேலை வாய்ப்புக்களும் கிடைக்கின்றன. எமது பிரதேசத்திற்கு ஒதுக்கப்படும் நிதியினால் உள்ளூர் வாசிகளுக்கு எந்த நன்மையும் இல்லை. உள்ளூரில் பணச்சுற்று ஏற்பட்டால்தான் இப் பகுதியும் வளர்ச்சி அடையும்.

கே:-18 ஆவது திருத்தத்தின்படியும் உள்ளூராட்சி சபைகள் திருத்தச் சட்டத்தின் படியும் எதிர்காலத்தில் தேர்தல்கள் நடைபெற உள்ளன. அப்போது நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவையாக இருக்கும்?

ப:- மாகாண சபைத்தேர்தல் நடைபெற வுள்ளது.அதற்கு முன் தேர்தல் மாவட்டங்கள் மறுசீரமைப்பு செய்யப்படவேண்டும்.

தென்பகுதியில் நிர்வாக மாவட்டங்கள் அனைத்தும் தேர்தல் மாவட்டங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் வடக்கில் மட்டும் நிர்வாக மாவட்டங்கள் இணைக்கப்பட்டு தேர்தல் மாவட்டங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து எவரும் நேரடியாக தெரிவு செய்யப்பட முடியாத நிலை ஏற்படுகிறது.

எனவே வடபகுதியில் உள்ள எல்லா நிர்வாக மாவட்டங்களும் தேர்தல் மாவட்டங்களாக தனித்தனியாக உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மாற்றம் உடனடியாகத் தேவை.

கே:- இது குறித்து அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத மூத்த அரசியல் தலைவர்கள் பலரும் இதுவரையில் இந்தப் பாதிப்பைச் சுட்டிக்காட்டவில்லையே?

ப:- அதனால் தான் தற்போதைய தேவை உணர்ந்து அதனை நான் முன்வைக்கிறேன்.

கே:- தமிழ்தேசிய கூட்டமைப்பின் மூத்த தலைவர்களான இரா.சம்பந்தனும், மாவை சேனாதிராஜாவும் தமிழ் தேசிய கூட்டமைப்பை தனிக்கட்சியாக பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளனர். இதனால் அமைப்புக்குள் மேலும் சிக்கல்கள் ஏற்படுமா?

ப:- அவர்கள் தனிப்பட்ட முறையிலே கையொப்பமிட்டு விண்ணப்பித்துள்ளனர். எனினும் இன்று வரை அது பதிவு செய்யப்படவில்லை அப்படி பதிவு செய்யப்படிருந்தால் எதிர்வரும் தேர்தலில் சில சிக்கல்கள் ஏற்படலாம்.

அதாவது தமிழரசுக்கட்சியின் சின்னத்திலா அல்லது கூட்டமைப்பின் சின்னத்திலா போட்டியிடப்போகின்றனர் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இதனால் இப்போது எந்த பிரச்சினையும் இல்லை. பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

கே:- தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஒதுக்கப்படும் நிதியை பிரதேச மக்களுக்கு செலவிடுவதில்லை. வருடத்தில் பெரும்பகுதியை வெளிநாடுகளிலேயே கழிக்கின்றனர், என்ற ஒரு குற்றச் சாட்டும் எழும்பி உள்ளதே. இது சரியா?

ப:- இது தவறு. ஒவ்வொரு உறுப்பினர்களும் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை தமது பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கே செலவிட்டுள் ளனர். தமக்கு ஒதுக்கப்பட்ட 50 லட்சம் ரூபாவில் ஒரு சதத்தையேனும் இவர்களின் சொந்த விடயங்களுக்கு செலவிடமுடியாது. அதற்கான விதியும் இல்லை. வெளிநாடு செல்பவர்கள் தமது சொந்தச் செலவிலேயே செல்கின்றனர் என்பது தான் உண்மை. திறம்பட சேவை செய்தவர்களே மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.✱✱✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 154

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| | ■ | 9 | 10 | | ■ | 11 | |
| 12 | 13 | | | ■ | 14 | | ■ |
| 15 | | ■ | 16 | 17 | | ■ | 18 |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| ■ | 21 | | ■ | 22 | | | |
| 23 | | | | | ■ | 24 | |

அனுப்புபவர் பெயர்:.............................................................

விலாசம்:.............................................................

.............................................................

கையொப்பம்:.............................................................

### இடமிருந்து வலம்

1. வழமை/ மாமூல்/ சாதாரண நிலை.
4. தினசரி மாறுவது.
7. சத்திரம்.
8. தாழை வகைத் தாவரம். இத்தாவரம் அதிகம் கொண்ட காட்டையும் அழைப்பர்.
9. ஒரு பலகார வகை. காதர் என்ற நகைச்சுவை நடிகருக்கு இது பட்டமும் கூட.
11. இது அறுபத்தி நான்காமே!
12. சீட்டு விளையாட்டில் இதற்கு மதிப்பு.
14. நாம்.
15. வாழ்.
16. ரசிக்கும் பண்பு.
19. சமையலறைக் கருவி.
20. பருத்து வளர்ந்து விழுது விடுவது.
21. அரைவாசி.
22. பாண்டவர் மனைவி.
23. இனிக்கும்/ தமிழகத்திலிருந்து வெளியாகும் ஒரு சஞ்சிகை.
24. அதிகம்.

### மேலிருந்து கீழ்

1. அனைத்தையும் அனைவரையும் ஒன்றாக நோக்கும்.
2. தாண்டு.
3. வெறும் வாய் வீச்சு/ தற்பெருமை அடித்தல்.
4. வலிமை.
5. ஓர் இராசி.
6. சிதம்பரம்.
8. ஆண் ஆடு.
10. உயர்ந்து நிற்பது.
13. அவை.
14. படை.
17. உணவுக் குழாயில் நடப்பது.
18. மணம் பரப்பும் மலர்.
19. கூட.
20. விவகாரமான ஆள்/ நபர்.
21. தாய், சேய்க்கு ஊட்டுவது.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 154**

நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,

இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 27.10.2010 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.133இல்வெற்றிபெறுவோர் களது விவரம் 31.10.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 132 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சபதம் (4)எமது. (7)குலம். (8)யாத்திரை. (9)புகழ்தல். (11)தகராறு. (14) லைலா. (15)வலி. (16)சரி. (17)சாதல். (19)புதிய. (20)காரம். (21) நண்பன். (22) தும்பிக்கை. (23) தினை.

**மேலிருந்து கீழ்**

(1)சகுந்தலை. (2)பல. (3)தம்புரா. (4)எத்தன். (5) மதில். (6) துரை. (8)யாழ். (10)கறுவல். (12)கலாசாரம். (13)பெரியன்னை. (16)சதிபதி. (18)தம்பி. (19)புண். (20) காது. (21) நகை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 132 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **த.சுவர்ணா,** 13, கொல்லவிளான்குளம், வவுனிக்குளம்.

2 ஆம் பரிசு — **கோபாலகிருஸ்ணசர்மா,** கோகுலம், உடுவில், சுன்னாகம்.

3 ஆம் பரிசு — **சி.பானுராஜா,** அக்கராயன் அ.மி.த.க.பாடசாலை, கிளிநொச்சி.

4 ஆம் பரிசு — **திருமதி ஜே.மதுமதி** வத்திராயன் வடக்கு, தாளையடி.

5 ஆம் பரிசு — **த.புஸ்பமாலினி,** புனித சொஸ்ரியார் கோயில் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **ப.தர்சன் மேரியன்,** இல. 4, சென்.மேரிஸ் வீதி, நாவாந்துறை யாழ்ப்பாணம்.

(2) **ஐ.தயாபரன்,** கைதடி தெற்கு, கைதடி.

(3) **ப.காண்டீபன்,** மலர் மாளிகை, கருணாநிதி சனசமூக நிலையம், வல்வெட்டித்துறை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தை சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# பயணத்திற்கு சொல்லவில்லை

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றாலும் திருக்கோணமலையில்தான் தனது கணவனின் தமையன் வேலை செய்கிறார் என்று நினைத்தபோது, எங்குபோய்த் தங்குவது என்று தெரியாது விழித்தபோதே 'கடிதம் எழுதி அப்புவுக்குப் போட்டுட்டியா?' என்று காந்தன் சொன்னது - கீதாவின் பிரச்சினையைத் தீர்க்கலாயிற்று.

'வீடு புதுசென்று நினைச்சுச் சாப்பாட்டைக் குறைக்காதே - நல்லா வயிறுமுட்ட போட்டுப்பிடி' நகைச்சுவையோடு காந்தன் கூறுவதை சிரித்தபடியே கேட்ட கீதா, 'எனக்குப் புதுவீடல்ல... உங்களுக்குத் தான்' என்று சொல்லிக் கொண்டு சாப்பிடுவதை, நிறைந்த கண்களோடு பார்த்து மெய்மறந்து, சட்டிக்குள் இருந்த உடும்பு இறைச்சியை அள்ளிப்போடலானாள், அப்புவின் மனைவி ஆச்சி.

'ஆச்சி.... கண்ணன் வீட்ட போயிட்டு வாரம்.... ஆச்சி போயிட்டு வாரம்..' கீதாவும், காந்தனும், கீதாவின் தம்பியும் விடைபெற்றுக்கொண்டு நடக்கலாயினர். இருவருடங்களாக வேலைசெய்ததன் நிமித்தம் திருக்கோணமலையினை நன்கு தெரிந்த காந்தனுக்கு அண்ணன் வீடிருக்கும் இடமும் தெரிந்தேயிருந்தது.

'அண்ணன்.... அண்ணி.... கதவைத்திறவுங்கோ...' காந்தன் பூட்டப்பட்டிருந்த கதவினைப் பலமாகத் தட்டிக் குரல் கொடுத்தான், ஐந்து நிமிட தட்டலின் பின்புதான் கதவு திறக்கப்பட்டது. கதவினைத் திறந்த அண்ணனின் மகனிடம், 'அம்மாவைக் கூப்பிடு, சித்தப்பா யாழ்ப்பாணத்தால் வந்திருக்கிறாரென்று சொல்லு. இந்தா பிஸ்கற்... என்று சொல்ல முந்தியே -

'வழி தெரியாம வராதபடி மிதிச்சிட்டீங்க போல, கண் நல்லாத்தானே உங்களுக்கு இருக்கு.' அண்ணி கோபத்தோடு பேசியதைப் பொறுத்துக்கொண்டு கதிரையொன்றில் பலாத்காரமாகவே அமர்ந்தான் காந்தன். கீதா நின்றுகொண்டிருந்தாள்.

'இன்றைக்குச் செவ்வாய்க்கிழமை. தண்ணீ குடுத்தாக் கூடத் தோஷமாச்சே. கடிதம் போடக்கூட நாங்க என்ன உங்களுக்குக் குறைஞ்சவங்களாய் போயிட்டம் போல... யாரோ எவரிடமோ.... வந்து தங்கிட்டு.... இஞ்ச வாறியளே... வெட்கமா இல்லை. இஞ்ச என்ன எங்களைப் புதினமா பார்க்க வந்தீங்க... உங்களுக்கு இஞ்ச என்னவேலை? அவர் வேலைக்குப் போயிட்டார். இதை அறிஞ்சாரென்றால் எனக்குத்தான் ஏச்சு நடக்கும். அவர் 'நீங்க வந்தால் கதவைப்பூட்டி எதுவுமே பேசாது திருப்பி அனுப்பச் சொல்லியிருந்தார்.' வந்தது வந்திட்டீங்க இனிமே போகலாம் தானே. எனக்கு வேற வேலை இருக்கு. அவருக்குச் சோறும் கட்டி அனுப்ப வேணும்.'

காந்தன் பொறுமையோடு, அண்ணி சொன்னதையும் - அதற்கு, பதில்களை கீதா சொன்னதையும், கேட்டவன் முடிவாக ஏதோ எண்ணத்தோடு எழுந்தான்.

'கீதா.... நீ என்னத்திற்கு நாடிமேல் கையை வைச்சு, கப்பல் கவிழ்ந்தவள் போல யோசிக்கிறாய். சும்மா இதுகளை விட்டுட்டு வேற பேசுவம்.'

காந்தன் கீதாவின் சிந்தனையினைக் கலைந்தான்.

'நீ சும்மா இரு. அது எனக்குத் தெரியும்.' காந்தன் ஆவேசத்தோடு சொல்லிக்கொண்டே 'பொலிஸ் இஞ்சவா....' என்று மாறுபட்ட குரலோடு நாயினை அழைத்து அதனை மெதுவாகத் தடவிக் கொடுக்கலானான்.

'தம்பியா.... நாளை நீங்க ஊர் போற சங்கதி கொண்ணைக்குத் தெரியுமா?' அப்பு இடைமறித்தார் காந்தனை.

'தெரியுமணை.... அங்க அவையள் வீட்டில் இருக்கிற பெடியன் என்னை - 'நீங்க வரமாட்டீங்களா' என்று கேட்டதிற்கு 'நாளைக்கு ஊரு போறேன்' என்று கதையோடு கதையாய் சொன்னார். அவன் அண்ணைக்குச் சொல்லியிருப்பான். அவருக்குக் கட்டாயம் தெரிந்துதான் இருக்கும்.'

'பாரன் விடிஞ்சதும் வந்து உன்னை கொண்ணர் கூப்பிடாட்டி....'

'அப்பு இஞ்ச நாலு நாளாய் நிற்கிறன். ஒரு நேரச் சாப்பாட்டிற்காவது கூப்பிட அவருக்கு மனம் வந்ததா! இன்றைக்குக் கூட கோயிலில் கண்டனான். என்னைக் கண்டதும் என்ன மாதிரி ஆள் அடி மறைஞ்சது. இனியும் நீங்களே அவர் வருவாரென்று நம்புறீங்களா. இல்லை. பொம்பிளைகளைன்ர புத்தியைக் கேட்டா எல்லாரும் இப்படித்தான் அப்பு இருப்பாங்க....'

'நீ.... இருந்து பாரன்...' அப்பு உறுதியாகக் கூறிவிட்டு மற்றப் பக்கம் சரிந்து படுக்கலானார்.

நீண்ட அமைதியில் இருள் நீண்டு கொண்டேயிருந்தது.

'அப்பு.... போட்டுவாறம். நீங்க கட்டாயம் நல்லூர்த் திருவிழாவுக்கு வரவேணும்... ஆச்சி வரட்டோ.... போனதும் காகிதம் போடுறம்...'

பயணத்திற்கான வழியனுப்பு வேலைகளில் மும்முரமாக நின்ற அப்புவிடமும் மற்றவர்களிடமும் [illegible] சொல்லிக்கொண்டனர் காந்தனும் கீதாவும். பயணமேற்ற - பயணச் சாமான்களை சைக்கிளில் கட்டி உருட்டிக்கொண்டு செல்லும் அப்புவின் மகனின் பின்னால் நடந்த காந்தனோடு ஒட்டு உரசியபடியே வந்த கீதா.

'இஞ்சாருங்கோ..... நாங்க செய்ததும் பிழைதானே. உங்க அண்ணனுக்கும் நாம் கடிதம் போட்டிருக்கலாம். இதைத்தானே அவையள் பிடிச்சுப்போட்டு எங்களை ஏசியிருக்கினம். என்ன ஏசினாலும் பரவாயில்லை. வாங்க ஒருக்கா.... சொல்லிவிட்டாவது போவம் - ஊரு போகிறமென்று.'

காந்தன் சிரித்துக்கொண்டே 'போற பயணத்திற்கு முதல்படியாய் ஏச்சையும், பேச்சையும் வேண்டச்சொல்லுறியா! சந்தோஷமாக நாம் போகாம சண்டையைப் பிடிச்சுக் கொண்டு போகச்சொல்லிறியா?'

'என்ன இருந்தாலும் கடமைக்காவது நாங்க ஒருக்கா அவையளுக்கு ஊருக்குப் போறதைச் சொல்லிவிட்டுத்தான் போகவேண்டும். நீங்க வராட்டியும், நானாவது தம்பியைக் கூட்டிக்கொண்டுபோய் சொல்லிவிட்டுத்தான் வரப்போறன்.' கீதா இடையில் நின்றுவிட்டது,

காந்தகுக்குச் சங்கடமாகியேவிட்டது.

காந்தனால் இனிமேலும் தனது இதயத்தில் பொதிந்துள்ள இரகசியத்தைப் பாதுகாக்க முடியவில்லை. அண்ணியின் மன ஊறலை கீதாவுக்குத் தெரியப்படுத்தினால் ஒழிய அவள் இக் கட்டத்தில் சமாதானப்படமாட்டாள் என்பது காந்தனுக்குத் தெரிந்தது.

'கீதா... நான் அண்ணருக்குக் கடிதம் போடச் சொல்லாததிற்கும் ஒரு காரணம் இருக்கு....'

'அப்படியென்னங்க...'

'இது இருக்கட்டும். அண்ணை வீட்டுக்கு நேரே போகாததைத் தானே குறையென்று நினைச்சு எங்களைப் பேசியிருக்கினம் என்று நீ நினைக்கிறாய்'.

'ஓம்...'

'உண்மையில விடயம் அது அல்ல...'

'அப்ப...'

'உன்னை நான் கலியாணம் செய்ததே அண்ணிக்குப் பிடிக்கவில்லை'

'என்ன?'

'அவ தன் தங்கைக்கு என்னை மாப்பிள்ளையாக்க நினைச்சிருந்தா. அது முடியவில்லை... பழிக்குப் பழியாய்... போன எங்களைத் திட்டித் தீர்த்துத் திருப்பி அனுப்பியிருக்கிறா. பாவம் அண்ணை...'

'கெதியாய் நடவுங்க... யாழ்ப்பாண பஸ் போனாலும் போயிடும்.'

கீதாவின் இதயத்தில் அப்போதெழுந்த ஊறல் ஒன்றே - காந்தனைத் துரிதப்படுத்தியது.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மருத்துவ பீடத்தின் முன்னேற்றகரமான அணுகுமுறைகளை போர்ச் சூழல் காரணமாக கைவிட நேர்ந்தது

**யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வின்போது கடந்த செப்ரெம்பர் 12 ஆம் திகதி இடம்பெற்ற கடைசிநாள் நிகழ்வில் 'யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கல்வி' என்ற தலைப்பில் யாழ்.மருத்துவ பீடாதிபதி, பேராசிரியர் க.சிவபாலன் நிகழ்த்திய பேராசிரியர் செ.சிவஞானசுந்தரத்தின் (நந்தி) நினைவுப் பேருரையின் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கல்வி 2

**இலங்கையில் மருத்துவக் கல்வி**

வைத்திய கலாநிதி சாமுவேல் கிறீன் அவர்களால் மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி சரித்திரத்தில் பதியப்படவில்லைபோல் தோன்றுகிறது. யாழ்.மருத்துவ சங்கத்தின் வருடாந்த அமர்வின் சம்பிரதாய ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினர் உரையை ஆற்றிய வைத்தியகலாநிதி ராஜரட்ணம் தனது மூதாராயர் மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் கற்றதாகவும் சிறீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் நாரத வர்ணகுலசூரிய இம் மருத்துவக் கல்லூரி பற்றி அண்மைக்காலத்தில் எழுதியுள்ளமை பற்றிக் கூறியுள்ளமை மகிழ்வைத் தருகிறது. ஆனாலும் இம்மருத்துவக்கல்லூரி குறுகிய காலத்திலேயே மூடப்பட்டுக் கொழும்பு மருத்துவக் கல்லூரி 1870 இல் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு இறுக்கமான பாரம்பரிய கல்விமுறையுடன் இருக்க இரண்டாவது மருத்துவபீடம் 1964 இல் மாறுபட்ட கற்பித்தல் முறையுடன் பேராதனையில் ஆரம்பிக்கப்பட்டது.

பேராதனை மருத்துவபீடம் கற்பித்தலிருந்து மாறுபட்டு ''முயன்று கற்றல்'' முறையைக் கையாண்டது. மாணவர் விரிவுரைகளில் சும்மா இருக்காமல் கேள்விகளைக் கேட்டுத் தேவையானதைக் கற்க ஊக்குவிக்கப்பட்டனர். முதல் வருடத்திலிருந்தே வைத்திய விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கண்டி மருத்துவர் சங்கத்தினால் செவ்வாய்க் கிழமை மாலைகளில் நடாத்தப்படும் கருத்தரங்குகளும், வியாழன் காலைவேளையில் கண்டி வைத்தியசாலைப் பிரேத அறையில் நடத்தப்படும் வைத்திய நோயியல் கருத்தாடல்களும் அளவிடமுடியாத முறைசாராக் கல்வி அனுபவத்தை மாணவருக்கு வழங்கின. பல்துறைசார்ந்த நிபுணர்கள் மாணவர் முன்னிலையில் விறுவிறுப்பாகவும் திறந்த மனதுடனும் சரியும் பிழையும், செய்ததும் விட்டதும் கடந்த கால தற்கால மற்றும் எதிர்கால சிகிச்சைத் திட்டங்கள் போன்ற விவாதங்களில் ஈடுபடுவது மாணவர் மனதில் பதிவை ஏற்படுத்தியதுடன் வேறெங்கும் பெறமுடியாத கற்றல் அனுபவத்தை வழங்கியது.

பேராசிரியர் வரகுணம் மருத்துவக் கல்வியில் விசேட பயிற்சிபெற்று நாடுதிரும்பியதும் 1972 இல் இலங்கையின் முதலாவது மருத்துவக் கல்வி அலகு பேராதனையில் ஆரம்பிக்கப்பட்டது. அது அங்கிருந்த ஆசிரியர்களில் பாரிய மாற்றத்தை முதலில் ஏற்படுத்தி, பின் எல்லா மருத்துவபீட ஆசிரியர்களுக்கும் பயன்பட்டு, எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் ஆசிரியர் விருத்தி மையங்கள் உருவாகக் காரணமாக அமைந்தது.

அடுத்த இரு மருத்துவ பீடங்கள் யாழ்ப்பாணத்திலும் கறப்பிட்டியவிலும் 1978 இல் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து றாகம, சிறீஜயவர்த்தனபுர, மட்டக்களப்பு, இறுதியாக அனுராதபுரத்திலும் மருத்துவ பீடங்கள் உருவாயின. இரு தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைக்கும் முயற்சிகள் தோல்வியடைந்தன.

**யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கல்வி**

பேராசிரியர் சிவஞானசுந்தரம், பேராசிரியர் கூவர் மற்றும் பேராசிரியர் பரமேஸ்வரன் ஆகியோர் யாழ்.மருத்துவ பீடத்தின் ஆரம்ப ஆசிரியராவர். இவர்களில் பேராசிரியர் கூவர் கொழும்பிலிருந்தும் மற்றையோர் பேராதனையிலிருந்தும் வந்தனர். பின்னர் ஆசிரியராக இணைந்தவர்களில் அநேகர் பேராதனையில் கடமையாற்றி அல்லது மாணவராக அங்கிருந்த கல்விச் செயற்பாடுகளில் பரிச்சயம் உள்ளவராக இருந்தனர்.

யாழ்.மருத்துவபீடம் ஆரம்பத்திலிருந்தே பாடவிதானக் குழு ஒன்றை உருவாக்கி அது தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடி வந்துள்ளது. போராசிரியர் சிவஞானசுந்தரம் மருத்துவ பீடத்தின் பாடவிதானத்தை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றியிருந்தார். பாடவிதானக் குழுவின் தலைவராக அவர் பல வருடங்கள் செயற்பட்டிருந்தார். இடையிடையே பேராசிரியர் பரமேஸ்வரனும் வேறு சிலரும் தலைமைப் பொறுப்பை வகித்திருந்தனர். ஆனாலும் இக்குழுவின் இயங்கு சக்தியாக எப்போதும் பேராசிரியர் சிவஞானசுந்தரமே இருந்தார். 1983 இவ் உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடவிதான விருத்திக்கான செயலமர்வொன்றை போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் பலரை உள்ளடக்கி நடத்தினார். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களை ஆசிரியர்களாக மதித்து அவர்களை மருத்துவபீடத்தின் முறைசார் கல்வி நடவடிக்கையில் இணைத்துக்கொண்ட முதல் சந்தர்ப்பமாக அது அமைந்தது. அந்த வருடம் பாடவிதானக் குழுவின் செயலராகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருந்தது.

மேற்கூறிய விதத்தில் உருவாக்கப்பட்ட யாழ்.மருத்துவபீடப் பாடவிதானம் வெளிப்பார்வைக்குத் தனித்தனிப் பாடங்கள் அடிப்படையில் அமைக்கப்பட்ட பாரம்பரிய பாடவிதானம் போலிருந்தாலும், அதைப் பொருத்தமானமாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்குவதற்கான பல அம்சங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. உதாரணமாக உடற்றொழிலியல் பாடம் சமுதாய மருத்துவத்துறை நடத்திய புள்ளிவிபரவியல், உளமருத்துவத்துறை நடத்திய 'நடத்தை விஞ்ஞானம்' ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. பிரயோக உடலமைப்பியல் மற்றும் பிரயோக உடற்றொழிலியல் கற்பித்தலைப் போதனாவைத்தியசாலை நிபுணர்கள் மேற்கொண்டனர். எல்லாப் பரீட்சைகளிலும் வைத்திய நிபுணர்கள் வெளிப் பரீட்சகர்களாகப் பங்காற்றினர். நோயாளர் தொடர்பான துறைகள் 'பிரச்சினையை' மையப்படுத்திய அணுகுமுறையை மேற்கொண்டன. யாழ்.மருத்துவ சங்கத்தின் செயலமர்வுகள் மாணவருக்குக் கட்டாயமாக்கப்பட்டதுடன் அங்கு சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட விடயங்கள் வழமையான விரிவுரைகளில் தவிர்க்கப்பட்டன. வைத்திய நோயியல் கருத்தாடல்கள் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய முன்னேற்றகரமான அணுகுமுறைகள் யாவும் போர் நிலைமை கடுமையானதாலும் ஆசிரியர் வெளியேற்றத்தாலும் கைவிடப்பட அல்லது சுருக்கமாக நடாத்தப்பட வேண்டியதாயிற்று.

## பாடவிதானக் குழுவின் இயங்கு சக்தியாக எப்போதும் விளங்கியவர் பேராசிரியர் சிவஞானசுந்தரமே

பல மருத்துவ ஆசியர்களுக்குப் பொதுச் சுகாதாரம் 1970 களில் வெறுப்பூட்டுவதாக இருந்தது. மருத்துவர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியின்போது ஒரு பேராசிரியர் கூறியது, '' நாம் வைத்தியர்களைப் பயிற்றுவிப்பது கழிவுவாய்க்கால்களைப் பார்ப்பதற்காக அல்ல'' பேராதெனிய மருத்துவபீடம் கிந்தகல செயற்திட்டப் பிரதேசத்தை உருவாக்கியதன் மூலம் மருத்துவ மாணவருக்குச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றலை அறிமுகப்படுத்தியது. யாழ்ப்பாண சமூக மருத்துவத்துறைக்காகப் பேராசிரியர் சிவஞானசுந்தரம் உருவாக்கிய சமூகத்தை மையப்படுத்திய பாடவிதானம் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதை மேலும் விருத்தியாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

மருத்துவப் பாடவிதானம் பெரிய அளவில் சிகிச்சை சார்ந்ததாக இருந்ததுடன் நோய்த் தடுப்பு மற்றும் சமூகத்தின் சுகவிருத்தி போன்றவற்றைக் கற்பிக்க ஒரு பாடம் மட்டுமே இருந்தது. பேராசிரியரதும் வேறுபலரதும் இடைவிடா முயற்சியால் நோய்த்தடுப்பு மற்றும் சுகவிருத்தி என்பன இப்போது எல்லாப் பாடங்களிலும் புகுத்தப்பட்டுள்ளன.

**மருத்துவப் பாடவிதானம்**

பாடவிதானம் என்பது ஒரு கல்விக்கோட்பாடு. அது ஒரு ஆவணமாகப் பதிக்கப்பட்டிருக்கலாம். அத்துடன் அல்லது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட செயற்திட்டமாக இருக்கலாம். எழுதப்படாத ஆவணமாக அது ஒரு கல்வித் திட்டத்தின் அடிப்படைத் தத்துவத்தையும் இயல்பையும் தீவிரமான மீளாய்வுக்குட்படுத்தக் கூடியதாகவும் முழுமையாக நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடியதாகவும் வெளிப்படுத்தும் முயற்சியாகும். இது வைத்தியர்கள் கற்கவேண்டிய விடயங்களையும் கற்கும் முறைகளையும் மட்டும் கொண்ட எளிமையான தெரிவுகளுக்கு அப்பால் பல விடயங்களை உள்ளடக்குகின்றது. இப்பதம் எல்லா நடவடிக்கைகளுக்கும், எல்லா அனுபவங்களுக்கும் [illegible] திட்டமிட்டபடி அல்லது வேறு தெரிவு இல்லாத நிலையில் பொறுப்பேற்கும் அனைத்துக் கற்றலுக்கான வாய்ப்புக்களையும் குறிக்கின்றது. அது முறைசார்ந்ததும் முறைசாராததும், வெளிப்படையானதும் மறைமுகமானதும், இனங்காணப்பட்டதும் இனங்காணப்படாததும், திட்டமிட்டதும் எதிர்பாராததும் ஆகிய அனைத்துக் கற்றல் வாய்ப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

பாடவிதானத்தை உருவாக்கும் கல்வியாளர் பின்வரும் எதிர்நிலைகளை மனங்கொள்ளவேண்டும்.

* அர்த்தமுள்ள கற்றிலின் உந்துவிசையாக எல்லா மாதிரிப் பாடவிதானங்களுக்கும் உருவாக்கற் தேவைகளுக்கும் அடிநாதமாக விளங்கவேண்டிய விழுமியங்களைக் கருத்திலெடுக்காது செயற்படல்.
* நிதர்சனங்களைச் சரிவர மதிக்காமல் இலகுவாக்கிய பிரதிகளை இனங்காண முயலல்.
* கற்றல் விடயங்களின் மீது முகாமைத்துவச் செயற்பாடுகளின் அதிகப்படியான தாக்கம். உதாரணமாக மதிப்பீட்டைக் கற்றற் செயற்பாடுகளின் பகுதியாக அல்லாமல் முகாமைத்துவக் கருவியாக்கல்.
* செயற்பாட்டுத் தொகுதிகள் வெளித்தெரியும் எளிமையான நடத்தைகளாக உருமாறும் எனக்கருதி, அறிவார்ந்த மதிப்பீடு போன்ற வெளித்தெரியா விடயங்களைப் புறக்கணித்து வெளித்தெரியும் செயற்பாட்டு விடயங்களை வைத்துப் பாடவிதானத்தை உருவாக்கல்.
* தரத்தை எண்வடிவில் அளவிடமுடியும் எனும் கருத்து.

1985 காலப்பகுதியில் பேராசிரியர் சிவஞானசுந்தரத்தின் முயற்சியாலும் துறைத் தலைவர்களின் ஒத்துழைப்பினாலும் இலங்கையில் பாடவிதானத்தை ஆவணப்படுத்திய முதல் மருத்துவபீடமாக யாழ்.மருத்துவபீடம் திகழ்ந்தது. மருத்துவக் கல்விக்கான தரநிர்ணயம் உருவாக்கப்படவும், தரம்பேணல் எண்ணக்கரு இலங்கையில் தோன்றவும் பலவருடங்களின் முன்னரே யாழ்ப்பாண மருத்துவ பீடப் பட்டதாரியிடம் இருக்கவேண்டிய குணாதிசயங்கள் தீர்மானிக்கப்பட்டு அவ் ஆவணத்தில் பொறிக்கப்பட்டிருந்தன. மருத்துவக் கல்விக்கான ''பாடத் தரநிர்ணயம்'' எல்லா மருத்துவபீடங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினால் உருவாக்கப்பட்டு, துணைவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர் குழுவினால் 2004 இல் பிரசுரிக்கப்பட்டது.

எமது பீடத்தின் பாடவிதானம் 2009 இல் உலக வங்கியின் 'பட்டப்படிப்பின் தரத்தையும் அர்தத்தையும் முன்னேற்றல்'' திட்டத்தின் கீழ் பாரிய மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது. எமது பீடம் வருங்காலத்தில் சுழற்சிமுறைப் பாடவிதானத்தை உருவாக்கவும் கற்பித்தலுக்கு மாணவரை மையப்படுத்திய, பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட, ஒருங்கிணைக்கப்பட்ட, சமூகத்தை மையப்படுத்திய, விருப்பத்தெரிவுக்கு இடமளிக்கக்கூடிய ஒழுங்கமைக்கப்பட்ட மாதிரியைக் கையாள்வதற்கும் தீர்மானித்துள்ளது. இவை மருத்துவக் கற்பித்தலில் நவீன முறைகளாக இருந்தாலும் இவற்றின் அம்சங்கள் பல எமது பாடவிதானத்தில் பேராசிரியர் சிவஞானசுந்தரம் போன்றவர்களின் முயற்சியால் ஏற்கனவே புகுத்தப்பட்டு செயலாக்கப்பட்டு வந்தன. இப்போது நாம் ஒவ்வொரு விடயத்தையும் கற்பிக்கும் துறைகள் அனைத்தும் ஒரே காலகட்டத்தில் தத்தமது பகுதிகளைக் கற்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அத்துடன் அவசியமான புதிய விடயங்களையும் சேர்த்துள்ளோம். ஒரு முக்கிய உள்ளடக்கம் 'தனிநபரின் இயல்புகளையும் தொழிற்துறையையும் விருத்தியாக்கும் ஆற்றுப்படுத்தல்'. நாட்டில் மாறிவரும் தேவைகளுக்கேற்ப பாடவிதானத்தில் இணைக்கப்படவேண்டிய இன்னுமொரு விடயம் 'குடும்ப மருத்துவம்'. தற்காலிகமாக இது சமூக மருத்துவத்துறையுடன் இணைந்திருக்கும்.



**பேராசிரியர் க.சிவபாலன்,**
**மருத்துவ பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புலனற்றோர் சங்கத்தின் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தால் நல்லூர் பெருந்திருவிழாக் காலத்தை முன்னிட்டு விற்பனை செய்யப்பட்டு வந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

சீட்டிழுப்பில் தெரிவு செய்யப்பட்ட எண்களின் விவரம் வருமாறு:

முதல் பரிசு - 05149, 2ஆம் பரிசு - 25089, 3ஆம் பரிசு - 53390 என்பனவும் -

ஆறுதல் பரிசில்கள் பெறும் எண்களின் விவரம் வருமாறு:

00123, 14719, 07094, 52002, 00986 ஆகிய எண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி தெரிவு செய்யப்பட்டுள்ள எண்களுக்குரிய அதிஷ்டசாலிகள் தமக்குரிய பரிசில்களை அடுத்த மாதம் 16ஆம் திகதிக்கு முன்பதாக யாழ்.விழிப்புலனற்றோர் சங்க அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தி உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(201)

## திறந்த பல்கலையின் மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.17

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் எதிர்வரும் செவ் வாய், புதன்கிழமைகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளுமாறு அதன் இணைப்பாளர் கேட்டுள்ளார். (ஓ-16)

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் 01கோழிக்குஞ்சு விநியோகிக்கப்படும்.முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ சங்கீத் களஞ்சியம், பொன்னாலை வீதி, மானிப்பாய்.
★ லக்ஸ்மி ஸ்ரோர்ஸ், மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.
★ கிருஷ்ணா ஸ்ரோர்ஸ், குளப்பிட்டிச் சந்தி, கே.கே.எஸ் வீதி.

தொடர்புகளுக்கு:-0728039327

## காவலாளி தேவை

மானிப்பாயில் உள்ள வீடு ஒன்றுக்கு இரவுக் காவலாளி தேவை.

தொடர்பு: 0777568685 (104742)

## வாடகைக்கு விடப்படும்

ஆனைக்கோட்டைச் சந்தியில் வியாபாரம் செய்யக்கூடிய நல்ல சூழலில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு நிலையமும் பான்சி விற்பனைப் பொருள்களும் அடங்கிய கடை பொருள்களுடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0718181250 (104749)

## எழுதுநர் தேவை

எமது நிறுவனத்திற்கு கணக்கு எழுதுநர் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: S.K.ஏஜென்ஸி
128/D, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (104740)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2010ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த

**சிவானந்தன் தர்சிகா**

172 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரை மாமாமார் கல்வியில் மேலும் சிறக்க வாழ்த்துகிறார்கள்.

தம்பளை, சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

வாழ்த்துவோர்:
**மாமாமார்கள்.**

(104756)

## தவறிவிட்டது

நாவற்குழி சந்தி, கைதடி என்னும் முகவரியைச் சேர்ந்த லோறன்ஸ் விறைனஸ் என்பவரின் தேசிய அ.அ (873224258V), இராணுவ அ.அ, தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 0770711562

## STUDY IN UK



VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை
முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்!

NO NEED IELTS

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
(A Subsidiary of Flex Graphic)

FLEX Graphic

www.flexinstitute.lk

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நவீன குளி ரூட்டப்பட்ட 4 அறைகளைக் கொண்ட வீடு வாகன தரிப்பிட வசதிகளுடன் உண்டு. NGO'S நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மாலை 5 மணிக்குப் பின் பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:- 0777062349,
0714933270

மின்னஞ்சல் முகவரி:-prshnthn @ yahoo.com

## வதிரி, கரவெட்டி ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத்தினரின் பாராட்டு



மேற்படி இல்லத்தின் தர்மகர்த்தா சபை உறுப்பினரும் தென்மராட்சிப் பிரதேச செயலருமான உயர்திரு.

**செ.ஸ்ரீநிவாசன்**

அவர்கள் மேலதிக அரச அதிபராகப் பதவி உயர்வு பெற்றதற்காகவும் யாழ்.பல்கலைக்கழகத்தின் 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் அபிவிருத்தி கற்கை நெறியில் விசேட தர முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றதற்காவும் மனமுவந்து பாராட்டுவதுடன் மென்மேலும் பதவி உயர்வுகளும் பட்டங்களும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர்.

**வாழ்த்துவோர்:**
தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள், ஊழியர்கள், சிறுவர்கள், முதியோர்.

## தேவை

✱ ஒரு அறை- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில்

✱ ஒரு சட்டத்தரணி - குற்றவியல் சட்டத்தில் அனுபவம் உள்ளவர்.

தொடர்பு: K.R. சிவம்,
மகாதேவ ஆச்சிரமம், கந்தர்மடம்.

## Top Style Creation

**Hair and Makeup Artist**



அழகுக்கலை நிபுணரான

**திருமதி தர்ஷிலி ரஞ்சன்**

அவர்கள் கடந்த 24 வருடங்களுக்கு மேலாக **Harshi's Beauty Studio** எனும் பெயரில் **Australia** வில் நவீன முறையிலான முக ஒப்பனைகள், பேஷியல், தலையலங்காரங்கள், மணப்பெண் அலங்காரங்கள் மற்றும் **Pimple treatment, Skin care, Makeup** என்பவற்றினையும் செய்து வருகிறார். அத்துடன் **Henna and Nail Art Designs** செய்முறை வகுப்புக்களையும் நடத்துகிறார். இவர் வரும் **November** - 2010 இல் இலங்கை வந்து வடக்கு. கிழக்கு மாகாணங்களிலும் கொழும்பிலும் இலவச கருத்தரங்கினையும் அதனைத் தொடர்ந்து பயிற்சி வகுப்புக்களையும் நடத்தவுள்ளார்.

பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றுவோருக்கு விசேட சான்றிதழ்களும் வழங்கவுள்ளார். வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கு குறுகியகாலப் பயிற்சி வகுப்புக்களும் உண்டு.

2005 இல் திருமதி தர்ஷினி அவர்கள் இலங்கை வந்தபோது 80 மாணவிகளுக்கு கருத்தரங்கினையும் அதனைத் தொடர்ந்து பயிற்சி வகுப்புக்களையும் இலவசமாக நடத்தி பலருக்கு விசேட சான்றிதழ்களும் வழங்கினார்.

இவர் இலங்கையில் வந்து தங்கியுள்ள காலத்தில் மிகக்குறைந்த செலவில் மணப்பெண் அலங்காரங்களும் செய்து கொடுக்கவுள்ளார். **November - 2010**

**பயிற்சி நெறி நடத்தும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்**

தொடர்புகளுக்கு: harishi09@gmail.com
யாழ்ப்பாணம்: திருமதி ரஜனி டேவிட் 0779010427
திருமதி இந்திரா பாலசிங்கம் 0212227491

கொழும்பு: வின்சென்ற் 0772070401

## German Swiss மொழிகள்

German Swiss மொழி வகுப்புகள் German இல் இருந்து வந்த ஆசிரியையால் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு:- No.10, Palaly Road, Jaffna.
T.P: 0771604823

## வியாபாரக் கணக்குகள்

நவீன முறையில் வியாபார இலாப நட்டக் கணக்குகள் தயாரித்து வழங்குவதுடன், வருமானவரி, மொத்த விற்பனை வரி, (Turnover Tax) vat வரி, ESC வரி சம்பந்தமான திரட்டுக்கள் பூரணப்படுத்தியும் வரிகள் தொடர்பான ஆலோசனை களும் வழங்கப்படும். தொடர்பு: 0774431701, 0776150569

## ஜேர்மன், சுவிஸ் செல்ல எதிர்பார்த்திருப்போருக்கு ஓர் இனிய நற்செய்தி

ஜேர்மன் மொழி (Deutsch) (Gothe Institute) இல் நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர் திரு. இ.மயூரன் அவர்களால் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது பரீட்சைக்கு ஏற்ற வகையில் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு :-
பேரம்பலம் றோட்,
பெரிய மாவடி, சாவகச்சேரி.
தொடர்பு: 0774706386 (104717)

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் உயர்தர விதிமுறைகளுக்கு அமைந்த கோயில் கலசங்கள், தீபங்கள், குத்துவிளக்குகள், சரவிளக்குகள், கெண்டிவகை, பட்டுக் குடைகள், ஆலவட்டக் குடைகள், கும்பக் குடைகள், திருவாசிகள், வெண்சாமரை, சோட உபசார செற்றுகள், கும்பதீபங்கள், பஞ்சாலாத்திகள், அடுக்குத் தீபங்கள் இன்னும் பல தீபங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**பிள்ளையார் பெட்டல்**
இல.64, வைரவர் கோயில் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.

தொ.பே: 024 222 2097
024 222 0129

## தேவை

O+கிட்ணி உடன் தேவை. வழங்குபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:0718383980

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சுப்பிரமணியம் சரவணபவன்**
சிற்ப ஆசாரி, 14BA, தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 490 0085
077 411 2049

## வீடு விற்பனைக்கு

செல்வச்சந்நிதி தொண்டைமானாறு, பருத்தித்துறை பிரதான வீதிக்கு மிக அண்மையில் ¾ பரப்புக் காணியில் 3 அறைகள் கொண்ட வீடும்,கிணறும் மிக நியாய விலையில் விற்கப்படும். தொடர்பு:- இந்திரா:- 0775307606 சந்திரன்:- 0777066084

## SPS போக்குவரத்துச் சேவை விசேட கட்டணம்

23.09.2010 முதல் எதிர்வரும் தீபாவளி திருநாளை முன்னிட்டு எமது போக்குவரத்துச் சேவையின் கட்டணங்கள் அனைத்தும் குறைக்கப்பட்டுள்ளன என்பதை எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | முன்னைய கட்டணம் | தற்போதைய கட்டணம் |
|---|---|---|
| ★ பஜிரோ சொகுசு போக்குவரத்து குளிரூட்டியது | 1400/= | 1200/= |
| ★ பஜிரோ அரை சொகுசு குளிரூட்டியது | 1200/= | 1100/= |
| ★ இருக்கை சீர் செய்யப்பட்டது சாதாரணம் | 1000/= | 700/= |

Note:
போக்குவரத்துச் சேவைக்கான பதிவுகள் தொலைபேசி மூலம் ஏற்றுக்கொள்ளப்படும். பிரயாணச் சீட்டுக்கள் தங்கள் வதிவிடங்களுக்கு நேரடியாக வழங்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்......

✱ கொழும்பு:- 0112336953, 0114377852

✱ No.118, Dam Street, Hot line, 0777 306049 - 0777 349142
Colombo- 12

✱ யாழ்ப்பாணம்:- 021 222 4558

No.61, Arasadi Road,
Kandarmadam, Jaffna. Hot line 0771544210

நிர்வாகம் SPS போக்குவரத்து.

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை மற்றும் கோயில் பொருள்கள், தீப வகைகள், பட்டுக்குடை, திருவாசிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சி.சிவானந்தம்**
கந்தசாமி கோயில் முன்பாக
சுபாஜினி ரேட்டேர்ஸ்
A-9 வீதி, கிளிநொச்சி.
தொ.பே:- 0779779726

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, குளப்பிட்டி ஒழுங்கையில் 2¼பரப்புக் காணியும், கொக்குவில் மேற்கு CCTM ஒழுங்கையில் 2½, 2 பரப்புக் காணிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 7217, 0770711365

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா P.R. உடைய 45 வயது 5' 8'' உயரமான மணமகனுக்கு 35 வயதுக்குட்பட்ட அழகிய மணமகள் தேவை. மணமகன் தற்போது கொழும்பு [illegible]

தொடர்பு: 0773640827 (104743)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரமா? சுத்தமா? அது என்ன விலை?

நேரம் போய்கொண்டிருக்கிறதே என்கிற அவசரத்தில் வேகமாக உணவை வயிற்றினுள்ளே தள்ளிக்கொண்டிருந் தேன். சட்டென விக்கலெடுத்தது. ஒருவாய் தண்ணீருக்காக வாய் தவித்தது.

மேசையின் மீதிருந்த செம்பை எடுத்துப் பார்த்தேன். அதனுள் இருந்த தண்ணீரின் மேற்புறத்தில் தூசுப்படலம் படர்ந்துபோயிருந்தது.குடிக்கும் போது சர்வ நிச்சயமாக அந்தத்தூசும் உள்ளே போவதும் நிச்சயம். என்ன செய்யலாம்?

''அண்ணை! ஒரு கிளாசில தண்ணி தாங்கோ'' தாகத்தின் தவிப்பு குரலின் தொனியை உயர்த்தியிருந்தது. குரலின் அவசரத்தை உணர்ந்து கொண்ட உணவுபரிமாறும் இளைஞன், அருகிலிருந்த மேசையில் இருந்த கிளாசை எடுத்துக்கொண்டு ஓடினான். உள்ளே போய் தண்ணீரை எடுத்துவரப்போகிறான் என்று எண்ணிக்கொண்டிருக்கையில், அந்த நினைப்புக்கு மாறாக வெளிப்புரமாக உணவு உண்டவர்கள் கை கழுவுவதற்காக அமைக்கப்பட்டிருந்த வோஷ் ஃபேசினில் உள்ள பைப்பைத்திறந்து கிளாசை நிரப்பிக் கொண்டுவந்து வைத்தான்.இந்த இடத்தில் அந்த வோஷ் ஃபேசின் பற்றியும் சொல்லியே ஆக வேண்டும். எனக்கு முன் அந்தக் கடைக்கு எத்தனை பேர் வந்தார்கள், அவர்கள் என்னென்னவெல்லாம் சாப்பிட்டார்கள் என்பதைச் சொல்வது போல கருவேப் பிலைகளும், எலும்புத்துணிக்கைகளும் வோஷ் ஃபேசினின் துவாரத்தை அடைத்து விட்டதால், அது முழுதும் கைகழுவியோரின் கழிவுநீரைத்தாங்கி நின்றது.ஒரு வட்டப்பாதையில் அந்தக்கழிவு நீரில் சாப்பாட்டின் எச்சங்கள் சில சுழன்றுகொண்டிருந்தன. அந்தக் கிளாசில் உள்ள நீரில் மக்கி போன்ற படிவுகளும், ஒரு சில சின்னஞ்சிறிய புழு போன்ற உயிரிகளும் ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டிருந் தன. அதைப்பார்த்ததும் உள்ளே போன சாப்பாடு இதோ வாந்தியாக வெளியேறப்போகிறேன் என்று அடம் பிடித்தது. ஒன்றும் பேசாமல் , சாப்பாட்டையும் , கிளாசையும் அப்படியே வைத்துவிட்டு வெளியேறினேன். அரைவயிறு மட்டுமே நிரம்பியதால் வயிறு பசியாலும் . தாகத்தால் நாவும் எரிவது போல இன்னமும் இருந்தன.



இது போன்ற அனுபவம் யாழ்.நகரில் உள்ள உணவுக்கடைகளில் பசியாற்றச் சென்ற பலருக்கும் நேர்ந்திருக்கும். வெளியே டிஜிட்டல் பலகைகளில் மின்னிக்கொண்டிருக்கும் இத்தகைய உணவுக்கடைகளின் உட்புறமாகக் கொஞ்சம் எட்டிப்பார்த்தால் குமட்டிக் கொண்டுவருமளவுக்கு, சாக்கடை போலவே இருக்கும். இனியாவது கொஞ்சம் கடைகளின் உட்புறமாக நோட்டமிட்டீர்களானால் சத்தியமாக அதற்குப் பிறகு கடைகளில் சாப்பிடப்போவது புற்றி நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்.

இப்போதெல்லாம் எந்நேரமும் யாழ்.நகர்ப்பகுதி சனக்கூட்டத்தால் விழிபிதுங்கிக் கொண்டேயிருக்கிறது.


தென்பகுதியில் இருந்து சுற்றிப்பார்க்க வருபவர்களும், இங்கிருந்து வேறுமாவட்டங்களுக்குச் செல்ல விழைபவர்களும் நகரப்பகுதியையே இன்னும் நெருக்கடி மிக்கதாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

அதைவிட ஏற்கனவே யாழ்.நகரப்பகுதியில் இருந்த வர்த்தக நிலையங்களை விடவும் இப்போது ஏராளமான வியாபாரமையங்கள், நாளொரு வீதியும் பொழுதொரு கடையுமாக அசுரவேகத்தில் பெருகத்தொடங்கிவிட்டன. இந்த வியாபாரநிலையங்கள், வங்கிகள், அலுவலகங்கள் என்பனவற்றில் பணியாற்றுவதற்காக குடாநாட்டின் பல்வேறு திசைகளில் இருந்தும் தினசரி பெருந்தொகையானோர் நகருக்கு வந்து செல்கின்றனர்.

என்னதான் கிராமத்தில் நல்லொழுக்கம், சிறப்பான போதனைமுறை என்பவற்றுடன் பல பாடசாலைகள் இருந்தாலும் இன்னமும் காலனித்துவ மாயையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளாத யாழ்ப்பாணத்தவர்கள் தங்கள் பிள்ளைகளை ''ரவுண்'' பாடசாலைகளில் இணைப்பதைக் கௌரவமாகக் கருதுகின்றனர்.கோழி மேய்ச்சாலும் கோர்ணமேந்தில மேய்க்க வேணும் என்பது போல இப்போது கெட்டு குட்டிச்சுவராகப்போனாலும் நகரப் பாடசாலைகளில்தான் நம் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற எண்ணம் உடைய பெற்றோரே யாழ்ப்பாணத்தில் அதிகம்.அதன் காரணமாக புறநகர்களில் இருந்து நகருக்கு வந்து செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் வெகு அதிகம். இத்தகைய காரணிகளால் சனநெருக்கடியால் வீங்கிப் பெருக்கத்தொடங்கியுள்ளது யாழ்.நகர் திருவிழாக்கூட்டம் போல குவியத்தொடங்கியுள்ள மக்களின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யவென பழைய சாப்பாட்டுக்கடைகளை விடவும் புதிய -நவீன முறைமைகளை உள்ளடக்கிய- உணவுக்கடைகளும் எழத்தொடங்கி விட்டன. வேகமாக நகரத்தொடங்கிவிட்ட வாழ்வியல் முறை காரணமாக நகருக்கு வரும் பெரும்பாலானோர் தமது வயிற்றைப் பாதியாகவோ அல்லது முழுமையாகவோ குளிரப்பண்ணுவதற்கு உணவுக்கடைகளையே நம்பியிருக்கின்றனர்.

ஆனாலும் தம்மை நம்பியிருக்கும் இத்தகைய வாடிக்கையாளர்களுக்கு உரிய வகையில் இந்த உணவகங்கள் சேவையாற்றுகின்றனவா? என்ற வினா எழுப்பப்பட்டால் அதற்கு இல்லை என்பதையே பதிலாகச் சொல்ல முடியும். கிராமங்கள் புறநகர்ப்பகுதிகள் என்பவற்றில் இருக்கும் உணவகங்களை விடவும், நகரப்பகுதியில் இருக்கும் உணவங்களில் சுகாதாரச் சீர்கேடும், தரமற்ற உணவும் கிடைப்பதாக இந்தக் கடைகளில் வாங்கி உண்டு விட்டு, அதனால் பல்வேறு உடல்ரீதியான உபாதைகளுக்கு ஆளான சிலரின் புலம்பல்களும் நம் காதில் விழாமலில்லை.

சாதாரணமாக யாழ். நகரிலுள்ள ஒரு உணவகத்துக்கு நாம் சென்றால் - அந்த கடையின் சுவரின் நாலாபுறத்திலும் வர்ண 'ஸ்ரிக்கர்கள்' பல ஒட்டப்பட்டிருப்பதை பார்த்திருப்பீர்கள். உங்களுக்குத் தேவையான உணவுப்பொரு[illegible] சுகாதாரம் கருதிக் கேட்டு வாங்கிச் சாப்பிடுங்கள், இங்கு கைகளைக் கழுவுவதற்கான வசதி செய்யப்பட் டுள்ளது', 'அச்சிடப்பட்ட தாள்களில் உணவை நாம் பொதி செய்வதில்லை', 'உணவை மூடிப்பாதுகாக்கிறோம்' என்பன போன்ற வாசகங்கள் அந்த ஸ்ரிக்கர்களில் இருக்கின்றபோதும், அதற்கேற்ற வகையில் நகர்க்கடைகளில் பெரும்பாலானாவை இருப்பதில்லை. உணவுப்பொருள்களைக்காட்சிப்படுத்தி யிருக்கும் கண்ணாடி''ஷோக்கேஸில் தொடங்கி கைகழுவும் இடம் வரை



சுகாதாரமா? அது என்ன விலை? என்று கேட்கிற தோரணையில் அங்கே சுகாதாரச்சீர்கேடு கொடிகட்டிப்பறந்து கொண்டிருக்கும். பொதுவாகவே உணவுக்கடைகளின் முன்புறமாக வைக்கப்பட்டிருக்கும் கண்ணாடி ஷோக்கேஸ் களை மூடி, தேவையான போது திறந்து பொருள்களை எடுத்து விற்பனை செய்யவேண்டுமென்பதே சுகாதார அறிவுறுத்தலாக இருக்கையில், வேலைப்பஞ்சியால் எல்லாச் சாப்பாட்டுக்கடைகளிலும் 24 மணிநேர மும் இந்த கண்ணாடி 'ஷோக்கேஸ்' களின் வாய் திறந்தபடியேதானிருக்கின் றன.அதனால் தாம் விரும்பிய நேரத்தில், விரும்பய எண்ணிக்கையில், தேவைப்படும் உணவுப்பொருள்களின் மீது,ஏறி விளையாடும் சந்தர்ப்பத்தை நகரப்பகுதி உணவுக்கடைகாரர்கள் இலையான்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள்.

(கடைக்காரர்களின் இத்தகைய உதவியைப் பாராட்டி வாழ்த்தும் விளம்பரமொன்றை இலையான்கள் பத்திரிகைகளில் வெகு விரைவில் பிரசுரித்தாலும் ஆச்சரியப்படமுடியாது) சிலவேளைகளில் இலையான்கள் இறந்து போன நிலையில் உணவுப்பண் டங்களின் மீது ஒட்டியபடியே இருப்பதுமுண்டு. அதனைப் பரிமாறும் போது சிப்பந்திகள் அகற்ற மறந்தால் இலையானுடன் உணவை உண்ணும் பாக்கியம் உங்களுக்கு கிடைக்கலாம்.

உணவகங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களின் சுவாத்தியத்துக்கு ஏற்றவகையில் கட்டட அமைப்பு, கதிரை -மேசை என்பவற்று கிடையிலான இடைவெளிகள், காற்றோட்டவசதி என்பன செய்யப்பட் டிருப்பது அவசியம். ஆனாலும் அது நடைமுறையில் காணாமல் போய்விட்ட ஒரு விடயமாகவே இங்கு இருக்கின்றது. அநேக கடைகளில் முன்புறமாக- வாடிக்கையாளர்கள் இருக்கும் பகுதியை ஒட்டியதாகவே- தேனீர் தயாரிக்கும் இடமும், கொத்துரொட்டி போடும் இடமும் அமைக்கப்பட்டிருக்கின்றன.இதனால் தேனீருக்கு தண்ணீரைக் கொதிக்க வைக்கும் போதும், கொத்துரொட்டி போடும்போதும் எழுகின்ற புகை வாடிக்கையாளர்களின் மூச்சினைத் திணறவைப்பதுடன், அவர்களிடத் திலிருந்து கண்ணீரையும் பெருக்கெடுக்க வைக்கின்றன.

பல கடைகளில் உணவருந்தச் செல்வோர் அமரும் மேசைகள் சுத்தம் செய்யப்படாமல் முன்னர் சாப்பிட்டவர் களின் மிச்ச சொச்சங்களைத் தாங்கியவாறிருக்கின்றன.நாம் போய் அந்த மேசைகளில் அமர்ந்த பின்னர்தான் ஏதோ ஞாபகம் வந்ததைப் போல [illegible] கொண்டு அதனைச் சுத்தம் செய்வார்கள். இதன் போது அமர்ந்து இருக்கும் வாடிக்கையாளர்களின் உடைகளில் அந்த மிச்சசொச்ச உணவுத்துண்டங்கள் சிதறும் சந்தர்ப்பங்களும் அதிகம்.

இதை விட உணவு தயாரிக்கும் பகுதி படு மோசம். சுகாதார நடைமுறைகள் எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, சாக்கடை போல எந்நேரமும் கழிவு நீர் ஓடிக்கொண்டிருக்க அதன் அருகேதான் மரக்கறிவெட்டுதல், இறைச்சி வெட்டுதல், உணவுகளை வேகவைத்தல், என்பனவெல்லாம் தடல்புடலாக நடைபெறும். இதை விட இன்னொரு விடயமும் உண்டு. கடை வேலையாள்கள் , வாடிக்கையாளர்கள் என்போரின் பாவனைக்காக இருக்கும் கழிப்பறைகள் கூட இத்தகைய சமையற்கூடங்களை மிக நெருக்கமாக அண்டியதாகவே அமைந்திருக்கின்றன.இதனால் கழிப்பறைகளில் அலைந்து கொண்டிருக்கும் இலையான்கள் அங்குள்ள நோய்க்கிருமிகளை எந்தவித சிரமமுமின்றி இந்த உணவுகளில் தெளிக்கமுடியும். (கழிப்பறைகளின் சுகந்த வாசனையும் உணவுகளுடன் கலப்பதுண்டு) கடைகளில் உணவுப்பண்டங் களை சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் கிடாரம், சட்டி என்பவற்றின் லட்சணத்தைப் பார்த்தால் கடைகளில் ஒருபோதுமே சாப்பிடக் கூடாது என்கிற முடிவுக்கே எல்லோரும் வரக்கூடியதாகவிருக்கும்.

உணவு உண்டபிறகு கை கழுவச் சென்றால். இக்கட்டுரையின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டதைபோன்று, வாஷ் ஃபேசின் வயிற்றைக் குமட்ட வைக்கும் வகையில், கழிவுகளின் தாய் போல , கறை படிந்து, தண்ணீர் நிரம்ப, கருவேப்பிலை முதலான கழிவுகள் மிதந்தபடி கண்கொள்ளாக் காட்சி தரும். இதை ஒருவாறு சகித்துக் கொண்டு, கை கழுவிவிட்டு வந்தால் . கை துடைக்க அவர்கள் தரும் அச்சிட்ட காகிதங்களில் உள்ள அச்சுமைகள் உடலுடன் கலக்க அதிக சந்தர்ப்பங்கள் உண்டு.

அந்தக் கடதாசியை எறிய குப்பைத்தொட்டியை தேடினால், மூடப்படாத நிலையில் வழிய வழியக் குப்பைகளை ஏந்திக்கொண்டு எங்காவது ஒரு குப்பைக்கூடை இருக்கும்.சிலவேளைகளில் அந்தக் குப்பைக்கூடைகளில் இருக்கும் கழிவுகள் நான்கைந்து நாள்களுக்கு ஒருமுறைதான் அகற்றபடுவதால் அவற்றில் இருந்தும் தொற்று நோய்க்கிருமிகள் உற்பத்தியாகக்கூடும்.இதை விட இன்னமும் இடுக்கிகளைப் பயன்படுத்தாமல் , அல்லது கையுறைகளைப் பயன்படுத்தாமல் தமது கைகளால் உணவைப் பரிமாறுவோரே கடைகளில் அதிகம்.

இத்தகைய சீர்கேடுகளைக் கட்டுப்படுத்தி மக்களின் நலனைப் பேணும் முழுப்பொறுப்பும் சுகாதாரப்பரிசோதகர்களின் கைகளிலேயே உள்ளது. 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 26 ஆம் இலக்க உணவுச்சட்ட விதிகள் இந்த


- ஔவ்யன் -

அதிகாரத்தை அவர்களுக்கு அளித்துள்ளன. ஆனால் தமது கடமையை ஸ்ரிக்கர் ஒட்டுவதுடன் அவர்கள் நிறுத்திக் கொள்கின்றனர். சுகாதார நடைமுறைகள் சரிவரக் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க அவர்கள் தவறிவிடுகின்றனர். அதனாலேயே இன்னமும் கடைகளில் சுகாதாரச்சீர்கேடுகள் எந்தவிதத் தொய்வுமின்றித் தொடரமுடிகின்றது. இனியாவது சுகாதாரப்பரிசோதகர்கள் தமது கவனத்தை இந்த உணவுச்சாலைகளின் பக்கமும் சற்றுதிருப்ப வேண்டும், இல்லாவிட் டால் அண்மையில் பாணுக்குள் அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டதைப் போல வருங்காலத்தில் உணவுப்பொருள்களுக்குள் நாய்,பூனை என்பவற்றின் இறந்த உடல்கள் முழுமையாகக் கிடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை ஊரைச் சேர்ந்த அமரர் சுப்பிரமணியம் அருளானந்தம்

## அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு அஞ்சலி



**தந்தையே!**

தசம் ஒன்று ஆனதே உங்களை நாம் இழந்து
விஜயதசமி எம் வாழ்வில் மறக்கமுடியாத நாள் ஆனதே
விநாயகரின் தீவிர பக்தர் நீங்கள் அதை நினைத்தோ என்னவோ
விநாயகரும் அம்மனைத்தேடி வருகிறார் உங்கள் ஆவலால்

**தந்தையே!**

நாம் கண் கண்ட கடவுள் நீங்கள்
விண்ணுலகில் இருந்தும் மண்ணுலகில் வாழ்கிறீர்கள்
ஆண்டுகள் தசம் கடந்து விநாயகர் ஊர்வலம் வருகின்றார்
விஜயதசமியில் ஆண்டவனை அடைந்தவர்
அந்நாளை மறக்க முடியாமல் வைத்தீர்கள் உங்கள் நினைவாக

**தந்தையே!**

குடும்பம் எனும் கோயிலிலே தெய்வமாக இருந்த நீங்கள்
ஸ்ரீ சித்தி விநாயகர் பக்தனாக இறுதிவரை வாழ்ந்தீர்கள்
வாழ்வில் தெய்வபக்தி வேண்டும் என்று எம்மையும் வழி நடத்தினீர்கள்
நாம் பள்ளியில் பயிலாத வாழ்க்கைப் புத்தகம் ஐயா நீங்கள்

**தந்தையே!**

உங்கள் பிரிவினைத் தினமும் சுமக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திபெற தினமும் வணங்குகிறோம்
நீங்கள் விண்ணுலகில் இருப்பினும் எம் முகமும் பாரும் ஐயா
நினைவுகள் துயிலாது இதயத்தில் குடி இருப்பீர்கள்
ஆண்டுகள் பல உருண்டாலும் உங்கள் பெயர் இருக்கும் ஐயா.

**தோற்றம்**
**11.11.1922**

**மறைவு**
**23.09.2000**

*உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டும்:*

அன்பு மனைவி பாக்கியலட்சுமி,
பிள்ளைகள் சந்திரகுமார்,
சுசீலா, சிறீகரன், ஜீவாகரன்,
சுதர்சன், பிறேமா, சர்மா.

*106/4, வெற்றியர் லேன்,*
*ஆனந்தன்வடலி வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**தாயின் மடியில்**
**18.08.1956**

**ஆண்டவன் அடியில்**
**17.09.2010**

## சந்திரசேகரம் பவானிதேவி

மனைவியாய், தாயாய், சகோதரியாய், மகளாய், மருமகளாய், மைத்துனியாய், அத்தையாய், அன்ரியாய், சித்தியாய், அப்பம்மாவாய், அம்மம்மாவாய், ஊரிலுள்ள அயலவர்களுக்கும் உறவினர்களுக்கும் பவானி அக்காவாய் யாதுமாகி நின்ற எங்கள் அன்புத்தெய்வம் இறைவன் அடிசேர்ந்து ஒருமாதம் சென்று விட்டது. துன்பத்தைத்தந்த ஆண்டவன் அதைதாங்கும் சக்தியையும் தந்துதான் ஆகவேண்டும். கோடியுகம் சென்றாலும் எங்கள் இனிய உறவே உங்களை மறக்க முடியாதம்மா. உங்கள் இழைப்பைத் தாங்க முடியாதம்மா என் செய்வது? கவிப்பேரரசு கண்ணதாசனே சொல்லி விட்டார் கேள்வியாக கண்ணிலே நீர் எதற்கு என்றும், பதிலாக காலமெல்லாம் அழுவதற்கு என்றும் அதுபோல் எங்கள் கண்ணீர் மாலையை மானசீகமாக உங்களுக்கு அணிவித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் வணங்குவோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தியறிந்து ஓடோடி வந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியோருக்கும், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், பத்திரிகைள் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோர், இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்கள்அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடந்த 17.09.2010 அன்று இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.10.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைத்துநிற்கின்றோம்.

**அழைப்புக் கிடைக்காதோர் அனைவரும் தயவுசெய்து இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**வளாக வீதி,**
**திருநெல்வேலி.**

**குடும்பத்தினர்.**

(104769)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தாமல் உள்ளூர் மீன்பிடி முறைகளைத் தடைசெய்வதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை

கலாநிதி ஏ.எஸ்.ஆனந்தன்,
விரிவுரையாளர், புவியியற்றுறை,
யாழ்பல்கலைக்கழகம்

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அதுவரையில் வடபகுதியில் அரசினால் விதிக்கப்பட்டிருந்த மீன்பிடித் தடைகள், கட்டுப்பாடுகள் பல படிப்படியாக அகற்றப்பட்டுள்ளன. இதன்காரணமாக வழமையான மீன்பிடித் தொழில் நடவடிக்கைகள் மீனவர்களால் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் யுத்தகாலத்தில் வருடாந்தம் சராசரியாக 2ஆயிரம் மெற்றிக் தொன்னாகவிருந்த மீன் உற்பத்தி 2009இல் சராசரியாக 12ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரித்தது. 2010 இல் இது 20 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரிக்கும் வாய்ப்புக் காணப்படுகின்றது. இது யுத்தத்தின் முன்னரான காலப்பகுதியில் இருந்த உற்பத்தியில் ஆக 40 சதவீதம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இதே நிலை தொடர்ந்தால். வருடாந்தம் 20ஆயிரம் தொன்னுக்கு மேல் உயர்வதற்கான வாய்ப்புக்கள் மிக மந்தமாகவே உள்ளன. காரணம் தூரக்கரை, ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கான வாய்ப்புக்கள் வடமராட்சி கிழக்கு மற்றும் வடக்கு சார்ந்து காணப்படுகின்றபோதிலும், அதில் ஈடுபடுவதற்கான உட்கட்டுமான வசதிகள் எவையும் இதுவரை இங்கு மேற்கொள்ளப்படாதிருப்பதுடன், குறிப்பிட்ட சில கரையோரப் பிரதேசங்கள் தொடர்ந்தும் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் முடக்கப்பட்டிருப்பதும், பல மீனவக் குடும்பங்கள் தமது சொந்த இடம் திரும்பமுடியாது அகதி முகாம்களில் தொடர்ந்தும் அவலவாழ்வு வாழ்ந்து வருவதும் துறைமுகங்கள் அனைத்தும் படையினரின் பாவனைக்குள் முடக்கப்பட்டிருப்பதும் ஆகும். இவை தவிர இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலினால் வாரத்தில் குறிப்பிட்ட சில தினங்கள் தொழில் செய்ய முடியாத நிலை போன்றகாரணிகள் உற்பத்தியை பழைய நிலைக்கு கொண்டுவரத் தடையாக அமைந்துள்ளன. யாழ்குடாவில் இப்போது கிடைக்கின்ற உற்பத்தியில் சுமார்70 சதவீதத்துக்கும் அதிகமான பங்கு ஏலப்பகுதிக்குரிய சிறிய மீன் ரகங்கள் என்பதும் பெரிய மீன் வகைகளின் பங்கு குறைவாக இருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.


இவ்வாறான ஒரு பின்னணியில் கடந்த 03-10-2010 முதல் கரையோரமெங்கிலும் சிலவகையான மீன்பிடி முறைகளுக்கு அரசு தடைவிதித்திருக்கின்றது. கரையோர மீன்வளத்தின் மிகைவளச் சுரண்டலுக்கு காரணமாக இருக்கின்ற சில மீன்பிடி முறைகள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. முக்கியமாக இழுவைவலை (Trawlnet) சுருக்குவலை அல்லது பைவலை (Purse seine), தனியிழை (monofilament) தங்கூசி வலைகள், இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இவைதவிர ஏற்கனவே தடைசெய்யப்பட்டிருந்த டைனமெட் வெடிவைத்து மீன்பிடித்தல் முறையும் இதில் அடங்குகின்றது. இத்துடன் கண்டல் தாவரக்கிளைகள் வைத்து கணவாய் பிடித்தல் கண்டல் மரக்குற்றிகள், பழைய கார்களின் அடிச்சட்டங்கள் கொங்கிறீற் தூண்கள் வைத்து மீன்களை கவரச்செய்து மீன்களைப் பிடித்தல் போன்ற தவறான மீன்பிடி முறைகளும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இழுவை மடிகளும் சுருக்கு வலைகள் மற்றும் தனியிழை தங்கூசி வகைகள் என்பன சிறிய மீன்வகைகளை மிகையாகச் சுரண்டுவதுடன் அடித்தளங்களையும் கடல்வாழ் உயிரிகளின் வாழிடங்களையும் தகர்த்தெறிவதினாலும் உண்டாகும் வள அழிவுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவே இத்தகைய முறைகளுக்கு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. டைனமெட் வெடிவைத்து பிடித்தலானது மனித உயிரிழப்பிற்கும் அங்கவீனமாவதற்கும் காரணமாக இருப்பதுடன் பவளப்பாறைகளைச் சிதைத்து அழிப்பனவாக இருப்பதினாலும் கடலில் (DUMP) குவிக்கப்பட்டிருக்கும் பழைய கார் அடிச்சட்டங்கள், மரக்குற்றிகள், கொங்கிறீற் தூண்கள் என்பன சிற்றளவு மீன் வகைகள் கரைவலை போன்றவற்றிற்கு கடும் சேதம் விளைவிப்பதன் காரணமாகவும் இம்முறையும் ஏற்கெனவே முற்றாக தடைவிதிக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் கடல்வள முகாமைத்துவத்திற்கு அவசியமானவை. இது வரவேற்கக் கூடிய ஒரு விடயம். ஆயினும் நடைமுறையில் எந்தளவுக்கு இவை சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. வட மாகாணசபைத் தேர்தல் வந்தால் இதற்கான பதில் கிடைக்கும். ஏற்கெனவே வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இழுவை மடித்தொழில் முற்றாகத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆயினும் யாழ். மாநகர சபைத் தேர்தல் வந்தபோது அரசியல் லாபம் கருதி இழுவை மடிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனால் இன்றுவரை நூற்றுக்கு மேற்பட்ட ரோலர்கள் குருநகர்ப்பகுதியிலிருந்து வடபகுதிக் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகவும் சிற்றளவு மீன்பிடியாளர்கள் இதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கள ஆய்வுகளிலிருந்து அறிய முடிந்தது. இத் தகைய நடைமுறை எவ்விதத்திலும் கடல்வள விருத்திக்கு உதவப்போவதில்லை என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும். இவ்வாறான ஒரு பின்னணியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது கேள்விக்குரியதே.

எல்லாவற்றுக்கும் மேலாக இங்கு இப்போது தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள மீன்பிடி முறைகள் யாவும் அவிழ்த்துவிட்ட எருமை மாடுகள் போல் வடபகுதிக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களால் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. நூற்றுக்கும் மேற்பட்ட பாரிய இழுவைப் படகுகள் மற்றும் வத்தைகள் எனப்படுகின்ற படகுகள் மூலம் ஒற்றை இழுவை மடிகள், இரட்டை இழுவைப்படகு மடிகள் மூலம் என்றவாறு வடபகுதி கடற்பரப்பு பகுதிகளிலுள்ள வளங்களை வகை தொகையின்றி வாரிச் சென்று விடுகின்றனர். வடமராட்சி கிழக்கு வடமராட்சி வடக்கு மற்றும் பாக்குநீரிணைப்பகுதி மன்னார் வளைகுடாப்பகுதி எங்கும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இழுவை மடிகளுடன் சுருக்குவலை தங்கூசி இழை வலைகளும் பெருந்தொகையில் இக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. பெறுமதிமிக்க இறால், கடலட்டை, சங்கு, கணவாய், நண்டு, மீன் ஆகிய வளங்களைச் சூறையாடுவதுடன், உள்ளூர் மீனவர்களின் வலைகளை வெட்டியழித்து பாரிய [illegible] சேதத்தையும் விளைவித்து வருகின்றனர்.

இதன்காரணமாக அச்சமடைந்துள்ள மீனவர்கள் வாரத்தில் மூன்று தினங்கள் மட்டுமே தமது தொழில் நடவடிக்கைகளைச் செய்யும் நிலை தோன்றியுள்ளது. ஏற்கெனவே சொந்தக்கடற்பரப்பில் தொழில் செய்யமுடியாது முடக்கப்பட்டிருந்த மீனவர்கள் யுத்தம் முடிந்த பின்னரும் தமது தொழில்களை சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத அளவுக்கு இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்கிறது. பலதடவைகள் இதுபற்றி சம்பந்தப்பட்டோரிடம் முறையிட்ட போதிலும் உருப்படியான முடிவுகள் எவையும் எடுக்கப்படாது இருபகுதி அரசுகளும் அசட்டையாக இருந்துவருவது தொடர்கதை யாகவே உள்ளதுன. கடற்படையினர் பல தடவைகள் இந்திய மீனவர்களை விரட்டியடித்த போதிலும் உயிரைப்பணயம் வைத்தாவது வளங்களைப் பிழிந்து எடுப்போம் என்ற பாணியில் இந்திய மீனவர்களின் அடாவடித்தனம் எல்லைமீறிப்போயுள்ளது. தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்களோ தமது நாட்டு மீனவர்களைக் கட்டுப் படுத்த வக்கில்லா கோமாளிகளாகவே இருந்து வருகின்றனர். எல்லை தாண்டி உள்நுழையும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தாமல் உள்ளூர் மீனவர்களின் மீன்பிடி முறைகளில் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிப்பதால் எவ்வித பலனும் கிட்டப்போவதில்லை. ஆகவே அத்துமீறும் மீனவர்களை முதலில் கட்டுப்படுத்த உருப்படியான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும். இல்லையெனில் வடபகுதி கடல்வளப் பொருளாதாரம் மிக மோசமான பின்னடைவுகளைச் சந்திப்பதை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பது எமது உறுதியான கருத்தாகும். *

## இந்திய மீனவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணா கட்டடப் பொருள் வர்த்தகர்
NARAYANA HARDWARES TRADER

பதவி வெற்றிடம்

* கணக்கியல் எழுதுவினைஞர் (பெண்கள்)
* பொது எழுது வினைஞர் (பெண்கள்)

எமது நிறுவனத்தில் மேற்படி பதவிகளில் பணிபுரிவதற்காக பொருத்தமான தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
கணனி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
சுயவிவரக் கோவை அடங்கிய விண்ணப்பங்களை 27.10.2010 இற்கு முன்னதாக பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

முகாமையாளர் நாராயணா கட்டடப் பொருள் வர்த்தகர்,
87, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.தொ.பே: 021 222 5390
(104/62)


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது கல்லூரியின் இணைப்பு அதிபரான
திரு. மு.ரவீந்திரன் அவர்களின் மாமியார்
அமரர் விசாலாட்சி அம்பிகைபாகன்
அவர்களதும்,
எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி சங்கரி சிறிஸ் கந்தராஜா அவர்களின்
மாமியார்
அமரர் நாகலிங்கம் பாக்கியம் அவர்களதும்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி.

## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை



மட்டுவில் தெற்கு, சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை நேற்று (16.10.2010) அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து -தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்துப்பிள்ளை மற்றும் கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னப்பு, யோகராஜா, நாகேந்திரம் ஆகியோரின் அன்புத் தாயாரும் தவ மணி, செல்வமலர், விஜியராணி ஆகியோரின் அன்பு மாமி யாரும் குமார்-பவானி (U.K), சிவா- சுமித்திரா, சாந்தி- பாலச் சந்திரன் (பிரான்ஸ்), துசியா-அன்பழகன் (பிரான்ஸ்), சுசீலன்- நிலந்தினி (U.K), சோபனா-சாந்தன் (U.K) , செல்வனா-கிரிதரன் (ஜேர்மனி), சுஜித்தா-சுகதாஸ்(U.S), றோசன் (U.K), தார்சியா, கௌசியா, பிரதீபா, திலக்சன், அஜானா ஆகியோரின் பேர்த் தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.
தொ.பே: 0777438595

கென்ஸ்மன் வீதி,
சாவகச்சேரி.
(571970)

## நவராத்திரி விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.17

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் நல்லூர் அலுவலகத்தில் நவராத்திரி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது. (த-15)

***

வடமராட்சி,ஒக்.17

அல்வாய் வடமேற்கு இளம்பிறை சனசமூக நிலையத்தின் வாணிவிழாவும், கௌரவிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு நிலையத் தலைவர் மு.தவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-236)

***

நவாலி,ஒக்.17

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வாணிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை அதிபர் த.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும். (ற-100)

***

யாழ்ப்பாணம்,ஒக்.17

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தின் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் எஸ்.கே.சண்முக லிங்கம் தலைமையில் நடைபெறும்.

***

கைதடி,ஒக்.17

கைதடி வளர்மதி கல்விக் கழகத்தின் வாணிவிழா நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு வளர்மதி கல்விக் கழகத்தின் தலைவர் நா.கஜேந்திரன் தலைமையில் நடைபெறும். (288)

***

யாழ்ப்பாணம்,ஒக்.17

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வில் இன்று ஞாயிற்றுக்கிழமை நவராத்திரி விழா நடைபெறவுள்ளது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் சைவசமய மாணவர் மன்றமும் இணைந்து நடத்தும் நவராத்திரி விழா அதிபர். திரு.மு பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

***

கோப்பாய்,ஒக்.17

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய மானம்பூத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது. மானம்பூ உட்சவத்திற்காக விநாயகர், மாசிவன் மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு எழுந்தருளுவார். (ஒ-72)


மெசின் மைண்டர் தேவை

கைதடியில் மீண்டும் ஆரம்பிக்க இருக்கும் அஷ்டலக்ஷ்மி பதிப்பகத்தினருக்கு K.R.S ஒவ்செட் மெசின் மைண்டர் தேவை. மூன்று வருட அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- 0779150701

வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில் கணனி நிறுவனம் நடத்த கடை அல்லது வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 0775446194


## கண்ணீர் அஞ்சலி

சைவ வித்தியா விருத்திச் சங்க உபதலைவரும் இந்துபோட் இராசரத்தினத்தின் மருகரும் ஓய்வுபெற்ற அதிபரும் கல்விமானுமாகிய

### கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்

அவர்கள் மறைவு குறித்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அமரரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (சி/571971)

பணிப்பாளர் சபை
உறுப்பினர்கள், பணியாளர்கள்,
இல்லச்சிறார்கள்.

## கண்ணீர் அஞ்சலி



நெடுந்தீவு பிரதேச சபை உத்தியோகத்தராக கடமையாற்றிய
கந்தையா சத்தியேந்திரா அவர்களின்
அன்புத் தந்தையார்

### அமரர் இராமலிங்கம் கந்தையா

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த கவலையை அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

செயலாளரும்
உத்தியோகத்தர்களும்
நெடுந்தீவு பிரதேச சபை.


STUDY MEDICINE

7 ஆம் 8 ஆம் திகதிய குழுவினர் ஒக்டோபர் 11 ஆம் திகதி பெலாறஸ் சென்றடைந்துள்ளனர்.




எம்.பி.பி.எஸ்., எம்.டி பட்டங்கள் இலங்கை மருத்துவக் கழகம், அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

VITEBSK STATE MEDICAL UNIVERSITY
BELARUS
in Eastern Europe MD - 6 years

UNIVERSIAL COLLEGE OF MEDICAL SCIENCE
NEPAL
in South Asia MBBS - 4-1/2 years
BDS - 4-1/2 years

ANGELES UNIVERSITY FOUNDATION
PHILIPPINES
in South-East Asia MD - 5-1/2 years

பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் 2010 ஜி.சி.ஈ.உயர்தர மாணவர்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதற்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். கடனட்டை மூலமாக ஒருவருட காலத்திற்கு வட்டியில்லாத கடன்கள், விசேட வங்கிக் கடன்கள், ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்து இடம்மாறுவதற்கான வாய்ப்பு, பாடநெறிகளுக்கான கட்டணங்களை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தவணைமுறை அடிப்படையில் செலுத்தலாம். நிகழ்ச்சி நிரல்கள் ஆங்கில மொழியில் பிரத்தியேகமாக வழங்கப்படும்.

PATHE ACADEMY The People's Academy...
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
FOR ADMISSIONS 0773017883
www.patheacademy.org
Overseas Student Placement Department 111- 1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06. Tel : 2502012 *conditions apply


## மரண அறிவித்தல்

### திருமதி சோமு பரமேஸ்வரி



நயினாதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு-15 ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோமு பரமேஸ்வரி 15.10.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சோமு அவர்களின் அன்பு மனைவியும் வீரகத்தி-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் குணசீலன் (பணிப்பாளர், வாரணம் FM), குணராஜா (கணனிப் பிரிவு, வாரணம்FM, உரிமையாளர் - Eswary Communications & Eswary Stores), சசிகலா (நிறைவேற்று அலுவலர், வாரணம் FM), கமல்ராஜ் (நிர்வாக உத்தியோகத்தர் வாரணம் FM) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராசா, ஜெகராசா, மங்களேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி சிங்கராசா, தங்கராசா, கங்காதரன், பிரபாகரன், கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.10.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப.3 மணியளவில் நயினாதீவு சல்லிவரவை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகன் - எஸ்.குணசீலன்
(பணிப்பாளர், வாரணம் FM)

ஈஸ்வரி தொலைத்தொடர்பு நிலையம்
1ஆம் வட்டாரம், நயினாதீவு,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 3213494,
0777483840.

No.58, Joseph Dias Mawata, Modara,
Colombo - 15, 0772205727, 0112521281.
20, Kannathiddy Rd, Jaffna.

## மரண அறிவித்தல்

### அ.சிறிஞானகதிர்காமநாதன் (ராஜன்)



வவுனியாவைப் பிறப்பிடமாகவும் புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட அ.சிறிஞான கதிர்காமநாதன்02.10.2010 சனிக்கிழமை கனடாவில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற வி.அகிலாண்டதரநாதன் தம்பதியினரின் அன்பு மகனும், கங்காதேவியின் அன்புக்கணவரும் மோகனராகன் (கனடா), இந்திரபுத்திரன் (புலோலி ப.நோ.கூ.சங்கம்), கேதீஸ்வரி (மீனா), தேவராணி (சந்தியா-லண்டன்) ஆகியோரின் பாசமிகு அன்புத் தம்பியும், சிவா (கனடா), சிவாஜினி (பபா), சதீசன் (கட்டை வேலி -நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்), குலநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்புமைத்துனரும், அபி, அபிநயா, கௌசல்யா, அகிலன், ரதிசன், ரகீசன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2010) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் கனடாவில் நடைபெற்று பூதவுடல் Riversince 1567 Royalyork Road, Eleigohe மயானத்தில் தகனஞ்செய்யப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10, MARH BROOH LANE,
1805, ETOGI COHE ONMQV 5 E3,
CANADA. T.P: 0014167438167

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே: 021 321 9306

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவான உணவு, தவறாத உடற்பயிற்சி, இசைமீதான ஈடுபாடு இவையே எனது உடல், உள ஆரோக்கியத்தின் இரகசியம்

## அகவை எண்பத்தொன்றிலும் அயராது மருத்துவப் பணிபுரியும் டாக்டரின் அனுபவம்

**முத்தான மூத்தவர்கள்**

*''டாக்டர் கெங்காதரன்'' என்றால் வடபகுதியில் தெரியாதவர்கள் எவருமே இருக்கமுடியாது. அந்த அளவுக்கு யாழ்ப்பாணத்தில் மருத்துவச் சேவையில் கொடிகட்டிப் பறந்தவர் தியாகராஜா கெங்காதரன்,* **MBBS (Ceylon)**. *இன்று தமது 81 ஆவது வயதிலும் அவர் துடிப்புடனும், ஆரோக்கியத்துடனும், தமது மருத்துவசேவையைத் தொடர்ந்து ஆற்றி வருகிறார்.*

*யாழ். வண்-மேற்கில் உள்ள அவரது தனியார் வைத்திய சாலையில் வைத்து சிலநாள்களுக்கு முன்னர் சந்தித்தவேளை அவருடன் மேற்கொண்ட செவ்வி கீழே தரப்படுகிறது.*

கேள்வி - முதலில் தங்களைப்பற்றி சொல்லுங்களேன்?

பதில் - எனது தந்தையார் சண்டிலிப்பாயையும், தாயார் நவாலியையும் சொந்த இடமாகக் கொண்டவர்கள். அறுபது வருடங்களாக யாழ் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்டிருக்கிறேன்.

எனது ஆரம்பக்கல்வியை கொழும்பில் உள்ள றோயல் கல்லூரியிலும், உயர்தரத்தினை யாழ். இந்துக்கல்லூரியிலும் கற்றேன். 1946ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைத்து மருத்துவபீடத்தில் கல்வியைத் தொடர்ந்தேன்.

1953ஆம் ஆண்டு எனது 23 வயதில் கண்டி வைத்தியசாலையில் வைத்தியசேவையில் காலடி எடுத்து வைத்தேன்.

காது, மூக்கு, தொண்டை ஆகியவற்றின் சத்திரசிகிச்சை நிபுணராகவும், மயக்க நிபுணராகவும், மகப்பேற்று சிகிச்சைகளையும் மேற்கொண்டு வருகிறேன். 1954 - 1957 வரை யாழ் போதனா வைத்தியசாலையிலும், 1958 - 1960 வரை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றி 1963 ஆம் ஆண்டு எனது 33 வயதில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றேன்.

பின்னர் 7வருடங்கள் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையிலும், இரண்டு வருடங்கள் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையிலும் சேவையைத் தொடர்ந்து 1972ஆம் ஆண்டு யாழ் வண்ணார்பண்ணை வடமேற்கில் எனது சொந்த வைத்தியசாலையை ஆரம்பித்தேன். 1995ஆம் ஆண்டுவரை இங்கு வைத்திய சேவையினை நிறைவாகச் செய்து நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று அங்கு கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம்வரை பணியாற்றி பின்னர் இவ்வாண்டு மார்ச் மாதம் முதல் மீண்டும்

*சந்திப்பு:-* **கவிநேசன்**

எனது சொந்தக் கட்டடத்தில் வைத்தியசேவையினைத் தொடர்கிறேன்.

கே- மிகக்குறைந்த வயதில் அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளீர்களே. அதற்கான காரணத்தை அறிந்து கொள்ளலாமா?

ப - (சிரிக்கிறார்....) இந்தக்கேள்வியைப் பலர் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். நான் அரசசேவையில் இருந்த காலத்தில் சிங்களமொழி கற்று அதில் சித்தியடைந்தால் மட்டுமே சம்பள உயர்வு என்றவொரு கட்டாய நிபந்தனையைக் கொண்டுவந்தார்கள்.

சிங்கள மொழியைக் கற்பதில் எனக்கு விருப்பம் இருக்கவில்லை. அதற்காக அதைப்படிப்பது கடினமென்று நான் கூறவில்லை. நான் இப்போதும் நன்றாக சிங்களம் பேசுவேன் எழுதுவேன். கட்டாயத்தின் பேரில் ஒரு மொழியைக் கற்க வேண்டுமா? என்கிற மன அதிருப்தியும் வைராக்கியமும் எனக்குள் நிலைபெற்றிருந்தது. எனது தாய்மொழிப் பற்றும் அதற்கு இடம்தரவில்லை. அதனால்தான் அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்றேன்.


கே- வன்னிப்பகுதியில் உங்கள் சேவையின் அனுபவங்களைக் கூறுங்களேன்?

ப- எனது மருத்துவசேவையில் 58ஆவது வருடத்தைக் கடந்துள்ளேன். ஆனால் வன்னிப்பகுதியில் ஆற்றிய சேவைதான் இன்றும் என் மனதிற்குப் பெரும் திருப்திகரமானதாக உள்ளது.

1995 ஆம் ஆண்டு வன்னி வற்றாப்பளைக்குப்போன போதுதான் அங்குள்ள மக்கள் மருத்துவச் சேவையினைப் பெற்றுக்கொள்ள எவ்வளவு துன்பப்பட்டார்கள் என்பதனை என்னால் உணரமுடிந்தது.

அரச தனியார் வைத்தியசாலைகளில் எவ்வித அடிப்படை வசதிகளும் இருக்கவில்லை. குறிப்பாக கர்ப்பிணித்தாய்மார்களெல்லாம் மரத்தின்கீழும், தமது வீடுகளிலும் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். அங்குள்ள மக்களின் அவலநிலையைக் கண்டு வன்னிப்பகுதியில் அநேகமான தனியார் வைத்தியசாலைகளில் சேவையாற்றினேன். ஆனால் அங்கு வாழ்ந்த காலத்தில் நான் ஆற்றிய சேவைகள் யாவற்றையும் இலவசமாகவே மேற்கொண்டேன்.

பொன்னம்பலம் வைத்தியசாலை மற்றும் துணுக்காய், முல்லைத்தீவு போன்ற அரசவைத்தியசாலைகளிலும் சேவையாற்றினேன். அங்கு புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற வைத்தியசாலையாயினும் சரி, மருத்துவப் பிரிவாயினும் சரி, இயங்கிக் கொண்டிருக்கிற வைத்தியசாலையாயினும் சரி எனது ஆலோசனையின்படியே தான் செய்து கொள்வார்கள். (இதுபற்றி நான் மேலும் விபரிக்க விரும்பவில்லை என்று கூறி சிரிக்கிறார்.)



கடந்த 2008 ஆம் ஆண்டு 50வருட சேவையினைப் பாராட்டிக் கௌரவித்தார்கள். அதன்போது முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் பிரசவ விடுதிக்கு ''கெங்காதரன் பிரசவ விடுதி'' என்று பெயர்சூட்டி ஒரு கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். யாழ்மாவட்டத்தின் தற்போதைய அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்தான் அதனைத் திறந்துவைத்தார்.

நான் வன்னியில் மகப்பேற்று சிகிச்சைகளைத்தான் அதிகம் மேற்கொண்டேன்.

கே- மகப்பேற்றுச் சிகிச்சையில் எவ்வாறு நிபுணத்துவம் பெற்றீர்கள்?

ப - மகப்பேற்று சிகிச்சை நான் விசேடமாகக் கற்றுக் கொண்டதல்ல. ஒரு அனுபவத்தின் வாயிலாகவே அதனைக் கற்றுக் கொண்டேன். எனது குருவாக இருந்த மகப்பேற்று நிபுணர் அமரர் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களுடன் பணியாற்றிய அனுபவத்தை வைத்துக்கொண்டும், அவர் கற்றுக்கொடுத்த விடயங்களுடனும் மகப்பேற்று சிகிச்சைகளை மேற்கொள்ளத் தொடங்கினேன்.

அந்தச் சிகிச்சையினை மேற்கொண்டபோது நான் ஒருபோதும் தோல்விகண்டது கிடையாது. வெற்றிகரமாகவே அந்தச் சிகிச்சைகளை மேற்கொண்டேன். தற்போது 81வயதினை எட்டியுள்ள நிலையிலும் சகலவிதமான நோய்களுக்கும் வைத்தியம் பார்க்கிறேன். மக்களும் நம்பிக்கையோடு வருகிறார்கள்.

கே- மருத்துவ சேவைக்கப்பால் தங்களின் சமூக சேவைகள் பற்றி....

ப - காசநோய் தடுப்புப் பிரிவில் 10 ஆண்டுகள் கடமையாற்றியிருக்கிறேன். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸிலும் பலவருடங்கள் பணியாற்றியுள்ளேன்.

இங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்களுக்கு மருத்துவம் சம்பந்தமான முதலுதவிப் பயிற்சிகளை மேற்கொண்டேன். இதற்கென எந்தவித வேதனத்தையும் நான் பெற்றுக்கொண்டதில்லை. மருத்துவ சேவையில் பெற்ற மகிழ்ச்சியின் இரட்டிப்பு மகிழ்ச்சியினை இத்தகைய சேவைகள் ஊடாகப் பெற்றுக்கொண்டேன்.

கே - நீங்கள் சிறந்த புல்லாங்குழல் கலைஞர் என்று அறிந்தோம் அதுபற்றி....

ப - எனது மருத்துவ சேவைக்காலத்தில் இதுவரை கிட்டத்தட்ட 5இலட்சம் நோயாளர்களுக்கு சிகிச்சையளித்திருக்கிறேன். இந்தச் சேவைக்கு இசைதான் என்னை ஆற்றுப்படுத்தியது. மருத்துவம் - இசை இவையிரண்டும்தான் என் உயிர்மூச்சு. அதனால் புல்லாங்குழல் வாசிக்கும் முறையினை முறைப்படி கற்றுத் தேர்ந்தேன்.

வைத்திய சேவையின் இடையில் ஓய்வு கிடைக்கும்போது புல்லாங்குழல் வாசித்து இரசிப்பேன். அதனால் மனம் இதமாக இருக்கும். இதனால் நோயாளர்களுடன் அன்பாகப் பேசி சிகிச்சையளிக்கின்ற பக்குவநிலை ஏற்படும்.

1950ஆம் ஆண்டுக்கு முன்னர் இரண்டு வருடங்கள் இலங்கை வானொலியில் புல்லாங்குழல் வாத்தியக் கலைஞராகப் பங்குபற்றியுள்ளேன்.

அத்துடன் கடந்த வருடம் சிங்கப்பூர் சென்றிருந்த சமயம் அங்குள்ள செண்பக விநாயகர் ஆலயத்தில் புல்லாங்குழல் இசைக் கச்சேரியொன்றினை வழங்கினேன்.

கே - நீங்கள் அரசியலுக்குள் பிரவேசிக்காது தவிர்த்துக் கொண்டது பற்றி...

ப- அரசியல் எனக்குப் பிடிக்காது. அது இன்று [illegible] செய்யக்கூடியது. தந்தை செல்வா என்னிடம் பலதடவை தொடர்பு கொண்டு அரசியலுக்கு வருமாறு விநயமாகக் கேட்டுக் கொண்டார். தமிழ் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்கின்ற கொள்கையோடுதான் நான் வெளிநாடுகளுக்குச் செல்லாமல் இங்கேயே தங்கினேன். அந்தவகையில் எனது மக்களுக்கான எனது சேவை மருத்துவ சேவையாக எப்போதும் இருக்கட்டும். என்ற நம்பிக்கையில் இன்றும் அந்தச் சேவையினைத் தொடர்கிறேன். வேண்டவே வேண்டாம் அந்த அரசியல் என்று ஒதுங்கினேன்.

வன்னியில் இருந்து திரும்பும் போது அங்கு எல்லாவற்றையும் இழந்தேன். ஆனால் அங்கு வாழ்ந்த காலத்தில் மக்களுக்காற்றிய சேவையினை நினைத்து திருப்தியுடன் இருக்கிறேன். அதுவே எனக்குப் போதும்.

கே- 81வயதிலும் எவருமே நம்பமுடியாத இளமைத் தோற்றத்துடனும், துடிப்புடனும் இருக்கிறீர்களே அது எப்படி? வைத்திய சேவையினைக் கூடத் தொடர்கிறீர்களே?

ப - நான் இவ்வாண்டு யாழ்ப்பாணம் வந்தவுடன் எனக்கு 81 வயதாகிவிட்டது இனிமேல் மருத்துவச்சேவை வேண்டாம் என்று ஒதுங்கினேன். விட்டார்களா? கெங்காதரன் டொக்டர் வந்திட்டிங்களாம் என்று அறிஞ்சு வந்தனாங்கள். நீங்கள் மீண்டும் வண்ணையில் வைத்தியசாலையினை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு தினமும் வருவார்கள்.

''உங்களுக்கு 81 வயதுபோலவா இருக்கு, நீங்கள் எவ்வளவு ஹெல்த்தா'' இருக்கிறீங்கள் என்று எனக்கு தென்பூட்டினார்கள்

அதனால் மு. நவநாதன், செ. தனபாலசிங்கம் ஆகிய இருவரினதும் ஒத்துழைப்புடனும், கண்காணிப்புடனும் எனது வைத்தியசாலையை இயக்கத்தொடங்கினேன்.

ஏராளமான நோயாளர்கள் தினமும் வருகிறார்கள். வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு இலவசமாகவே வைத்தியம் செய்கிறோம். அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வைத்தியர்கள் பலர் இங்கு வருகைதரு வைத்தியர்களாக சேவையாற்றுவதற்கு இணக்கப்பட்டுள்ளார்கள்.

அளவான உணவு, தினமும் ஒரு மணித்தியால உடற்பயிற்சி, இசையை ரசித்துக் கேட்பது இவையே எனது திடகாத்திரமான உடல் நலத்துக்குக் காரணம்.

கே- உங்கள் மருத்துவசேவைக் காலத்தில் மறக்கமுடியாத சம்பவங்கள் பற்றி....

ப - மறக்கமுடியாத பல சம்பவங்கள் இருக்கின்றன. ஆனால் அவை நாட்டுச்சூழ்நிலையால் மறந்து போய்விட்டது. இருப்பினும் ஒரு சில அனுபவங்கள்...

1958ஆம் ஆண்டு முல்லைத்தீவு வைத்தியசாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அங்கு எதுவித வசதி வாய்ப்புகளுமில்லை. தாதிய உத்தியோகத்தர் ஒருவர் கூட இல்லாத நிலையில் இரண்டு சிற்றூழியர்களுடன் பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில் பிரசவம் மேற்கொண்டதுண்டு.

ஒலுமடு வைத்தியசாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது ஒரு கர்ப்பிணித்தாயைக் கொண்டு வந்தார்கள். கர்ப்பப்பையில் நஞ்சுப்பை வெடித்திருந்த நிலையில் அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதென்றால் ஆறுமணித்தியாலம் பிடிக்கும், அதுவரைக்கும் அந்தப் பெண் உயிருடன் இருக்கமாட்டார் என்று நினைத்துக் கொண்டு நான் பிரசவம் பார்க்க முயற்சி செய்தேன். 3 நிமிடத்தில் குழந்தையைப் பிரசவித்தாள். தாயும், பிள்ளையும் ஆரோக்கியமாகவே இருந்தார்கள்.

இந்தக் கடினமான பிரசவத்தை எப்படி வெற்றிகரமாக செய்து முடித்தேன் என்று என்னால் கூட நம்ப முடியவில்லை .

கே- மருத்துவத்துறையில் நீங்கள் ஒரு அனுபவப் புத்தகம் என்று சொல்லிக்கொள்ளலாம். அந்தவகையில் இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ப- வைத்திய சேவையென்பது புனிதமான - மகத்தான சேவை. அந்தவகையில் அதனைத் தன்னலம் கருதாது அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டும்.

வெறுமனே பணம்தான் முக்கியம் என்ற மனநிலையில் கடமையாற்றாது அதற்கப்பால் மனநிறைவுடன் கூடிய சேவையாக மேற்கொள்ள மருத்துவர்கள் முன்வரவேண்டும்.

எமது மக்களுக்கு நாமே நிறைவான சேவையாற்ற வேண்டும். அதன் மூலமே நாம் திருப்திகரமான சேவையாற்றினோம் என்கின்ற நிலையில் வாழ்க்கையில் திருப்தி அடைய இயலும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Butterfly International School

# திறப்பு விழாச் சிறப்புமலர்

## 17.10.2010

**காலம்:**
இன்று (17.10.2010) ஞாயிறு

**இடம்:**
பாடசாலை மண்டபம்
பிரதான வீதி, சங்கானை.

**நேரம்:**
பி.ப. 2 மணி

*தலைவர்:*
திரு.கு.ஜெகநாதன்
*பிரதம விருந்தினர்:*
திரு.சில்வஸ்தி அலென்ரின் அவர்கள்
(நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் உதயன்)
*சிறப்பு விருந்தினர்கள்*
திரு.கமலேந்திரன் (ஈ.பி.டி.பி) அவர்கள்
(யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் தோழர் கமல்)
திருமதி.தே.பாபு, பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், சங்கானை)
திரு.பா.தனபாலன் (விரிவுரை இணைப்பாளர்,
மாவட்ட தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்)
அழ.பகீரதன் அவர்கள் (B.O.C) முகாமையாளர்
கு.சண்முகரத்தினம்
(செல்வி பரிமளம் தனிநபர் அறங்காவல் குழு, சங்கானை)
தயாகரன் (H.N.B) முகாமையாளர், சங்கானை)
பி.வரதராஜா (N.S.B.(முகாமையாளர், சங்கானை)
அனைத்து நலன் விரும்பிகளையும் அன்புடன்
அழைக்கின்றோம்
BIS வளாகம்



## அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



எமது மாணாக்கரின் கல்விசார் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டும் வகையில் யாழ். சங்கானைப் பகுதியில் பட்டர்பிளை சர்வதேச பாடசாலை இன்றையதினம் புதிதாகத் திறக்கப்படுவதையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவதுடன் இப்பாடசாலைச் சமூகத்தினருக்கு எமது பாராட்டினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யாழ்.மண் கல்வியின் மண்ணாகும். இந்த மண்ணில் கல்வித்துறை மிகுந்த வளர்ச்சி கண்டிருந்த ஒரு காலகட்ட வரலாறு உண்டு. பின்னர் இடம்பெற்ற அழிவு யுத்தம், இயற்கை அனர்த்தங்கள் போன்றவை காரணமாக எமது கல்விச் செல்வம் எம்மிடமிருந்து படிப்படியாக ஒதுங்கிக்கொள்ள ஆரம்பித்தது. எனினும் தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழலில் எமது மண்ணில் கல்விச் செல்வத்தை மீளவும் பல்வேறு வழிகளில் கட்டியெழுப்பி வளர்த்தெடுப்பதற்கு நான் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றேன். எனவே எனது இந்த பெரும் முயற்சிக்கு இதுபோன்ற கல்வி நிறுவனங்களின் வருகையும் நேர்மையானதும் உண்மையானதுமான பங்களிப்புக்களும் உறுதுணையாக அமையுமென நம்புகின்றேன்.

எமது கல்வித் துறையின் பரந்தளவிலான வளர்ச்சிக்கு இதுபோன்ற சர்வதேச தரத்திலான கல்வி நிறுவனங்களின் பங்களிப்புக்கள் மிகவும் அவசியமாகும். இலங்கையின் பிற மாவட்டங்களில் இவ்வாறான கல்வி நிறுவனங்களின் பங்களிப்புக்களை நான் அவதானித்து வருபவன் என்ற ரீதியல் இதனை உணர்ந்துகொண்டுள்ளேன்.

எனவே, இப்பாடசாலையானது எமது மாணாக்கரின் கல்வி மற்றும் அதனுடன் இணைந்த துறைசார்ந்த முன்னேற்றத்திற்கு தனது முழுமையான பங்களிப்பை நேர்மையாகவும் உண்மையாகவும் வழங்கும் என நான் எதிர்பார்ப்பதுடன் இந்தப் பாடசாலையின் உருவாக்கத்தில் உழைத்தவர்களுக்கும் எதிர்காலத்தில் இதன் வளர்ச்சியிலும் எமது மாணாக்கரின் துறைசார் வளர்ச்சியிலும் உழைக்கவிருக்கின்றவர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
*(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)*

## ஆரம்பக் கல்விக்களத்திற்கான அன்பான வாழ்த்துமடல்

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்''. அதனாலே ஊனக்கண்ணிற் கூடாக அறிவுக்கண்ணைத் திறக்கும் முயற்சியில் முதற்படியாக அமைந்து கற்றலின் ஆரம்பக் களமாக விளங்கி எண்ணையும் எழுத்தையும் அதனால் வரும் பொருளையும் பயனையும் மானிடத்திற்கு அறிவுபெற வைப்பவை முன்பள்ளிகள். ஊனக் கண்ணிற்கு உயிரையும் அழகையும் உணர்வையும் உருவாக்கும் படைப்பகங்கள் இவை என்று கூறினால் அது மேலும் சாலப் பொருந்தும்.

கல்வியை இனிய கனியாக்கி இளம் பிஞ்சுகளின் கண்களில் கண்ணீர் வரா வண்ணம் கல்விப் புலத்தில் அவர்களைக் குதூகலிக்க வைத்துள்ள சமகால ஆரோக்கிய சாலைகளான முன்பள்ளிகள் எம்மண்ணில் பெருகி வளர்வது வரவேற்க வேண்டிய வளமான செயற்பாடு.

முன்பள்ளிகள் வெறும் பெயர்ப்பலகைகளோடு நின்று விடாமல் தன்னுள் குடிகொண்டுள்ள இளம் பாலகர்களைக் கற்றலின் அறியுறு நிலையில் சீர்பெற நிறுத்துவது தலையாய கடமை. இப்பின்புலத்தின் சிறப்பினால் சமகால ஆரம்பக் கற்றல் நடவடிக்கைகள் பெரும் பயன்மிக்க சமுதாயத் தொண்டினை செய்வதோடு மட்டுமன்றி சிறுவர்களின் கல்வி உலகை மிக மிக ஒளி பெறச் செய்துள்ளன. எனவே இத்தகைய நன்மை தரும் இவ்விளை புலத்தின் வரவை மனமுவந்து வரவேற்பதோடு அதன் செயலாக்கம் செப்பமுற அமைய, வாழ்த்தி உவகை பூக்கின்றேன்.

*திருமதி தே.பாபு, பிரதேச செயலர்,*
*வலி.மேற்கு சங்கானை.*

## வாழ்த்துச் செய்தி



மனித வாழ்க்கைக்கால விருத்திப் பருவங்களில் முதன்மையானதும், மிகவும் முக்கியம் வாய்ந்ததுமான பருவம் முன் பள்ளிப் பிள்ளைப்பருவமாகும். பெற்றோர் கள் முதலில் சிறார்களின் தேவைகளை நிறைவேற்றிப் பாதுகாப்பான அன்பு, அரவணைப்பு, உடைய முன்பள்ளிகளில் தமது சிறார்க ளைச் சேர்க்க வேண்டும் இவ்வகையில் இன்று சங்கானை யில் உதயமாகும் முன்பள்ளியும் வரவேற்கக் கூடியது. பல வகைகளில் பல முன்பள்ளிகள் இன்று தோற்றம் பெறு கின்றன. ஆனால் அவற்றின் சரியான பின்னணி உரிய கல்வி யில் தகுதிப்பாடுடைய ஆசிரியர்கள், பௌதிகச் சூழல் மிக முக்கியம். முன் பள்ளியைத் தொடக்கி பணம் சம்பாதிக்கலாம் என்ற நிலை இருந்தால் அந்த முன்பள்ளி வியாபார நிலையமாகி விடும். முன்பள்ளிகள் கோயில்களா கப் பூசிக்கப்பட வேண்டியவை. அந்த வகையில் சங்கானை யில் உதயமாகும் வண்ணத்துப் பூச்சிகள் சர்வதேச முன் பள்ளி இப்பிரதேசத்தில் சிறந்த சேவையை ஆற்ற நிர்வாகி களுக்கும், ஆசிரியர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பா.தனபாலன்**
M.Phil. in Pre School Education

## தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளரின் ஆசியுரை

சங்கானையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட Butterfly International School பாலர் பாடசாலை இக்கிராமத்தில் இன்று 17.10.2010 இல் ஆரம்பிக்கப்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றோம். இப்பாடசாலை மேன் மேலும் வளர இறைவனை வேண்டுகின்றோம். சங்கானை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர், ஊழியர்கள் அனைவரும் வாழ்த்துகின்றோம்.

**முகாமையாளர், பி.வரதராஜா,**
**சகல ஊழியர்கள், சங்கானை.**

**எமது புதிய கிளை**
**01.11.2010**
**மானிப்பாயில்**
**ஆரம்பமாகும்**
**என்பதை மகிழ்ச்சியுடன்**
**அறியத்தருகின்றோம்**




## ஆசிரியர்களின் வாழ்த்துப்பா

வண்ணத்துப் பூச்சிகளால் சிறகடிக்கும் பிஞ்சுகளை
கன்னத்தில் வருடியே வரவேற்கும் ஆசிரியர் நாம்
எண்ணத்தில் உயர்ந்து விளங்கிட வைத்திடும்
வண்ணத்துப் பூச்சி சர்வதேச முன் பள்ளி வாழியவே
சீரான கல்விதனை சின்னஞ் சிறுவர்க்கு
நேராகக் கற்பிக்கும் ஆசிரியை நாங்கள்
வேரோடி வண்ணத்துப் பூச்சி சர்வ தேச முன்பள்ளி
பெரோடி என்றும் புகழ் பூத்து வாழியவே
ஒழுக்கமே உயர்ந்த தென்று யுணர்த்தியே
வழுவாது ஒழுக்க நெறி தன்னைப் புகட்டுவோம்
பழுதிலாக் கல்வியும் ஒழுக்கமும் தந்திடும்
விழுதூன்றி ஆலமரமாய் முன்பள்ளி வாழியவே
உடலை உறுதி செய்யும் பயிற்சி அளிப்போம்
திடமான மனவுறுதி பெறவும் வைப்போம்
மடமையை அகற்றும் வண்ணத்துப் பூச்சி
முடங்காத சர்வதேச முன்பள்ளி வாழியவே
வாழியவே நம்முன் பள்ளி பல்லாண்டு
வாழியவே நம் சின்னஞ் சிறுசுகள் நன்றாய் வாழியவே
வண்ணத்துப் பூச்சி முன்பள்ளி
ஆழி சூழ் உலகமெல்லாம் பேரோங்கி வாழியவே

**துஷித்தா பாலசிங்கம், பபிதா சத்தியராஜா**
**நித்தியா சபாரத்னம், யாழினி திரிபுரபவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் நாளிதழின் வெள்ளிவிழாவையொட்டி யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையுடன் இணைந்து நடத்தப்படும் பளுதூக்கல், வலு தூக்கல் போட்டிகள் நேற்று யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் உடற்கல்வி விரிவுரையாளர் மா.இளம்பிறையன் உரையாற்றுவதையும் வீரர்கள் பளு, வலு தூக்கும் போட்டிகளில் பங்குபற்றுவதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்:- ரட்ணம்)*

# உதயனின் பளு தூக்கும் போட்டி நேற்றுப் பல்கலையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.17

உதயன் நாளிதழின் வெள்ளி விழாவையொட்டி யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையுடன் இணைந்து நடத்தும் பளு தூக்கும், வலுதூக்கும் போட்டிகள் நேற்று சனிக்கிழமை பல்கலைக்கழகத்தில் பளுதூக்கும் நிலையத்தில் ஆரம்பமானது.

உடற்கல்வி விரிவுரையாளரும் பளுதூக்கல் பயிற்றுவிப்பாளருமான ம.இளம்பிறையன் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். ஆரம்பநாளான நேற்று யாழ். மாவட்டத்தில் இருந்து சுமார் 75 வீரர்கள் பங்கு பற்றியதுடன் போட்டிகள் 8 பிரிவுகளாக நடைபெற்றன.

பளு, வலுதூக்கும் போட்டிகளில் இரண்டாம் நாளும் பரிசளிப்பு நிகழ்வும் இன்றாகும். பிற்பகல் 2 மணிக்கு உடற்கல்வி விரிவுரையாளரும் பல்கலைக்கழக பளுதூக்கல் பயிற்றுவிப்பாளருமான ம.இளம்பிறையன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விருந்தினர்களாக உதயன் முகாமையாளர் எஸ்.மகேஸ் உடற்கல்வி அலகின் இணைப்பாளர் கே. கணேசநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (6)




# உதயனின் வெள்ளிவிழா கூடைப்பந்தாட்டம் திருக்குடும்ப கன்னியர்மடம் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஒக்.17

உதயன் நாளிதழின் வெள்ளி விழாவையொட்டி நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டம் ஒன்றில் யாழ். திருக்குடும்ப கன்னியமட அணி வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றது.

உதயனின் வெள்ளி விழாவையொட்டி நடத்திவரும் இருபாலாருக்குமான லீக் முறையிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் பெண்களுக்கான காலிறுதி ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பச்சை அணி மோதியது.

தமது அணிகளே வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கோடு இரு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு களம் புகுந்தனர். ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணியினரும் புள்ளிகளை பெற வேண்டும் என்ற எண்ணத்தில் ஆக்ரோஷத்தோடு விளையாடினர்.

முதல் பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது 17:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்.திருக்குடும்ப அணி முன்னிலையில் இருந்த போது இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆட்டம் தொடங்கிய வேளை திருக்குடும்ப கன்னியர்மட அணியினர் எதிர் அணியினரின் தடுப்புகளை உடைத்தவாறு புள்ளிகளைப் பெற்றது.

இதே வேளை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பச்சை அணியினர் தமது ஆட்டத்தை வேகப்படுத்தி புள்ளிகளை பெற்றனர். எனினும் ஆட்ட முடிவில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணியினர் 24:14 என்ற புள்ளிகள் அடிப் படையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பச்சை அணியை வெற்றி கொண்டனர். (06 - 23)



பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பச்சை அணிக்கும் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் அணிக்கும் இடையிலான ஆட்டத்தின் உச்ச கட்ட மோதலின் போது...
*(படங்கள்: தமிழினியன்)*

# மகாஜன நூற்றாண்டு விழா உதைபந்தாட்டம்; மானிப்பாய் இந்துவுக்கு மூன்றாம் இடம்

வலி.வடக்கு, ஒக்.17

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆதிக்கத்தைச் செலுத்தி கோல்களைப் பெற்றுக் கொண்டது. யாழ். மத்திய கல்லூரி எதிர்ப்புக் காட்டிய போதிலும் முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டு கோல்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மேலும் கோல்கள் பெற எடுத்த முயற்சி வெற்றியளிக்காத போதிலும் யாழ்.மத்திய கல்லூரியும் கோல்கள் பெறக் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தத் தவறிய நிலையில் மானிப்பாயில் இந்துக் கல்லூரி மேலும் ஒரு கோலைக் பெற்றுக் கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கில் யாழ்.மத்திய கல்லூரியை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (6-86)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஒக்.17

வடமராட்சி கல்விவலய பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில்:-

✱ கலட்டி றோ.க.த.க. பாடசாலை எதிர் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலை.

✱ இமையாணன் அ.மி.த.க பாடசாலை எதிர் கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை (6)

# நூற்றாண்டு விழா கரப்பந்தாட்டம் மகாஜனக் கல்லூரி சம்பியன்

வலி.வடக்கு, ஒக்.17

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை மகாஜனக் கல்லூரி 25:03, 25:08 புள்ளிகள் என்ற அடிப்படையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை வெற்றி பெற்று லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

மூன்றாம் இடத்தை அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் பெற்றது.

கரப்பந்தாட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணங்களுடன் முதலாம் 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெற்று அணிகளுக்கு முறையே 8 ஆயிரம், 6 ஆயிரம், 4 ஆயிரம் ரூபா பணப் [illegible] (6-86)

# 5 விக்கெட்டுக்களால் வென்றது தெல்லிப்பழை யுத் அணி

வலி.வடக்கு, ஒக்.17

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 16 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை யுத் விளையாட்டுக்கழகம் 5 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை பூமா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சங்கானை நியு ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் தெல்லிப்பழை யுத் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியு ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 10:02 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது.

கிரிதரன் 11 ஓட்டங்களைப் பெற்றார். தெல்லிப்பழை யுத் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த விதுசன் 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ரமணன் 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் டுக்களையும், பிரசாந் நீல்ஸ் தலா 5 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை யுத் விளையாட்டுக்கழகம் 10.2 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

நியூஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நிவேதன் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் இராஜ், அருண் தலா 5 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)

# போட்டி நிரல் தயாரித்தல்

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மத்திய கல்லூரி மாணவ முதல்வர்சபை நடத்தும் 2010 ஆம் ஆண்டுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான போட்டி நிரல் (அட்டவணை) தயாரிக்கும் நிகழ்வு திங்கள்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார். (6-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COLOMBO PEST CONTROL SERVICE




நாம் எமது கிளை ஸ்தாபனம் ஒன்றை யாழ் மண்ணில் திறந்து வைத்துள்ளோம். என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். நிலக்கறையான், எலி, கரப்பெத்தான் நுளம்பு, இலையான் ஆகியவற்றிலிருந்து விடுதலை வேண்டுமா இன்றே நாடுங்கள்.

**COLOMBO PEST CONTROL SERVICE**

இல. 527 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

தொலைபேசி - 0213207007

0777666684


## நீர்வேலிப் பகுதி மக்கள் டெங்கு ஒழிப்பில் தீவிரம்

கோப்பாய், நீர்வேலிப் பிரதேசத்தில் சுகாதாரப் பகுதியினரும், பொலிஸாரும் இணைந்து டெங்கு ஒழிப்புப் பணிகளைக் கண்காணித்து வருகின்றனர். அதேசமயம் பொதுமக்கள் மிகவும் அக்கறையுடன் பிரதேசத்தைத் துப்புரவு செய்து வருகின்றனர். கடந்த வாரம் பரிசோதனைகளை மேற்கொண்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நுளம்பு பெருகக் கூடிய வகையில் காணிகளை வைத்திருந்த உரிமையாளர்கள் மீது வழங்குப் பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரயர்களில் நீர் தேங்கி நின்றமை, பொலித்தீன் பைகள் வளவுகளில் காணப்பட்டமை, தகரக் குவளைகள் மற்றும் போத்தல்கள் வெளியே காணப்பட்டமை போன்ற காரணங்களுக்காகவே இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பேராசிரியர் விசாகரூபனுக்கு சம்பந்தர் விருது

பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக வருடாவருடம் வழங்கப்படுகின்ற "சம்பந்தர் விருது" யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கி.விசாகரூபனுக்கு கிடைக்கவுள்ளது.

பேராசிரியர் விசாகரூபன் எழுதிய 'ஈழத்தின் தமிழ் நாவல்கள் - நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் பயில் நினைவுகளும் பண்பாடும்' என்ற நூலே இவ்விருது சம்பந்தர் விருது அறக்கட்டளை சபையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எழுத்தாளர் சம்பந்தனின் மகள் திருமதி திரிவேணி கஜன் இவ்விருதுக்கான 10 ஆயிரம் ரூபா பணப்பரிசையும், விருதையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

கடந்த காலங்களில் இவ்விருது பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன், எழுத்தாளர் தெளிவத்தை யோசெப், பேராசிரியர் எஸ்.பத்மநாதன், படைப்பாளி சு.வே. மற்றும் பேராசிரியர்களான சி.மௌனகுரு, எஸ்.சிவலிங்கராஜா, க.சத்தியசீலன், இரா.வை. கனகரத்தினம் ஆகியோருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# LIVE & WORK IN EUROPE

**Business / Student VISA for**

**GERMANY, SWISS & CZECH REPUBLIC**

- வயதெல்லை இல்லை.
- IELTS / TOFEL தேவை இல்லை.
- முற்பணம் இல்லை.

100% GUARANTEED VISA

**Eduzone Consultants**

No. 81, Sri Sumangala Road, Ratmalana.

Contact 0777 77 85 86 (ராஜ் - தமிழ் & English)
0715 60 73 33 ( Chamal - English )

W 91740


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## செல்வி து. ரஷ்மிகா

ஹெந்தளை, வத்தளையைச் சேர்ந்த துஷ்யந் - சொருபகாந்தி தம்பதிகளின் திருநிறைச்செல்வி ரஷ்மிகா தனது முதலாவது பிறந்தநாளை (ஞாயிற்றுக்கிழமை) 17.10.2010 இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா - மகாலிங்கம், அப்பம்மா - ஜெயக்குமாரி, பெரியப்பா - ரஜனிகாந், மாமா - சிவக்குமார், மாமிமார்கள் - உஷா, துர்க்கா, இந்துமதி, சித்தப்பா யுவராஜ், அம்மப்பா - பன்னீர்ச்செல்வம், அம்மம்மா மற்றும் மச்சாள் - ஸ்ருதி, மச்சான்மார் - தினகரிஷ், விதுஜன் மற்றும் சுதா Uncle -கனடா, சந்திரகுமார் Uncle -கனடா, விஜியகுமாரி Aunty - கனடா, சிலாபத்தில் வசிக்கும் தாத்தா சக்திவடிவேல், பாட்டி விஜயகுமாரி மற்றும் கொழும்பில் உள்ள உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென ஸ்ரீதேவி கருமாரியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.


### தவறிவிட்டது

மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த நடராசா அம்பிகைபாகன் என்பவரது தே.அ.அட்டை (762434601 V) திருநெல்வேலிச் சந்திக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: தொ.பே: 0776340513

### வீடு வாடகைக்குண்டு

கச்சேரி கிழக்கு லேனில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. Mobile:0776213497
Lan: 0212221037

### காணி விற்பனைக்கு

யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் நல்லூருக்கும் இடைப்பட்ட பலாலி வீதிஆலடிச் சந்திக்கு அருகில் உடையார் லேனில் 2 வீடுகள் கட்டக்கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. அரைவாசி பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு:-0774414258,0212225620

### வீடு விற்பனைக்கு

யாழ்.நகர மத்தியில் மாட்டீன் வீதியில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:0770261910

### திருமண சேவை

15 வருட திருமண சேவை நிறைவினை முன்னிட்டு வேல் அமுதன் பாரிய சேவைக் கட்டணக் குறைப்பு! விவரங்களை "சுயதெரிவு முறை முன்னோடி" சர்வதேச, மூத்த திருமண ஆற்றுப்படுத்துநர் வேல் அமுதனுடன் திங் கள், புதன், வெள்ளி, மாலையிலோ சனி, ஞாயிறு நண்பகலிலோ தொடர்புகொண்டு விசாரித்தறிக!
தொலைபேசி: 0112360488,0112360694, 0114873929

### லொறி விற்பனைக்கு

TATA அரை பொடி லொறி விற்பனைக்கு உண்டு.
0776154078/ 0789113282

### வாடகைக்கு

இல.18, றக்கா றோட்டில் கடைகள், வாகன சுத்திகரிப்பு நிலையம் என்பன வாடகைக்குண்டு.
தொடர்பு: S. ரமேஸ் தொ.பே.: 0772231096

### வேலையாள்கள் தேவை

எமது புடைவை வியாபார நிலையத்திற்கு ஆண்கள், பெண்கள், இருபாலாரும் தேவை. வேலை அனுபவம் உள்ளவர்களும் புதியவர்களும் நேரில் வரவும்.

நல்லி சில்க்ஸ்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்


## வாழ்த்துகின்றோம்



S.பாலகுமார் (J.P) புங்குடுதீவு - 03 | A.சாந்தலிங்கம் (J.P) புங்குடுதீவு - 05 | K.இலம்போதரன் (J.P) புங்குடுதீவு - 03

இவர்கள் 20-08-2010 அன்று நீதிபதி உயர்திரு அ.பிறேம் சங்கர் முன்னிலையில் யாழ். மாவட்டத்திற்கான சமாதான நீதிவான்களாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

மேலும் பல பதவிகள் பெற்று,எமது மண்ணுக்கும் மக்களுக்கும் சேவையாற்றி,பெருமைகளைத் தேடித்தர வேண்டும் என்று பெரியபுலம் சிறி வீரகத்தி விநாயகர் பெருமானை வேண்டுகின்றோம்.

பெரிய புலம் சிறி வீரகத்தி விநாயகர் ஆலய சபையினரும்,தீவக மக்களும்.


# விசேட விலைக் கழிவுகளுடன் !

சகல விதமான கணனித் தேவைகளுக்கும்

DCP Online UPS 1KVA~10KVA 2 Years Warranty With Battery

EPSON EXCEED YOUR VISION

MULTIMEDIA PROJECTOR · COLOR PRINTER · DOT MATRIX PRINTERS

TrustPort Antivirus Internet PC Security

Multi SIM Dongule

| Assemble Computer | Option I | Option II | Others |
|---|---|---|---|
| Processor | 2.7GHz | 2.7GHz | DDR I Ram |
| Mother Board | Asus G31 | Asus G31 | IDE HDD |
| Ram | 1GB | 1GB | LCD TV Combo |
| Hard Disk | 500GB | 320GB | & |
| DVD Writer | Samsung | Samsung | |
| Monitor | 19"LCD | 15"LCD | |
| Key Board/Mouse | PS/2 | PS/2 | Cartridges |
| UPS | DCP | DCP | Ribbon |
| Casing | Power Logic | Power Logic | |
| Amount | 50,400.00 | 47,850.00 | Toner |

WITH PC INTERNET SECURITY

D-Link Building Networks for People — ADSL/ Broadband Routers ›› 03 years warranty & Other Net work items

## திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். ⟷ கிளிநொச்சி & வவுனியா

DHL WORLDWIDE EXPRESS

# திருமுருகன் கொம் நெற்

உகை நாடுகளுக்கு ஆகாய கடல் வழி மார்க்க பொதிகள் சேவை

DHL விரைவு · பாதுகாப்பு · நம்பகத்தன்மை DHL

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

நாட வேண்டிய முகவரி

259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06

› 46. [illegible] வீதி, திருநெல்வேலி › 5, திருநகர் வீதி, கிளிநொச்சி
› [illegible] › 44, மில் றோட், வவுனியா

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம் பெறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

## டயர்களை எரித்து போக்குவரத்தைத் தடுத்தனர்

கண்டி, ஒக்.17

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பேராதனை கலகா சந்தியில் பஸ்களை தடுத்து நிறுத் தியும், டயர்களை எரித்தும், வீதியில் சென்றோரை தடுத்து நிறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வியாழக்கிழமை கொழும்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் தாக்கியமைக்கு எதிராகவும், 26 மாணவர்கள் கைது செய்யப் பட்டமைக்கு எதிராகவுமே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது.

பேராதனைப் பொலிஸாரும், கண்டி பொலிஸாரும் அவ்விடத்துக்கு வந்தபோதும், மாணவர்கள் பிரதான வீதியில் செல்லும் பஸ்களைத் தடுத்து நிறுத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளைத் தடைசெய்யும் விதத்தில் மரக்குற்றிகளைப் போட்டனர்.600 மாணவர்கள் வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## உதயனின் வெள்ளி விழா கூடைப்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.17

'உதயன்' நாளிதழின் வெள்ளிவிழாவையொட்டி நடைபெற்று வரும் இருபாலருக்கும் இடையிலான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற உள்ள ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:

வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி வி.க. எதிர் பட்டபிளை வி.க. (பிற்பகல் 3 மணி).

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றவுள்ள ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) வி.க. எதிர் ஓல்ட்ஸ்கோட்ஸ் (பிற்பகல் 3 மணி), சென்றலைட்ஸ் (புறுஸ்) வி.க. எதிர் ஜெனியன்ஸ் வி.க. (பிற்பகல் 4 மணி).

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பிரதாயபூர்வமாக அலுவலகம் திறக்கப் பட்ட பின்னர், தமிழரசுக் கட்சியின் செயற்குழு அங்கு கூடவிருக்கிறது. இன்றுள்ள அரசியல் நிலைமை தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்றக் குழுவும் நாளை புதிய அலுவலகத்தில் கூடி எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயவிருக்கிறது.(ஒ-ஐ)

அன்பார்ந்த சிறுவர்களே
உங்கள் அபிமான
சிறுவர் கதிர்
நாளை வெளிவரும்

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி தாம் கூட்டியுள்ளதாக தவிசாளர் எம்.பயிஸ் தெரிவித்தார். கிழக்கு மாகாண சபையில் ஏற்கனவே இச் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்ட போது, ஆளும் தரப்பின் எதிர்ப்பால் வாக்கெடுப்பு இன்றி அச்சட்டமூலம் மீதான விவாதம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், கிழக்கு மாகாண சபையில் இந்தச் சட்டமூலம் நாளை மறுதினம் மீண்டும் சமர்ப்பிக்கப்பட உள்ளது. மீண்டும் நாளை மறுதினம் அச்சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படும்போது, அந்தச் சட்டமூலத்தை எதிர்ப்போம் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையில் ஆளும் கட்சியில் 20 உறுப்பினர்களும் எதிர்கட்சியில் 17 உறுப்பினர்களும் உள்ளனர். ஆளும் கட்சி உறுப்பினர் சிலரை தம்பக்கம் இழுத்து சட்டமூலத்தை நிறைவேற்ற எதிர்த்தரப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாவது சட்டமூலத்தை நிறைவேற்ற முழு முயற்சியில் அரச தரப்பினர் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கிழக்குமாகாண சபையில் இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படும் பட்சத்தில், அடுத்த கட்டமாக நாடாளுமன்றத்தில் அதை நிறைவேற்றி விடலாம் என அரசு தரப்பு நம்புகிறது.

இதற்கிடையில் - இந்தச் சட்டமூலம் தமிழ் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் என்பதால் எதிர்ப்பதாக முதலமைச்சர் சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார் (அ-ஐ)

## எயர்ரெல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை திங்கட்கிழமை வடக்கில் கால் பதிக்கிறது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் தனது சேவையை அந்த நிறு வனம் ஆரம்பிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் நாளை காலை 6 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் 434, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தனது அலுவலகத்தை 'ஏயர்ரெல்' நிறுவனம் வைபவரீதியாத் திறந்து வைத்து உரிய பணிகளை ஆரம்பிக்கும். (அ-ஐ)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மக்களின் வரலாறு, அவர்கள் அனுபவித்துவரும் இன்னல்கள், அவர்களின் அபிலாஷைகள் ஆகியன இந்தச் சாட்சியங்களில் இடம்பெறவுள்ளன.

இந்த ஆணைக்குழு சமர்ப்பிக்கப் போகும் சிபாரிசுகள் நடைமுறைக்கு வரும் சாத்தியம் இல்லாதபோதும், தமிழர் தரப்பின் வரலாற்று ஆவணமாக தங்களின் சாட்சியங்கள் அமையும் என்று கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-ஐ)

## வெளிமாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா திறந்துவைத்தார்.

இந்த நிலையத்தில் மின் வெளிச்சம் உட்பட ஏனைய அடிப்படை வசதிகள் அனைத்தும் ஒரு வாரத்தில் செய்து தரப் படும் என்று மேயர் அங்கு தெரிவித்தார்.

இந்த பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ்களில் பயணம் செய்பவர்கள் இங்கு வந்து சேரக்கூடிய வகையில் உள்ளூர் பஸ்சேவைகள் ஒழுங்கு செய்யப்படும் என்று அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் யாழ்.மேயரின் செயலாளர் குபற்குணராஜா, மாநகரசபை வருமான வரி உத்தியோகத்தர் எஸ்.ஜெயராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்று 22 பஸ்கள் இங்கிருந்து புறப்பட இருந்ததாக பஸ் உரிமையாளர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

வடமாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள், மீள் குடியேற்றப்பட்டுள்ள மக்களின் வாழ்வியலைக் கட்டியெழுப்புவது தொடர்பான விடயங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீள்குடியேற்றம் செய்வது போன்றவை குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்தக் கூட்டத்தில் வடமா காண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள், நாடாளுமன்ற உறுப் பினர்கள், அமைச்சர்கள், பிரதேச செயலகள், திணைக்களத் தலைவர்கள் போன்ற 800இற்கு மேற்பட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மீளாய்வுக் கூட்டம் தொடர்பான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகி விட்டன - என்றார் அரச அதிபர். (ஒ-9)

### திருத்தி வாசிக்கவும்

நேற்றைய உதயனில் 4ஆம் பக்கத்தில் வெளியான ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தின் பதவி வெற்றிட விளம்பரத்தில் 'சங்கப் பணிப்பாளர்களுக்கு வா தெல்லை கவனிக்கப் படமாட்டாது' என்று வெளியாகியிருப்பதை 'சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது' என்று திருத்தி வாசிக்கவும்.

## அரியாலையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்த அடிப்படையில் தென்மராட்சிப் பகுதிக்கு விநியோகம் செய்துவந்த அவர் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் அங்கு சென்றிருந் தார். விநியோகப் பணியை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த போதே அவர் விபத்தில் சிக்கினார்.

அரியாலை, நெடுங்குளம் பகுதியில் ஜெயபாரதி வாசிக சாலைக்கு முன்பாக அவர் வந்து கொண்டிருந்தபோது எதிரே வந்த பஸ்ஸை விலத்தி வரும் போது பின் னால் வந்து கொண்டிருந்த யாழ்- திருமலை போக்குவரத்துச் சபை பஸ்ஸுடன் மோதுண்டார்.

அவரின் வலதுகால் இடுப்புடன் கழன்றது. மார்பு, தலைப் பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டன.

அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட அவர் வெளிநோயாளர் பிரிவில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, அங்கு அவர் மரணமானார்.

மரண விசாரணையின் பின்னர் நேற்றுப் பிற்பகல் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. (ஒ-ஐ-319)

## வலி.வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயவர்த்தன, மனித உரிமைகள் இல்லத்தைச் சேர்ந்த அருந்தவநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில், நலன்புரி முகாம்களில் இருக்கும் பொது மக்களின் அடிப்படை வசதிகள், பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் வெளி மாவட்டங்களின் முதலீட்டாளர்களின் முதலீடுகளை எவ்வாறு பெறுதல் என்பன தொடர்பாகவும் விவாதிக்கப் பட்டது. அத் துடன் போர் முடிவுற்ற நிலையில் மீள் குடியேற்றம் நடைபெற்ற இடங்களில் உள்ள மக்களின் அடிப்படை வசதிகள் போதுமானதாக உள்ளனவா, அவற்றை எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பாகவும் அங்கு [illegible] (ஒ-ஐ-311-313)

### தேவை

யாழ்.நகரில் இயங்கும் புடைவை நிறுவனத்துக்கு பெண் உதவியாளர்+ தேவை. வியாபாரம் பழக விரும்பும் ஆண், பெண்கள் தேவை. தொடர்பு: 077 2850753

# மரண அறிவித்தல்கள்

## பரமசாமி ஜெயந்திரன் *(நந்தன்)*

நுணாவில்மேற்கு ,சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி ஜெயந்திரன் (நந்தன்) நேற்று (16.10.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி-தவமணி தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற வீரசிங்கம் தனலட்சுமி தம்பதியரின் மருமகனும் தயாளியின் அன்புக் கணவரும் சிந்துஜன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவன்), காஞ்சனா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி)ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தநாயகி நகுலேஸ்வரன்(அதிபர், நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை), தர்மேந்திரன், செல்வமணி (சுவிஸ்), காலஞ்சென்ற அருள்மணி,கிரிஜா(கனடா),சிவநேந்திரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு சகோதரனும்,சர்வேஸ்வரி, நற்குணராஜா, சச்சிதானந்தன் ,ஜசிந்தா , தர்மேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பரஞ்சோதிநாதன்(கனடா)மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2010) திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காந்தாளம்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செ.நகுலேஸ்வரன் (மைத்துனர்)
T.P:0776062746

## வைத்திலிங்கம் இரத்தினம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இரத்தினம் நேற்று (16.10.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் கோண்டாவில் குமரகோட்டத்தைச் சேர்ந்த பராசக்தியின் அன்புக் கணவரும் மீரா (ஆசிரியை, பாலிநகர் ம.வி.), தமிழினி (ஆசிரியை, மு/மல்லாவி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது தற்காலிக இல்லமான அளவெட்டி மத்தியில் நடைபெற்று, மு.ப.10 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி மத்தி,*
*(கும்பளாவளை வீதி), அளவெட்டி.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

17-10-2010
விஜய தசமியன்று சங்கானையில்
உயர்கல்விக்கான ஒரு ஆரம்பம்
உங்கள் ஊரிலேயே பிரித்தானிய கல்வித்தகமை
October 31ந்கு முன் பதிவு செய்பவர்களுக்கு
பதிவுகளுக்கு அழையுங்கள்: 021 7 429 060
முதல் 50 மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில்கள்
IDM Pre University College-Chankanai
After A/L Earn a UK Qualification
SPECIALIZED DEGREE FOUNDATION PROGRAMMES IN ICT & MANAGEMENT
edexcel advancing learning, changing lives ACCREDITED
IDM Diploma In ICT
edexcel advancing learning, changing lives ACCREDITED
IDM Diploma In Business Management
DIPLOMA SRI LANKA'S NO.1 PROGRAMMES
IDM
IDM Pre University College
Chankanai
30,Main Street,Chankanai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவாந்துறைப் படிப்பகம்
பாநகர சபை. யாழ்ப்பாணம்



# நீதித்துறை வரைவுக்குள் இராணுவ நீதிமன்றம் உள்ளடங்குகிறதா என்பது குறித்து ஆராய்வு

கொழும்பு, ஒக்.17

நாட்டில் நடைமுறையிலுள்ள நீதிமன்ற வரைபினுள் இராணுவ நிதின்றம் உள்ளடங்குகிறதா? இல்லையா? என்பது சம்பந்தமாக சட்டமா அதிபர் ஆராய்ந்து வருகிறார் என சட்டமா அதிபர் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசின் உயர் மட்டத்திலிருந்து விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையொன்றுக்கு அமையவே உண்மையை நிலையை முன்வைப்பதற்கு செயற்பட்டு வருகிறார் எனவும் அத்தகவல் மேலும் தெரிவிக்கின்றன.

இராணுவ நீதிமன்றத்தின் மூலம் அனைத்துக் குற்றங்களுக்கும் குற்றவாளியாக்கப் பட்டு முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா தொடர்பாக 30 மாத கால கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதோடு, அந்த நிலைப்பாட்டின் மீது அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் இழக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் மற்றும் தேர்தல் ஆணையாளரும் முடிவு செய்துள்ளனர்.

இந்த நிலையில் இராணுவ நீதிமன்றம் என்பது நடைமுறையிலுள்ள நீதிமன்றத் தொகுதியுடன் இணைந்ததொன்றே என்பதாக அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் போன்றே அரச தரப்பு சட்ட நிபுணர்களும் வாதிடுகின்றனர்.

பிறிதொரு சிரேஷ்ட சட்ட வல்லுநர்கள் உள்ளடங்கிய தரப்பொன்று இராணுவ நீதிமன்றமானது அரசமைப்பில் குறிப்பிட்டுள்ள எந்தவொரு நீதிமன்றத் தொகுதியிலும் உள்ளடங்கியதல்ல எனவாதிட்டு வருகிறது.

மேலும் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதோவொரு நீதிமன்றம் என்பதில் அர்த்தப்படுத்திக் காட்டப்பட்டுள்ளவை மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள், மேல் நீதிமன்றங்கள், மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் மற்றும் உயர்நீதிமன்றம் என்பவைகளே என்பது அவர்களதுகருத்து நிலைப்பாடுகளாகும். (ஐ-22)

## வெலிக்கடைச் சிறை நவராத்திரி பூசையில் சரவணபவன் எம்.பி.

கொழும்பு, ஒக்.17

வெலிக்கடைச் சிறைச் சாலையில் நேற்று இடம்பெற்ற நவராத்திரிப் பூசையில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார்.

சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சரவணபவன் கலந்துகொண்டு கைதிகளுக்கு பிரசாதம் வழங்கினார். (ஒ-ஐ)


**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A/L - Day Class கணக்கீடு
திரு.A.P. பகீரதன் - B.B.A. (F.M. Spl.)
* வார நாள்களில் வகுப்புக்கள் (Mon, Tue, Thur, Fri : 10-12)
* மாலை நேர Paper Class (Mon, Wed : 4 - 5)
* 10 தொடர் மாதிரிப் பரீட்சைகளும் அவற்றுக்கான கருத்தரங்குகளும்.
* பாடம் மாறிக்கற்போர், வெளிமாவட்ட மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்.
* இலகுவான கற்பித்தல், தனிப்பட்ட கவனம்.

ஆரம்பம் : 18.10.2010 (Mon) 10 A.m
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax:222 4460

MONITOR FOR SALE
Brand New CRT17" Flat Screen Monitor =Rs.6250/=
GADMEI Combo TV Box with Remote Control = Rs. 3500/=
என்பன உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.
DDR I 512 Kingston Ram - Rs. 2250/=
(கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்)

**New Medi Care Hospital**
யாழ். பிரபல கண் சத்திரசிகிச்சை நிபுணர் சாவகச்சேரி நியு மெடி கெயர் மருத்துவமனையில் பிரதி திங்கட்கிழமைகளில் காலை 8.00-12.00 மணிவரை நோயாளர்களை பார்வையிடுவார். கண் நோய் தொடர்பான வைத்திய ஆலோசனைகளையும்,சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
No.32, Kachchai Road, Chavakachcheri.
T.P.: 021 3735505- 021 4920949

**கலைமகள் அழகு நிலா**
பயிற்சி நிலையம்



ஏழு நாள்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பயிற்சி கற்றுக்கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக்கூடிய தொழிலுமாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன் முறையாகும்.

பயிற்சிகள்
* Facial (எட்டு வகை)
* Threading
* Pimple Treatment
* Waxing
* Hair Stretening (2 வகை)
* Hair Perming
* Hot Oil massage
* Hair Cutting
* Hair dye
* Hair Colouring
* Pedeicure manicure
* கறுப்புக்காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
* Bleaching
* Bridal make up (6வகை)

பயிற்சிக் கட்டணம்: 4000/=, பயிற்சி ஆரம்பம்: 20.10.2010, பயிற்சி நேரம்: மு.ப 9.30மணி-பி.ப. 4 மணிவரை.
கலைமகள் அழகு நிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0773719071, 0214908151

**கருங்கல், ஆற்றுமண் தேவை**
முக்கால் இஞ்சி கருங்கல் சல்லி, ஆற்று மணல் உடன் தேவை. வழங்கக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
0718687779

**புலமை கல்வி நிறுவனம்**
புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
2011 இல் தரம்-5 - பி.ப.1.30
2011 இல் தரம்-4 - பி.ப.2.30
காலம்: 17.10.2010
ஆசிரியர் திரு.க.கலாமோகன் (B.A, Dip.in.Teach)
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
இணுவில் வீதி [பாமசி லேன்], மானிப்பாய்.
(104528)

**அட்சயா**
உன்னதமான வாய்ப்பு | விரைவான பயிற்சி
அழகுக்கலை பற்றிய அனைத்து விடயங்களையும் கற்றுக்கொள்ளவும் ஓர் வியூட்டி பார்லர் ஆரம்பிப்பதற்கு ஏற்ற முறையிலும் பயிற்சி அளிக்கப்படும்.
1) பேசியல் 2) மேக்கப் 3) கெயாஸ் டைல் 4) பொக்கே செய்தல் 5) தலைமுடி அயன் பண்ணுதல் 6) தலைமுடி சுருட்டுதல் 7) பிளவுஸ் கட்டிங் 8) றிச் கேக், சாறி வேக் 9) பகுதிநேர வேலை வாய்ப்பு
மேற்படி பயிற்சிக்கட்டணம் 7,500/= மட்டுமே. பயிற்சி 15 நாள்கள் தொடர்ந்து நடைபெறும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
* பேசியல் மேக்கப் பொருள்கள் விற்பனைக்குண்டு (ஓரிபிளேம்)
அட்சயா,
461, நாவலர் றோட், அத்தியடிச்சந்தி, யாழ்ப்பாணம்.
(104744)

**U.S. DEPARTMENT of STATE**
2012 ஆம் ஆண்டுக்கான அமெரிக்கன் லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
திருமுருகன் கொம்நெற்
259, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0212227835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

**பாக்யா இசைப்பயிலகம்**
மணியர்பதி வீதி கொக்குவில் மேற்கு யாழ்ப்பாணம்.
விஜயதசமி அன்று இசை, இசைவாத்திய வகுப்புக்கள் ஆரம்பம்
மிருதங்கம், ஓகன் காலை 9.00 மணி
வயலின் சங்கீதம் மாலை 4.00 மணி
பாக்யா காகிதாதிகள்
121, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
தொலைபேசி 021 321 8382 0770366241

**நகைக் கடைத் திறப்பு விழா**
நிகழும் விகிர்தி வருடம் 31ஆம் நாள் இன்று [17.10.2010] ஞாயிறு காலை 9.02 மணி தொடக்கம் 10.32 வரையுள்ள சுப வேளையில் எம்மால் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்ட நவாலியிலுள்ள
பொன் சோமசுந்தரம் நகை மாடம்
திறந்து வைக்கப்படவுள்ளது.
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
சோ.விமலச்சந்திரன் (கிளி).
நவாலி கிழக்கு. (சி/571979)

விஜயதசமியை முன்னிட்டு பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு விசேட கட்டணக்கழிவு

**Spoken English with Grammar**
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
25-10-2010
Batch-3 09.00am-10.30am & 11.00am - 12.30pm
Batch-4 02.00pm-03.30pm & 04.00pm-05.30pm
BRITISH COLLEGE OF HIGHER STUDIES (BCHS)
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

**NALIN INFORMATION TECHNOLOGIES Pvt ltd**
விஜயதசமி தினத்தை முன்னிட்டு விசேட விலைகளில் கணனிகள்

| | | | |
|---|---|---|---|
| PROCESSOR | - 2.70 GHz DUAL CORE | PROCESSOR | - 2.70 GHz DUAL CORE |
| MOTHER BOARD | - ASUS G31 | MOTHER BOARD | - ASUS G31 |
| RAM | - KINGSTON 2GB (800) | RAM | - KINGSTON 2GB (800) |
| H.D.D | - 500 GB SAM/ SEA/ HIT | H.D.D | - 500 GB SAM/ SEA/ HIT |
| DVD WRITER | - SAMSUNG | DVD WRITER | - SAMSUNG |
| KEY BOARD | - MULTI LANGUAGE | KEY BOARD | - MULTI LANGUAGE |
| MOUSE | - SQUTE | MOUSE | - SQUTE |
| UPS | - POWER iii | UPS | - POWER iii |
| MONITOR | - 16" VIEW SONIC | MONITOR | - 19" HP COMPAQ |
| CASING | - SQUTE/ POWERLOGIC | CASING | - SQUTE/ POWERLOGIC |
| | 51500/- | | 53500/- |

கணனியை பெற்றுக்கொள்பவர்களுக்கு 3வருட உத்தரவாதம் வழங்கப்படுவதுடன் FREE COMPUTER TABLE, HEAD PHONE, HEAD REDER, WEB CAM (8 MB) வழங்கப்படும்
மேலும் கணனி உதிரிப் பாகங்களில் மாற்றம் செய்யும் போது மேலும் விலை குறைக்கப்படும்
HP LAPTOP 620 - CPU 2.1 GHz \ RAM 2GB DDR3 \ HDD 320 GB \ BLUETOOTH WIFI \ SCREEN 15.6" \ WEB COM 2MB > 69,000/-
LAPTOP கணனிகளிற்கு 1 வருட உத்தரவாதம் வழங்கப்படுவதுடன் FREE HP BAG, HEAD PHONE, KASPERSKY என்பன வழங்கப்படும்
D LINK Router - 4900/- (3 year W)
TP LINK Router - 4500/- (1 year W)
MULTI SIM DONGLE 7.2 MBPS - 6250/- 1 year warranty
NALIN information Technologies Pvt Ltd
195/4 PARAMESWARA JUNCTION TP:0212221166, 0777667974


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி, உப தலைவர், சைவ வித்தியா விருத்திச்சங்கம், திருநெல்வேலி, முன்னாள் தலைவர், ப.நோ.கூ.ச., சாவகச்சேரி)



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் நேற்று (16.10.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து கணபதிப்பிள்ளை-அன்னலஷ்மி தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான Hindu Board இராஜரட்ணம்-செல்லம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற யோகாம்பாளின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும் யசோதா, தயாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணமூர்த்தி (பொறியியலாளர், கொழும்பு), நவக் குமாரன் (கொமர்ஷல் வங்கி, ஸ்ரான்லி வீதிக்கிளை) ஆகியோரின் மாமனாரும் உபேந்திரன், மாதங்கி, கிருத்திகன், தாரங்கி, தனுரங்கி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற திருமதி ஞானசௌந்தரி கந்தையா மற்றும் திருமதி ஞானபூங்கோதை வைரவிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் சரசாலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அயோத்தியா",
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

தகவல் :
ந.நவக்குமாரன் (மருமகன்).
(104771)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.அச்சுவேலி
புனித தெரேசாள்
மகளிர் கல்லூரி
மாணவியும்
ஒட்டகப்புலத்தைச் சேர்ந்த
**தேவா- ஜெயா**
தம்பதியரின் புதல்வியுமான
செல்வி

**தே.சரோன் கபோனா**

2010 புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவரை வழிகாட்டிய பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அம்மம்மாவின் மரணம் தந்த அதிர்ச்சியின் மத்தியிலும் மனவுறுதியுடன் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த கபோனாவுக்கு எங்கள் குடும்ப உறவுகள் சார்பாக வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**வாழ்த்துவோர்:**
**சந்திரன்- சுசி குடும்பத்தினர்**
லண்டன்



# "சுமையெல்லாம் சுகமாக..."







ஜப்பானின் (HONDA) நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் உற்பத்தியினை ஆரம்பித்த ஜாலிங் மோட்டார் சைக்கிள்களை இப்போது, மிகக்குறைந்த விலைகளில் சகல அபான்ஸ் கிளைகளிலும் அனுமதிபெற்ற முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம். அது போன்றே நம்பிக்கை நிறைந்த அபான்ஸ் உத்தரவாதத்தையும் விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவையையும் உங்களுக்கு வழங்க அபான்ஸ் தயாராகவுள்ளது.

JIALING

மட்டக்களப்பு - 0652228001. யாழ்ப்பாணம் (திருநெல்வேலி) - 0777684068. வவுனியா - 0242224878. புத்தளம் - 0773074952. சுன்னாகம் - 0212240021.
நிபந்தனைக்குட்பட்டது. மேற்கூறப்பட்ட எரிபொருள் செயற்பாடு விதிமுறைகளுக்கு அமைவானது.

Abans



**இலங்கையில் மிகப்பெரிய இயந்திரத் துறையில் சிறந்த ஆக்கத்திறனைக் கொண்ட நிறுவனத்தில் இணைந்து கொள்ள...**

சிறந்த முறையில் முன்னோக்கிப் பயணிக்கும் குழுவில் சேர்ந்து கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம்..

## பயிலுனர் விற்பனை பிரதிநிதிகள் / விற்பனை லிகிதர் பதவிகளுக்கான விண்ணப்பம்

மேற்படி விண்ணப்பதாரிகள் 24 வயதிற்கு குறைவானவர்களாகவும், க.பொ.த உயர்தரப்பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அதேவேளை க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களுக்கு திறமைச்சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். விற்பனையை அதிகரிக்கும் வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படும் மனப்பான்மை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் ஓரளவு அறிவு இருத்தல் அவசியமாகும்.

குறிப்பிட்ட விண்ணப்பதாரி வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் ரயர் தொடர்பான விடயங்களிலும் கூடுதல் ஆர்வம் உள்ளவராக இருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வாகன (மோட்டார் வாகனம் / மோட்டார் சைக்கிள்) ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் ஒன்றையும் விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும். அதேவேளை நாட்டின் எந்தப் பாகத்திலும் பணி புரியக்கூடியவராகவும் கள அலுவல்கள் தொடர்பில் நீண்ட தூரம் பயணிக்க கூடியவராகவும் இருக்க வேண்டும். தமிழ் மொழியில் செயலாற்றும் தன்மை இருத்தல் மேலதிக அனுகூலமாக அமையும். யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அழுத்தங்களுக்கு மத்தியிலும் செயலாற்றும் தன்மை, உயர் மட்டத்திலுள்ள ஒழுக்கம், நேர்மை மற்றும் ஒருங்கிணைப்புத் தன்மை ஆகியன, விண்ணப்பதாரி தெரிவுக்கான முக்கிய காரணிகளாக அமையும். இலத்திரனியல் ரீதியாக அமைந்துள்ள வலையமைப்பு மற்றும் ஒருங்கிணைப்புத் தொகுதி சுற்றாடலில் சுயமாக பணிபுரியக் கூடிய தன்மை அவசியமாகும்.

பூரண தகுதியுடைய விண்ணப்பதாரிக்கு, அவரது அனுபவம் மற்றும் தகுதிகளின் அடிப்படையில் சிறந்த சம்பள கொடுப்பனவும், இந்த துறையில் தம்மை விருத்தி செய்து கொள்வதற்கான பிரத்தியோக வாய்ப்புக்களும் காத்திருக்கின்றன.


மேற்குறிப்பிட்ட தகுதிகளையும், தகைமைகளையும் நீங்கள் கொண்டிருந்தால், அதேவேளை எமது எதிர்பார்ப்புக்களை திருப்தி செய்யக் கூடிய நம்பிக்கை உங்களிடம் இருந்தால், தொலைபேசி இலக்கங்களுடன் கூடிய உங்களது சுய விபரம், உங்களைத் தெரிந்த உறவு இல்லாத இரண்டு பிரத்தியோக பிரமுகர்களது விபரங்களுடன் எமக்கு அனுப்பி வையுங்கள். கடித மேலுறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு கீழ் காணும் முகவரிக்கு உங்களது விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்.

பிரதி முகாமையாளர் - மனித வள
**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**
நிறுவன பதிவு இலக்கம் PB270
த.பெ. 1909, கொழும்பு.



# அதிக உத்தரவாதம் என்பதால்

## எமக்கு விடுதலை! எமக்கு விடுதலை! எமக்கு விடுதலை!




**3 வருடகால உத்தரவாதம் கிடைப்பதால் - உங்களுக்கு விடுதலை**

நம் நாட்டு விவசாயிகளின் விடுதலைக்காக இலங்கையில் முதல் தடவையாக 3* வருடகால உத்தரவாதத்துடன் ஃபாம்ட்ரக் உழவியந்திரம் வழங்கப்படுகிறது. நவீன யுனுஜ தொழில்நுட்பத்தில உருவாக்கப்படும் ஃபாம்ட்ரக், எரிபொருள் சிக்கனமும் அதிக சக்தியும் எஞ்ஜினின நீடித்த ஆயுட் காலமும் கொண்டது.

FARMTRAC ஹேலீஸ் அக்ரோ

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 077 363 3713, 077 438 5650

*நிபந்தனைகளுக்கு உட்படும்



LOTUS BRAND Plastic Bucket

Hotline:
038 2232962
077 7736518

# எந்தவொரு வாளியையும் வெற்றிகொள்ளும் சக்தி




குறைந்த விலையில் நீடித்த பாவனை, இரும்பு போன்று தகராது துருப்பிடிக்காது, பாவனைக்கு இலகுவானது லோட்டஸ் பிளாஸ்டிக் வாளிகள் உறுதியான வாளிகள்

லோட்டஸ் பிளாஸ்டிக் வாளிகள் பின்வரும் வேலைகளுக்கு மட்டுமன்றி ஏனைய சகலவித தேவைகளுக்கும் பயன்படுத்த முடியும் என்பதே அதன் விசேட தன்மையாகும்.

• கட்டட வேலைக்காக • விவசாயத் தேவைகளுக்காக • தொழிற்சாலைகளின் உபயோகத்திற்கு

விற்பனை மற்றும் விநியோகத்தர்கள்
Keselwatta Agencies (Pvt) Ltd.
224, Diggala Road, Keselwatta, Panadura, Sri Lanka.
E-mail: sales@keselwattagroup.com / www.keselwattagroup.com
KAL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










noolaham.org | aavanaham.org